www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

Jude

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஒக்.25—31,1998

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 280

## பேரினவாதத்தின் ஐக்கிய வியூகம்

## சந்திரிக்கா + ரணில்



## திகைக்க வைக்கும்

# பெண்புலிகள்



அசத்தலான ஆரம்பம்

## உதட்டில் ஒரு மச்சம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## இன அடையாளச் செய்திகள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'தமிழர் ஒருவர் கைது.'
'தமிழர்கள் கைதாகினர்.'

குற்றச் செயல்களோடு
சம்பந்தப்பட்டவர்கள்
தமிழர்களாக இருந்தால்,
இன அடையாளத்தோடுதான்
அரச பிரசார சாதனங்கள்
செய்தி வெளியிடுகின்றன!

வரப்பிரகாஷ்
ராக்கிங் காரணமாக
பலியானபோது,
யாழ் தமிழ் மாணவர்களே
காரணம் என்று
அழுத்தி அழுத்தி கூறின
அரச பிரசார சாதனங்கள்!

சமீபத்தில்
கொழும்புக் கடற்கரையில்
மும்பை பெண்மணி
பாலியல் வல்லுறவுக்கு
உள்ளாகிப் பிணமானார்!

அக் கொடூரம் தொடர்பாக
கைதானவர்கள்
பற்றிக் கூறும்போது,
'நான்குபேர் கைது'
என்று பொதுவாகத்தான்
அரச பிரசார சாதனங்கள்
செய்தி வாசித்தன!

'நான்கு
சிங்களவர்கள் கைது'
என்று கூறுவதற்கு
இன கௌரவம்
இடம் கொடுக்கவில்லை!

சமீபத்தில்
களுத்துறைச் சிறையில்
இருந்து கைதிகள் சிலர்
தப்பியோடினார்கள்!

ரூபவாஹினியில்
அது தொடர்பான செய்தியில்
'கைதிகள் சிலர் தப்பினர்'
என்று பொதுவாகக் கூறினர்!

அவர்கள் தமிழ்க் கைதிகளாக
இருந்திருந்தால்
'தமிழ்க் கைதிகள்
தப்பியோட்டம்!'
என்றுதான் கூறப்பட்டிருக்கும்!

குற்றச் செயல்கள்,
வக்கிரச் செயல்களில்
சம்பந்தப்படுபவர்களை
சிங்களவர்கள் என்று கூறுவது
கௌரவக் குறைச்சல்
என்று கருதுபவர்கள்,
தமிழர்களின் கௌரவத்தை
சேதப்படுத்த மட்டும் தயங்குவதில்லை!

அரச பிரசார சாதனங்களில்
தமிழ்ச் செய்தி அறிக்கை,
சிங்களச் செய்தி அறிக்கையின்
மொழி மாற்றமே
என்பது குறிப்பிடத்தக்கது!

சிங்களச் செய்தி
அறிக்கைகளில் உள்ள
தமிழருக்குப் பாதகமான
விடயங்களை
மாற்றம் செய்யக்கூட
தமிழ்ப் பிரிவுகளால்
முடிவதில்லை!

அப்படிச் செய்தால்
'புலி' என்று
முத்திரை குத்தப்பட்டுவிடும்
என்று அச்சம்!

சிங்களச் செய்தியில்
'யாப்பா பட்டுன'
என்று இருந்தால்
அது தமிழ்ச் செய்தியிலும்
அப்படியே கூறப்படும்!

அரச பிரசார சாதனங்களும்
இனவாதத்தில் சிக்கியுள்ளன!

தமிழ் பேசும் மக்கள்
தொடர்பான செய்திகளில்
பொறுப்பற்ற தன்மையும்,
தமிழ் நிகழ்ச்சிகளில்
ஏனோதானோ மனோபாவமும்
அதிகரித்து வருகின்றன!

எப்போதாவது
இன ஒற்றுமை பற்றியும்
போர் அழிவு பற்றியும்
நாடகங்கள் போடுவது
மட்டும் பரிகாரமாகாது!

அந்த நாடகங்கள்கூட
அலட்சியப் போக்கிலேயே
ஒளிபரப்பாகின.
இவையெல்லாம்
எடுத்துக்கூறியோ

இடித்துக் கூறியோ
தீரப்போகும் விடயங்களல்ல!

தமிழ் பேசும் மக்களுக்கு
அவர்களது தாயகப் பிரதேசத்தில்
சுயாட்சி அதிகாரம்
இருக்குமானால்
அவர்கள் தமக்கான
ஒலி- ஒளி பரப்புக்களை
நடத்திக் கொள்வார்கள்!

தற்போதைய அரச
ஒலி- ஒளிபரப்புக்களில்
நேரத்தை அதிகப்படுத்த
கேட்டுக் கொண்டிருப்பதும்,
இனவாதத்தை நிறுத்தக்
கோருவதும்
செவிடன் காதில்
ஊதிய சங்குதான்!

நடைமுறைகளே
தக்க ஆசான்கள்!
இனிப்பான
பேச்சுக்களல்ல!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## மனத்தூய்மை

# ஆன்மீகம்



கலிக்கம்பர் என்று ஒரு நாயனார். இவர் பெண்ணாகடம் என்னும் நகரைச் சார்ந்தவர். இவர் அடியார்களுக்கு அமுதளிக்கும் தெய்வத் திருப்பணியை வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு திகழ்ந்தார். வரும் அடியார்களின் திருவடிகளை நீரால் சுத்தம் செய்து உபசரித்து அமுது படைப்பார்.

ஒருநாள்-வந்த அடியவர்களில் ஒருவர் இவரிடம் வேலைக்காரராயிருந்து மாறுபட்டு வெளியேறியவர். அவரைக் கண்டவுடன், கலிக்கம்பரின் மனைவியார் காலந்தாழ்த்தினார். தம் மனைவியின் நினைவை உணர்ந்த கலிக்கம்பர் தம் வாளால் மனைவியின் கையைத் துணித்தார். பிறகு தாமே அடியாருக்கும் பிறர்க்கும் நீர் வார்த்துக் கால்களைக் கழுவி உபசரித்தார். வந்த அடியார்க்கு எல்லாம் தாமே உணவு படைத்தார்.

'மனந்துயரார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க்கு
இல்லைநன் றாகாவினை" என்கிறது குறள்.

இனம் தூய்மையாகப் பெற்றவர்க்கு, அவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ் முதலியவை நன்மையாகும். மனம் தூய்மையாக உள்ளவர்க்கு நன்மையாகாத செயல் இல்லை.

தொகுப்பு:- செல்வி. ஜெயந்திசிதம்பரம், புத்தளம்.

## மௌனம் கொள்ளுங்கள்!

மௌனமாய் இருப்பது சற்றுக் கடினம்தான். ஆனால், இது இறை நேசர்களுக்கு கைவந்த கலையாகும். அந்தக் கலையின் வலையில் நாம் வீழ்ந்து விட்டோமானால் இகபரத்தில் நம் நிலை உயரும். இந்த நாவு பொல்லாதது. ஆறு அங்குல நீளமுள்ள இந்த நாக்கை ஆரம்பத்திலேயே நாம் அடக்கி ஆளாவிட்டால் ஆறடி நீளமுள்ள மனிதனையும் வீழ்த்திவிடும்!

நரம்பில்லாத நாவால் வரம்பில்லாமல் பேசி வம்புக்கு ஆளாவதைவிட மௌனமாக இருந்து 'அடக்கம் ஆயிரம் பொன் பெறும்' என்னும் பழமொழியை மெய்ப்பிக்கும்படி வாழ்ந்து காட்டிப் பெருமை பெற எண்ணுகிறவர்களே இம்மையிலும் மறுமையிலும் ஈடேற்றம் பெறுவர்.

ஆன்மீக வாழ்வின் தொடக்கமே இந்த அடக்கத்தில்தான் அடங்கியிருக்கிறது. இப்படிப்பட்ட இந்த அடக்கம் பற்றி மௌனத்திற்கு மேலும் மெருகூட்டும் மாண்பு பற்றி நபி (ஸல்) அவர்கள் அருளியதாவது, "நாவின் பத்தினித்தனம் வாய் மூடி மௌனமாய் இருப்பதாகும். வாய்மூடி இருப்பது இஸ்லாத்தின் தலை போன்றதாகும். ஈமானின் பக்தர்களுக்கு இறை நேசமும், கிரீடமும் வாய்மூடி மௌனமாய் இருப்பதாகும். ஒரு ஆலிம் மார்க்க விஷயத்தில் வாய்மூடி இருப்பது குற்றமாகும். அவர் பேசுவது சிறப்பாகும். (அல் ஹதீஸ்)

வை.எம். தாஹிர் கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.277



### பரிசுக்குரிய கவிதை

#### (தே)காலம்

நாடே.....
ஆண்டிக்கோலம்!
நாங்கள்...
இந்தக் கோலம்!

கயல்வண்ணன்-
வவுனியா.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

#### வறுமை!
நிர்வாணம்
அழகுதான்;
ஆடை
இல்லாததால்!!

எஸ். பிரபா-
பதுளை.

#### ஏனிந்த நிலை?
ஊட்டி வளர்த்தவர்கள்
கை விட்டுப் போயினரோ?
வாட்டி வதைப்பவர்கள்
கையிலகப்பட்டுத் தவிப்பதற்கு!

ம. திருவரசுராசா-வவுனியா.

#### வெறும் பேச்சல்ல....
வேவல்வத்தை பிள்ளைகளின்
நிர்க்கதியைப் பாருங்கடா!
வாயினிக்கும் பேச்சகற்றி
நாலுமுழம் தாருங்கடா?

ச. மகாலிங்கம்- வெலிமடை குரூப்,
வெலிமடை.

#### முகவரியற்ற முத்துக்கள்!
முகவரியைத் தொலைத்து,
முகம் காட்ட மறுத்து,
முதுகைக் காட்டி நிற்கும்
பிஞ்சுகளே!
அன்னை-தந்தையற்ற
அனாதைகளுக்கு,
மண்ணே பஞ்சணை!
மரங்களே
மரகதத் தொட்டில்...!

நா. ஜெயபாலன்-பிபிலை.

#### மலையகம்
லயங்களுடன்
எங்கள்
ஆடைகளும்
எரிந்து விட்டன!

எஸ்.பி. பாலமுருகன்-
பதுளை.

#### கேள்வி?
நீங்கள்
ஆயிரம்
பொம்மைகள்
தரலாம்;
ஆனால்-எம்
அன்பு அம்மா
அப்பாவை
யார் தருவார்!

திருமதி புவனேஸ்வரி-பசறை.

#### ராகிங்!
இது போர்
செய்த
ராகிங்!

அ. அச்சுதன்-
சேனையூர்-06.

#### வெட்கம்!
ஊருமில்லை;
உறவுமில்லை;
அகதிகளானோம்!
அணிவதற்கு
துணியுமில்லை;
வெட்கத்திலானோம்!

ரீ.ஜே. அகமத் ஜான்-
திருகோணமலை.

#### வெட்டு
வயிற்றுக்கு
நிவாரண வெட்டு!
உடலுக்கு
நீர் வெட்டோ?

த. நகுலேஸ்வரன்-கல்லடி, மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.280



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 31.10.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.280
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.



அன்பான முரசே!
நீ தரும் அல்பிரட் துரையப்பாவின் 'அரசியல் தொடரி'ல் சத்துருக்கொண்டான், வீரமுனை கிராமம், வந்தாறுமூலை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அழைத்துச் செல்லப்பட்டு மனித வேட்டையாடப்பட்டவர்கள் பற்றி இவ்வளவு காலமும் நான் அறியாமல் இருந்தேன். உன் சேவையால் அறிந்தேன். உடல் சிலிர்க்கிறது.

வடக்கிலே ஒரு செம்மணிப் புதைகுழி. கிழக்கிலே பல செம்மணிப் புதைகுழிகள். எமக்குத் தெரியாமல் இன்னும் பல. எம்மக்களுக்காக துணிந்து பணியாற்றிய பற்றீஷியா லோறன்ஸுக்கு பாராட்டுக்கள்!

கு. தயாழினி,
வாழைச்சேனை.

## கண்களை விற்று சித்திரம் வாங்குவரோ?

இனிய முரசே!
'சோறு வேண்டாம், சுதந்திரம் வேண்டும்' என்றனர். பின்னர் 'சோறும் வேண்டும் சுதந்திரமும் வேண்டும்' என்றனர். இப்போது எலும்புத்துண்டுகள் வீசியெறிந்தால்கூட விழுந்தடித்து தாவுகின்றனர். தமிழ் மக்கள் இந்த நாட்டு சொந்த மக்களல்ல என்று சொல்லப்பட்டபோதுகூட? சுரணையற்று இருந்தவர்கள், தாங்களும் மக்கள் பிரதிநிதிகள் என்று கூறுவது வெட்கக்கேடு. பெற்ற தாயை துகிலுரியும்போதும் பார்த்துக் கொண்டு இருப்பார்களோ? கண்களை விற்று சித்திரம் வாங்கும் இவர்கள் தங்களை ஜனநாயகவாதிகள் என்று கூறிக் கொள்வது விநோதம்.

தி. கார்த்திகேயன், அம்பாறை.

முரசே!
இரத்தினபுரியில் எமது தோட்ட தொழிலாளர்களையும் அவர்களின் இருப்பிடத்தையும் தாக்கி அழித்த பெரும்பான்மை இனத்திற்கு எதிராக எமது மலையக தமிழ் அரசியல்வாதிகள் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள். ஏன் அமரும் கதிரை போய்விடும் என்ற பயமா? அல்லது அவர்களுக்கு ஆதரவானவர்களா?

எஸ். ராஜா, லிந்துல.

இலண்டனில் 'முரசின்' புகழ் ஓங்கியுள்ளது. தேமதுரத் தமிழை உலகமெலாம் பரப்பும் முரசின் பணி பாராட்டப் பட்டுக்கொண்டே இருக்கிறது. 'சொல்லின் செல்வி' ரூபராணி ஜோசப்பின் 'காய்கள்' கதை மனதைத் தொட்டது. கைலாசின் தலையில் வெள்ளி முளைக்கத் தொடங்கியது என்னும் வரிகள் கற்பனைத் திறன் கொண்ட அவரின் ஆளுமையை வெளிப்படுத்திற்று!

ஹீரா அனஸ், இலண்டன்.

அன்பு முரசுக்கு!
அற்புதனின் அரசியல் தொடர் அபாரம். வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான், பொல்கொட வாவி படுகொலைகள் மிகவும் கொடூரமானவை, அரக்கத்தனமானவை. கப்டன் முனாஸ், புளட் மோகன் போன்றவர்களை, நாகரிகமடைந்த மனித சமுதாயம் என்றுமே மன்னிக்க மாட்டாது. கழகத்தில் இருந்து கொண்டே அரச படையினருடன் சேர்ந்துகொண்டு மனித வேட்டையாடிய மாண்புமிகு தோழனை கழகம் கண்டிக்கத் தவறியது- தண்டிக்கத் தவறியது வியப்பாக உள்ளது. கழகத் தோழர்கள் விடை பகர்வரா?

தி. ஏகாம்பரம், இலண்டன்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
பக்ஸ்- 074-513266

# வாசக(ர்)சாலை

## அநியாயச் செலவு

லயன் எயார் விமானம் வீழ்ந்த மறுநாளே அதனை புலிகள் சுட்டதாக ஈ.பி. கட்சி செயலாளர் சுரேஸ் என்பவர் அறிக்கை விட்டிருந்தார். இவர் என்ன பக்கத்தில் நின்று சுட்டதைப் பார்த்துத்தான் அறிக்கை விட்டாரோ? இந்த இலட்சணத்தில் பத்திரிகைகள் தகவல் திரட்டி வெளியிடுவதை மட்டும் இவர்களால் வயிற்றெரிச்சலில் தாங்கமுடியவில்லை.

இவர்கள் ஆயுதம் ஏந்திய காலங்களில் உருப்படியாக ஒரு முகாமையாவது, குறைந்த பட்சம் முகாமில் ஒரு கல்லையாவது அடித்து வீழ்த்தியிருந்தால் இவர்களது பெயரும் அரசியல் தொடரில் இடம்பெற்றிருக்கும். 'ஆடத்தெரியாதவள் மேடை சரியில்லை' என்ற கதையாக, தங்களுக்கு வரலாறு இல்லாதவர்களுக்கு அடுத்தவர் வரலாறு பேசப்படுவது கசப்பாகத்தான் இருக்கும்.

ஈ.பி.தலைவர் சுரேஸ் லெபனானில் பயிற்சி பெற்றவர் என்றும் அரசியல் தொடர் மூலம்தான் அறிந்தோம். பெற்ற பயிற்சிக்காக ஒரு குருவி என்றாலும் சுட்டிருப்பாரோ? இவர்களுக்கு பயிற்சி கொடுத்ததால் பாலஸ்தீன இயக்கத்திற்குத்தான் அநியாயச் செலவு.

ஆர். செபஸ்தியன், மட்டக்களப்பு.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

## ஏற்றுக் கொண்டனரா?

இந்தநாட்டுக்கு சொந்தமில்லாத சிறுபான்மையினர்தான் தமிழ் மக்கள் என்பதை தமிழ்க் கட்சிகள் மனப்பூர்வமாக ஏற்றுள்ளனவா? இல்லையெனில் மிகவும் பாரதூரமான இக் கூற்றுத் தொடர்பாக அவை ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை?

கோ. தர்மரத்தினம், யாழ்ப்பாணம்.

## கொலைக்குழுவின் வசைபாடல்

ஈபி.ஆர்.எல்.எஃப். என்னும் இந்தியப் படைகால கொலைக்-குழுவினர் 'முரசு' மீது வசைபாடி வருகின்றனர். மட்டக்களப்பில் ராசிக்குழு என்ற புனைபெயரில் ஈபி.ஆர்.எல்.எஃப். இப்போதும் செய்து வரும் அட்டூழியங்கள் எண்ணிலடங்காது. மக்களிடம் கப்பம் கேட்டு தொல்லைகள் வேறு.

இக்குழுவினர் முதலில் தமிழீழம் கோரினர். பின்னர் அதனைக் கைவிட்டு மாகாணசபையில் சுருட்டினார்கள். பின்னர் மறுபடி ஈழக்கோரிக்கையை பிரகடனப்படுத்திவிட்டு நாட்டைவிட்டு ஓடினார்கள். இப்போது ஐக்கிய இலங்கை என்கிறார்கள். கட்சியின் பெயரை இன்னமும் ஈழ(?!) மக்கள் புரட்சிகர முன்னணி என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அடிக்கடி நிலைப்பாட்டை மாற்றிய இக்குழு கொள்கை உறுதி பற்றி ஏனையோருக்கு போதிப்பது சாத்தான் வேதம் ஓதுவது போன்றதாகும். தங்கள் சாயம் வெளுப்பதை பொறுக்க முடியாது தானே!

க. அரியநாயகம், ஏறாவூர்.



படிப்பகம்

www.padippakam.com

# மாபெரும் சமருக்கான ஆட்திரட்டல்?

## கிழக்கில் புலிகள் தீவிர வேட்டை!

(அலுவலக நிருபர்)

ஓயாத அலைகள்-02ஐ அடுத்து, அதனைவிடப் பாரிய சமர் ஒன்றுக்காக புலிகள் தயாராகி வருகின்றனர்.

ஓயாத அலைகள்-02 இன் பின்னர் வன்னியில் பல நூற்றுக்கணக்கான புதிய உறுப்பினர்கள் ஆண்களும், பெண்களுமாக புலிகளில் இணைந்துள்ளனர்.

கிழக்கிலும் பாரிய ஆட்திரட்டல் நடவடிக்கையில் புலிகள் இறங்கியுள்ளனர்.

பல நூற்றுக்கணக்கான புதிய உறுப்பினர்கள் புலிகள் இயக்கத்தில் இணைந்துள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

சில பகுதிகளில் அடையாள அட்டைகளை புலிகள் பெற்றுச் சென்றுள்ளனர். குறிப்பிட்ட அடையாள அட்டைக்குரியவர்களை தமது முகாம்களுக்கு வருமாறு கூறிவிட்டுச் செல்கின்றனர்.

அவ்வாறு முகாமுக்குச் செல்பவர்களுக்கு தம்மோடு இணைய வேண்டிய அவசியம் பற்றி நீண்ட விளக்கம் கொடுக்கப்படுகிறது.

கிளிநொச்சி சமர் பற்றிய வீடியோவும் போட்டுக் காண்பிக்கப்படுகிறது. பலர் தாமாக முன்வந்து இணைந்து கொள்கின்றனர். அவ்வாறு இணைந்த பலர் உடன் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. இதில் பெண்களும் பெருமளவில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**பரபரப்பு**

'தேவையானளவு ஆயுதங்கள் உள்ளன. ஆட்பலமும் இருந்தால் பல வெற்றிகளைக் குவிக்கலாம்!' என்று புலிகள் கூறிவருகின்றனர்.

கிழக்கில் புலிகள் ஆட்திரட்டல் நடத்துவதையடுத்து அங்கு பலபகுதிகளில் பரபரப்பான சூழல் நிலவுகிறது.

இயக்கத்தில் தமது பிள்ளைகள் சேருவதை விரும்பாத பெற்றோர்கள், பிள்ளைகளைக் கொழும்புக்கு அனுப்பிய சம்பவங்களும் நடந்துள்ளன.

'கிழக்கின் இன்றைய நிலை காரணமாக வெறுப்புற்றிருக்கும் இளம் தலைமுறையினர் புலிகளின் அழைப்புக்கு செவி சாய்ப்பதை நாம் தடுக்கமுடியாது!' என்று பாடசாலை அதிபர் ஒருவர் முரசுக்குத் தெரிவித்தார்.

**யாழில் பிரசாரம்**

யாழ் குடாநாட்டிலும் புலிகளது புதிய உறுப்பினர் திரட்டும் பணிகள் நடந்து வருகின்றன.

வெளியே தெரியாதளவுக்கு மிக இரகசியமாக அப்பணிகள் நடந்து வருவதாகக் கூறப்படுகிறது.

யாழ் நகரில் பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுப்பதற்காக உளவறியும் வேலைகள் நடந்து வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

# வீழ்ந்த விமானம்

## யாரும் தப்பவில்லை!

வடக்கில் புலிகளால் வீழ்த்தப்பட்ட லயன் எயார் விமானத்தில் பயணம் செய்த பயணிகள் சிலர் உயிரோடு இருப்பதாக சில செய்திகள் வெளியில் இருந்தன.

அந்தச் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்று திட்டவட்டமாக முரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

பயணிகள் சிலர் தப்பியதை மீனவர்கள் கண்டதாகக் கூறப்படுவது வெறும் வதந்தியேயாகும். தாம் காணாததைக் கண்டதுபோல சிலர் மன்னாரில் புரளி கிளப்பிவிட்டுள்ளனர்.

விமானம் தாக்கப்பட்டதால் எவரும் உயிர்தப்ப சந்தர்ப்பமே இல்லை.

முன்னர் வெற்றிலைக்கேணி நோக்கிப் பறந்த ஹெலி ஒன்றை புலிகள் சுட்டு வீழ்த்தியபோதும், அதில் சென்ற படையினர் புலிகளின் பாதுகாப்பில் இருப்பதாக செய்திகள் பரவின. முரசு அதனைத் திட்டவட்டமாக மறுத்து செய்தி வெளியிட்டிருந்ததும் தெரிந்ததே.

எச்சரிக்கையை மீறி விமான சேவை நடத்தியதோடு, சீருடையினரையும் ஏற்றிச் சென்ற விமான நிறுவனம் நஷ்டஈடு பெறுவதைத் தடுக்கவே அப்பகுதியில் தேடுதல் நடத்த புலிகள் தடைவிதித்ததாகக் கூறப்படுகிறது. விமானத்தின் சிதைவு இருந்தால்தான் உடனடியாக முழு நஷ்ட ஈடு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# "ஒதுக்கப்படும் பணம் வருவதில்லை!"

## காமினி பொன்சேகா அதிர்ச்சித் தகவல்

"வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்திப் பணிகளுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் பணமோ அல்லது புனர்வாழ்வு- புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் பணமோ முறையாக வந்து சேர்வதில்லை. ஆகவே இப்பிரதேசங்களில் எத்தகைய அபிவிருத்திப் பணிகளையும் நடைமுறைப்படுத்த முடியாதிருக்கிறது."

இவ்வாறு வட-கிழக்கு மாகாண ஆளுநர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கும் காமினி பொன்சேகா, தான் பதவி விலகுவதற்கான காரணங்களில் ஒன்றாக அதனைத் தெரிவித்திருக்கிறார்.

இதனை அவருடைய வாயால் தெளிவான தமிழில்- இலண்டன் பி.பி.சி. தமிழோசை பேட்டியின்போது கூறியிருக்கிறார்.

திரு.பொன்சேகா பி.பி.சி. பேட்டியில் தெரிவித்த மேற்படி முக்கியமான கருத்தை இங்கு வெளியாகும் எந்தப் பத்திரிகையும் பிரசுரிக்கவில்லை. தன்னை ஆளுநர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவே வற்புறுத்தியதாகவும், இப்பொழுது தம்மைப்பற்றி அவதூறான வார்த்தைகளைக்கூறி அரச தொடர்பு சாதனங்களினூடாக விமர்சித்தமையால், 'பதவி விலகுவதாக அவர் கூறியதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகிகளாக உள்ள சிலருடை நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லாதமையினால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியைக் கோரியும், அவர் அதனைக்கூட சட்டை செய்யவில்லை என்றும் திரு.பொன்சேகா மற்றுமொரு காரணத்தைக் கூறியிருக்கிறார்.

# புலிகளின் பெயரால் புரளிகள்?

## மக்களைக் குழப்பத் திட்டம்!

(நமது நிருபர்)

யாழ் குடாநாட்டில் புலிகள் சில அறிவித்தல்களை வெளியிட்டனர்.

படை முகாம்களுக்கு அருகில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும். தென்மராட்சி பகுதியில் போக்குவரத்து பஸ்களில் படையினர் பயணம் செய்வதால் அவற்றைத் தவிர்க்க வேண்டும். உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பதவி விலகவேண்டும், போன்ற அறிவித்தல்கள் புலிகளால் விடுக்கப்பட்டன.

இதனையடுத்து யாழ் குடாநாட்டில் புலிகளின் பெயரில் புரளிகள் கிளப்பப்பட்டு வருகின்றன. புலிகள்மீது யாழ் குடாநாட்டு மக்கள் வெறுப்பு அடைய வேண்டும் என்று எதிர்பார்க்கும் சில சக்திகளே புரளிகள் கிளப்புதல், இரவோடு இரவாக சுவரொட்டிகள் ஒட்டுதல் போன்றவற்றில் ஈடுபடுவதாக சந்தேகிக்கப்படுகிறது.

'விமானத்தில் பயணம் செய்ய வேண்டாம்!' என்று புலிகள் ஒட்டிய இறுதி எச்சரிக்கைகள் விடியுமுன்பே கிழித்து வீசப்பட்டன. புரளி கிளப்பும் சில பிரசுரங்கள் கிழிபடாமல் உள்ளனவே, ஏன்? என்றும் மக்கள் வினவுகின்றனர்.

பாடசாலைகளுக்கு செல்ல வேண்டாம் என்று புலிகள் எச்சரித்துள்ளதாக புரளிகள் கிளப்பிவிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை யாழ் குடாநாட்டு நீதிமன்றங்களுக்கு புலிகளின் பெயரில் அனுப்பப்பட்ட எச்சரிக்கைக் கடிதத்தில் எழுதப்பட்டது 8ம் மாதம் என்று திகதியிடப்பட்டுள்ளது. பத்தாம் மாதமே நீதிபதிகளுக்குக் கிடைத்துள்ளது. புலிகளது கடிதமாக இருந்தால் இரண்டு மாதம் தாமதமாக ஏன் அனுப்பப்பட வேண்டும்? என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

"யாழ் குடாநாட்டு இராணுவ நிர்வாகத்தைச் சீர்குலைப்போம்!" என்று புலிகள் கூறியுள்ளனர். அதனை சாட்டாக வைத்து திட்டமிட்டு சில சக்திகள் புரளிகள் கிளப்பி வருவதாகவே பலரும் பேசிக்கொள்கின்றனர்.

# குடியிருப்புக்குள் இராணுவ முகாம்

## போக்குவரத்துக்கும் தடை

(நமது நிருபர்)

வவுனியாவில் மக்களின் குடியிருப்புக்கள் மத்தியில் புதிதாக இராணுவ முகாம்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன.

நகரில் உள்ள கல்யாண மண்டபத்திலும், நெற் சந்தைப் பகுதிக் கட்டடத்திலுமே இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட கல்யாண மண்டபம் வவுனியா பா.உ ஒருவரது நிதி ஒதுக்கீட்டால் கட்டப்பட்டதாகும். பல இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கல்யாண மண்பத்திற்கு யாருடைய பெயரை சூட்டுவது என்பதில் இழுபறி நிலவியது.

இந்த இழுபறியால் மூடிக்கிடந்த கல்யாண மண்டபத்தை படையினர் தமது முகாமாக்கிவிட்டனர். இதனையிட்டு வவுனியா மாவட்ட பா.உக்கள் எவரும் வாய் திறக்கவில்லை.

குடியிருப்புக்கள் மத்தியில் உள்ள இம்முகாமைச் சுற்றி பாடசாலை, சிறுவர் பூங்கா போன்றவையும் உள்ளன.

நெற் சந்தைப்பகுதிக் கட்டட இராணுவ முகாமுக்கு அருகில் பொதுப்பூங்கா, அரச ஊழியர் தங்கு விடுதி, மின்சாரத் திணைக்களம் போன்றவை அமைந்துள்ளன. இங்கு விசேஷ அதிரடிப்படை தங்கியுள்ளது.

கல்யாண மண்டப இராணுவ முகாமின் பாதுகாப்புக்காக என்று கித்துள் வீதிச் சந்தியில் இருந்து பிள்ளையார் கோவில் சந்திவரை சன நடமாட்டம், போக்குவரத்து என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் பலதூரம் சுற்றி அலைகின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் திருமலையில் குடியிருப்பு மத்தியில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம் ஒன்று ஈ.பி.டி.பி. எம்.பி மு.சந்திரகுமார் பாராளுமன்றத்தில் தெரிவித்த கண்டனத்தை அடுத்து விலக்கிக் கொள்ளப்பட்டது.

இதற்கிடையே இத்தனை பாதுகாப்புக் கெடுபிடிகள் மத்தியிலும் வவுனியாவில் வைத்து புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர் செனிவிரத்ன 20.10.98 அன்று புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுடப்பட்டுள்ளார். சுட்டவர்கள் மாயமாய் மறைந்து விட்டனர்.

# கிளிநொச்சி சமர் வீடியோ

## உலக நாடுகள் எங்கும் பிரசாரம்

கிளிநொச்சி-பரந்தன்-ஆனையிறவு பகுதிகளில் நடத்தப்பட்ட ஓயாத அலைகள்-02 ஊடறுப்பு முற்றுகைச் சமர் வீடியோவில் புலிகளால் பதியப்பட்டது.

அந்த வீடியோப் பிரதிகள் துரிதமாக நேர்த்தியாக்கப்பட்டு கொழும்பு உட்பட பல நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் பத்திரிகையாளர்கள் சிலருக்கும் அந்த வீடியோப் பிரதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரபாகரன் கட்டளைகள் பிறப்பிப்பது, அணிகள் தாக்குதல் நடத்துவது, ஆயுதங்கள் கைப்பற்றப்படுவது போன்ற காட்சிகள் வீடியோவில் பதிவாகியுள்ளன.

கிளிநொச்சி சமர் தொடர்பாக அரசு கூறிய தகவல்களைப் பொய்யென்று நிரூபிக்கும் விதமாக, சர்வதேச இராஜதந்திரிகளுக்கு வீடியோப் படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றனவாம்.

'இலங்கைத் தீவில் இரண்டு சமபல இராணுவங்கள் உள்ளன. விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய இராணுவமாகவும், தேசியத் தலைமையாகவும் விளங்கி வருகின்றனர். ஏறக்குறைய 25 வருடகால அரசியல், இராணுவ அனுபவம் கொண்ட தமிழ்த் தேசியத் தலைவராக பிரபாகரன் திகழ்கிறார். இந்நிலையில் சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறுவது உலகை ஏமாற்றும் அப்பட்டமான பொய்ப் பிரசாரமாகும் என்று புலிகளின்! சர்வதேசக் கிளையினர் பிரசாரம் செய்கின்றனர். அதற்கு ஆதாரமாக ஓயாத அலைகள்-02 வீடியோவையும் காண்பித்து வருகின்றனர்.

# தப்பியோடுவோர் தொகை அதிகரிப்பு

## தேடிப்பிடிப்பதிலும் சிரமம்

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களின் தொகை பற்றி முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இதுவரை 30 ஆயிரம் படையினர் தப்பி ஓடி விட்டனர் என்று பொலிசாரின் அறிக்கை ஒன்று கூறுகிறது. அதே வேளை இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன், காரைதீவில் 12,000 பேர் மட்டுமே காணாமல் போயுள்ளனர் என்று கூறுகிறார். இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தலுவத்த, கடந்த மே மாதம் வெளியிட்ட தகவல் ஒன்றில் 15 ஆயிரம் பேர் தப்பி ஓடிவிட்டனர் என்று கூறியுள்ளார்.

கடந்த 1997 மே 13ம் திகதி ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை தொடங்கியதைத் தொடர்ந்து, தப்பி ஓடியவர்களின் தொகை அதிகரித்திருக்கிறது, கடந்த மாதம் நடைபெற்ற கிளிநொச்சி-பரந்தன் சண்டையில் இத்தொகை கணிசமான அளவு அதிகரித்திருக்கிறது. மோதலில் மாண்டுபோன படையினரின் சரியான தொகை இதுவரை நிர்ணயிக்கப்படாதிருப்பதனால் தப்பி ஓடியவர்களின் எண்ணிக்கையையும் தீர்மானிக்க முடியாதிருக்கிறது.

தப்பி ஓடியவர்கள் திரும்பி வந்து சேர்ந்து கொள்வதற்கு இப்பொழுது ஒன்பதாவது தடவையாக பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு மன்னிப்பு வழங்கப்படுவதனால் இராணுவக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுவிடுகின்றன. 'பிடிபட்டாலும் தண்டனை வழங்க மாட்டார்கள்' என்ற அச்சமில்லாத தன்மையும் இதற்கு மற்றுமொரு காரணமாகும் என்று சில இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

தப்பி ஓடியவர்களைப் பிடிப்பதற்கு பிரதேசச் செயலாளர்கள், கிராம சேவகர்கள் சமுர்த்திப் பணியாளர்கள் போன்றோரின் ஒத்துழைப்பையும் அரசு கோரியிருக்கிறது.

இராணுவத்தில் தங்கள் பிள்ளை சேர்ந்தால் தங்கள் வறுமை நீங்கும் என்று ஆரம்பத்தில் கருதிய பெற்றார், வகை தொகையற்று இறப்பு விகிதம் அதிகரிப்பதை அறிந்ததும், தப்பி ஓடிவரும் தங்கள் பிள்ளைகளை மீண்டும் போர்க்களம் செல்லாமல் தடுத்து வருவதாகவும் அறியப்படுகிறது.

கிளிநொச்சிச் சமரில், சில தென் பகுதி மாவட்டங்களிலிருந்து சென்ற இளைஞர்கள் அதிகமானோர் மாண்டு போயிருப்பதாகத் தெரிகிறது. இத்தகைய பகுதிகளில், தப்பி ஓடியவர்களைக் கண்டுபிடித்துச் சேர்ப்பது மிகவும் சங்கடமான அனுபவம் என்று அரச அதிகாரிகள் கூறியுள்ளனர்.

முன்னரங்கப் போர் முனையில் நிற்கும் துருப்பினருக்கு போதுமான வசதிகள் இல்லாதிருப்பது ஒரு புறமிருக்க, மோதல்களின் போது நேரடியாகக் காணும் காட்சிகளும் மனத்தாக்கத்தை ஏற்படுத்துவதனாலும் அவர்கள் எப்படியாவது தப்பி ஓடிவிடவே கருதுகின்றனர் என்று கருதப்படுகிறது.

# பூப்பூக்கும் ஓசையும்—கைக்குண்டின் ஓசையும்

கிழக்கில். அம்பாறை மாவட்டத்தில் தீபாவளியன்று நடந்த இசை நிகழ்ச்சியில் கைக்குண்டு ஒன்று வெடித்தது. இரவு 10.35க்கு இச் சம்பவம் நடந்துள்ளது.

மேடைக்குப் பின்புறம் இருந்து மேடையின் மையப்பகுதியில் விழக்கூடியதாக குறிவைத்தே குண்டு எறியப்பட்டுள்ளது.

நிகழ்ச்சி நடத்தியவர்களை மட்டும் குறிவைத்தே கைக்குண்டு எறியப்பட்டுள்ளதை அடுத்து, அக் கோணத்தில் ஆராய்ந்தபோது சில தகவல்கள் கிடைத்தன.

கல்முனை சிவா குழுவினரே நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர். கல்முனை சிவா இதற்கு முன்னரும் சில பகுதிகளில் இசை நிகழ்ச்சி நடத்துவதாகக் கூறி நிதி திரட்டியதாகவும், பின்னர் இசை நிகழ்ச்சி நடத்தாமல் விட்டதாகவும் புகார்கள் கூறப்பட்டுவந்தன.

சமீபத்தில் இது தொடர்பாக கல்முனை சிவா பொலிசாராலும் கைதானார். கல்முனை சிவா பற்றி புலிகளுக்கும் முறைப்பாடுகள் போயிருந்ததாகக் கூறப்படுகிறது.

கல்முனை சிவாவுக்கு எதிரானவர்கள் தான் கைக்குண்டை வீசியிருக்க வேண்டும். அதனால்தான் மேடையை குறிவைத்து வீசியுள்ளனர் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது.

பாடகி கௌசல்யா தட்சிணாமூர்த்தி (22) என்பவரது மடியிலேயே கைக்குண்டு விழுந்து வெடித்தது. அவரது கால் துண்டானதுடன் அவரும் பலியானார்.

"பூப்பூக்கும் ஓசை கேட்கத்தான் ஆசை" என்ற பாடலை நிலாமதி பிச்சையப்பா பாடிக்கொண்டிருந்தபோதே குண்டுவெடிக்கும் ஓசை மேடையில் கேட்டிருக்கிறது.

குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்களை ஏற்றிக்கொண்டு சென்ற வாகனத்தைக் கண்டதும், கல்முனை எலிஃபன்ற் ஹவுஸ் முன்பாக இருந்த பொலிசார் வானத்தை நோக்கிச் சுட ஆரம்பித்தனராம். புலிகள் என்று நினைத்தே சுட்டனர். பின்னர் வாகனத்தில் இருந்த கிராம அதிகாரி சென்று தன்னை அறிமுகம் செய்த பின்னரே மேற்கொண்டு செல்ல அனுமதித்தனராம்.

இதற்கிடையே கிழக்கில் சினிமாப் படங்கள், கேளிக்கைகள் போன்றவற்றுக்கு தடை விதிப்பதாக புலிகள் சமீபத்தில் அறிவித்தல் விடுத்திருந்தமை தெரிந்ததே. சென்ற வார முரசில் அந்த அறிவித்தல் வெளியாகி இருந்தது.

# படம் எடுத்தால் கைது!

## தமிழ் மாணவர்கள் அவதி!

(கண்டி நிருபர்)

கண்டிப் பிரதேசத்தில் கடந்த 10 தினங்களில் 20க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள்-புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதாகினர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அக்பர் விடுதியில், பல்கலைக்கழக மாணவர் இருவருடன் தங்கியிருந்த யாழ் பல்கலைக் கழக மாணவர் ஆறுபேர் சந்தேகத்தின் பேரில் கைதாகி விடுவிக்கப்பட்டனர். கடந்த 11.10.98 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் புகைப்படம் எடுத்த சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைதாகினர். பேராதனை மாணவர் இருவரும் முதலில் விடுதலையாகிய பின்னர் தீவிரவிசாரணையின் பின்னர் ஏனைய 6 பேரும் விடுதலையானார்கள்.

நாவலப்பிட்டியில் வைத்து கடந்தவாரம் இதேபோன்று தமிழ் யுவதி ஒருவர் பொலிஸாரால் கைதாகினார். இவருக்கு தங்குமிடம் கொடுத்த மேலும் தமிழ் இளைஞர்களும் கைதாகி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கண்டி நகரில் சுப்ரமணியம் சிவயோகநாதன் (வயது 31) என்ற நபர் 16ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைதானார். இவர் திருகோணமலை தம்பலகாமத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். குண்டசாலை கரந்தகொல்லையில் வைத்து இவர் கைதானார்.

கண்டி டி.எஸ். சேனாநாயக்க வீதியில் உலாவித் திரிந்த புஸல்லாவை, நாவலப்பிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்களும் 14அம் திகதி கைதானவர்களில் சிலர். இவர்களிடம் ஆள் அடையாள அட்டை இருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சந்தேகப் பேர்வழிகளில் பலர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சரக்குக் கப்பலில் டாங்கி!

## புலிகளின் குற்றச்சாட்டு ஊர்ஜிதம்

பயணிகள் போக்குவரத்து என்ற பெயரில் படையினர் போக்குவரத்து நடத்துவதாகக் கூறி விமான சேவைக்கு புலிகள் தடை விதித்தனர்.

இதேவேளை யாழ் மக்களுக்கான பொருட்களை ஏற்றிச் செல்லும் சரக்குக் கப்பலான 'லங்கா முதித்த' கப்பலில் படையினர் டாங்கிகளை ஏற்றிச் சென்றுள்ளனர். டாங்கிகள் கடலில் கவிழ்ந்ததால் இந்த விடயம் அம்பலமானது.

பயணிகளின் போக்குவரத்து சாதனங்களில் படையினர்-புலிகள் உட்பட-போருடன் தொடர்புள்ள தமது தேவைகளுக்கு பயன்படுத்தாமல் இருப்பதும் முக்கியம்.

லங்கா முதித்தவில் டாங்கிகள் கொண்டு செல்லப்பட்டமையானது, 'பொதுமக்களுக்கான பயணம், பொது மக்களுக்கான விநியோகம்' என்ற பெயரில் படையினர் தமது தேவைகளை நிறைவேற்றுவதாகப் புலிகள் கூறிவரும் குற்றச்சாட்டை மெய்ப்பித்துவிட்டது.

www.padippakam.com

# மருத்துவமாதின் முறைகேடு!

## வழக்குத் தொடுக்க ஆலோசனை!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் பொதுவாகவே சில மருத்துவ மாதுகளும், தாதிமார்களும் நோயாளர்களிடம் நடந்து கொள்ளும் முறை பற்றிப் பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கிறார்கள்.

ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரியும் முஸ்லிம் மருத்துவ மாது ஒருவர் இவ்வைத்தியசாலையை நாடிச் செல்லும் நோயாளர்களிடம் கடுமையாக நடந்து கொள்வதாக முறையிடப்பட்டுள்ளது.

தனது குழந்தைக்குத் தடுப்பூசி ஏற்றச் சென்ற தாய் ஒருவரைக் கடிந்து பேசி மனவேதனை ஏற்படுத்தியிருப்பதாகவும், எனவே இது பற்றி பகிரங்க விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொலிஸ் பொறுப்பதிகாரி, மற்றும் சம்பந்தப்பட்ட சகலருக்கும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளர்களிடம், கருணையுடனும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டியவர்கள் காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொள்வது வேதனையளிக்கிறது.

இவ்வாறான விரும்பத்தகாத நிகழ்வுகள் இனி வரும் காலங்களில் நடைபெறக்கூடாது. நோயாளர்களைக் குணப்படுத்தும் மருத்துவ சேவையின் மகத்துவம் மதிக்கப்படவேண்டும். என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் ஏறாவூர் நகர பிரதேச சபையின் உப தலைவர் எஸ்.எச்.அபூஹனீபாவின் மனைவிக்கே இடம் பெற்றது.

# திண்டாடும் ஆசிரியர்கள்

அட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஏறத்தாழ 1300 ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர். அதிகமானோர் தமிழாசிரியர்கள். ஆனால் இவ்வாசிரியர்களின் தொழில் சார்ந்த நிர்வாக வேலைகளைச் செய்து கொடுப்பதற்கு, அட்டன் கல்வி காரியாலயத்தில் மிகச் சொற்பமான எழுதுவினைஞர்களே கடமையாற்றுகின்றனர். இவர்கள் தமிழ் ஆசிரியர்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்ய முடியாமல் திணறுகின்றார்கள்.

இதனால், ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றார்கள். எனவே, கல்வியமைச்சு இவ்விடயத்தில் கருணைகாட்டாதா? என இப்பகுதி ஆசிரியர்கள் அங்கலாய்க்கின்றனர்.

சோ.ஸ்ரீதரன், பொகவந்தலாவ.

# அவயவங்களை இழந்தவர்களுக்கு நெதர்லாந்து உதவி!

யுத்த வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்த தமிழ்-முஸ்லிம் பொதுமக்களுக்கு சுயதொழிற்துறைகளைத் துவங்குவதற்கான பண உதவியை நெதர்லாந்து அரசு மட்டக்களப்பு கிழக்கிழங்கைப் புனர்வாழ்வுக் கழகத்தின் (ERO) அனுசரணையுடன் வழங்கிவருகிறது.

இதன் முதற்கட்டமாக 15 இளைஞர் யுவதிகள் சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான பயிற்சிகளைப் பெற்று- நிதி உதவிகளைப் பெற்றுக் கொண்டனர். தலா 8000/= ரூபா ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டது. இவர்களுக்குத் தகைமைச் சான்றிதழ்களை வழங்கும் வைபவம் சமீபத்தில் மட்டக்களப்பு 'மன்றேசா' பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

அவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு ஏ.கே. பத்மநாதன், "யுத்த வன்முறைகள் எதிலுமே பங்கு பெறாத உங்களை இந்தக் கொடிய யுத்தம் அங்கவீனர்களாக்கியுள்ளதோடு மன வடுக்களையும், மனப்பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. உங்களை இந்த சூழ்நிலைக்குத் தள்ளியவர்கள் யாராக இருந்தாலும் ஐயா இந்த அப்பாவிகளை ஏன் தண்டித்தீர்கள் என்றுதான் நான் கேட்பேன்.

கொடூர வன்முறைக்குக் கண்களில்லை. அதனால்தான் அது உங்களில் பலருக்கு கண்களையும் கைகால்களையும் வேறு பல அங்கங்களையும் பலியெடுத்துள்ளது. இத்தனைக்கும் மத்தியில் நீங்கள் ஆயுதமேந்திப் போராடியவர்களுமல்ல. நீங்கள் அப்பாவிகள். நீங்கள் அங்கவீனர்களான போதிலும் வாழ்வைச் சலித்துக் கொள்ளாது சுயதொழில் செய்து வாழ முன்வந்துள்ளீர்கள். இன்னும் பல இடர்கள் வரலாம். ஆனால் எவையும் நிரந்தரமானதாக இருக்கமுடியாது. உங்கள் வாழ்வில் பலஅபிலாசைகள் இருந்திருக்கும். இறைவன் உங்களுக்கு நல்வாழ்வு தரவேண்டும்." என்றார்.

திட்ட அதிகாரி திரு.எம். கமலநாதன் தனதுரையில்: "பகைமை வளர்க்கும் இந்த யுத்தம், கண்ணுக்குத் தெரிந்த, கண்ணுக்குப் புலப்படாத பலவகைப் பாதிப்புக்களை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கையை முடக்கியுள்ளது." என்றார்.

சுயதொழில் ஊக்குவிப்பு, தொழில் முகாமைத்துவ மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவப் பயிற்சி நெறிகளை விவசாய அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் திரு.வி. கனகரெட்ணம், மற்றும் ஏ.எச்.ஏ.ஹுஸைன் ஆகியோர் நடாத்தினர்.

இவ்வைபவத்தில் ஈ.ஆர்.ஓ நிறுவன உபதலைவர் சிரோன்மணி செல்வநாயகம், செயலாளர் ஏ. மார்ட்டின், திட்ட அதிகாரி எம். கமலநாதன், ச.செ.சி. சங்கப்பிரதிநிதி பஸ்கால் ஜெக்குவர், இ.செ.சி. சங்கத் தலைவர் ரீ.வசந்தராஜா, வறுமை நிவாரண உதவி பணிப்பாளர், எம்.எஸ்.எஃப். எகெட் மற்றும் நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# நிர்வாகச் சீர்கேடு

(நமது நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஹொரவப்பொத்தானை முஸ்லிம் மகாவித்தியாலயம், இங்குள்ள 22கிராமங்களுக்கும் தலைமை வகிக்கக்கூடிய பெரிய பாடசாலைகளில் ஒன்றாகும்.

சுமார் 600 மாணவர்களும் 25 ஆசிரியர்களும் உள்ள இப்பாடசாலை, அண்மைக் காலமாக கல்வித்தரத்தில் படுபாதாளத்திற்குச் செல்லும் அளவுக்கு இங்கு நிர்வாகச் சீர்கேடு தலைவிரித்தாடுகிறது.

ஆண்டு தோறும் நடைபெறும் ஆண்டு 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் இங்கிருந்து ஒருவரேனும் தெரிவாவதில்லை. கடந்த வருடம் 50 மாணவர்கள் வரை இங்கிருந்து க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் அதில் இருவர் மாத்திரமே சித்தி அடைந்து சாதனை படைத்துள்ளனர்.

# புகையிரத நிலையத்தில் பகற்கொள்ளை!

(திருமலை நிருபர்)

திருக்கோணமலைப் புகையிரத நிலையத்தில் பகற்கொள்ளை இடம் பெற்று வருவதாகப் பொதுமக்கள் முரசுக்குத் தெரிவித்துள்ளனர். கருமபீடத்தில் பயணச்சீட்டு வழங்கும் உத்தியோகத்தர்களே இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயணச்சீட்டுப் பெறும் பயணிகளிடம் சில்லறை இல்லை என்று கூறிக் கருமபீட உத்தியோகத்தர்கள் குறைந்த தொகையை மீதியாகக் கொடுத்துத் தினமும் பலநூறு ரூபாய்களைச் சுருட்டி விடுகிறார்களாம்.

அதுவும் புகையிரதம் புறப்படும் நேரத்தை அண்மித்து வரும் பயணிகளிடம் சில்லறை இல்லை என்ற பெயரில் இருபது ரூபாயைக் கூட கொடுக்க மறுக்கிறார்கள். பயணிகள் சற்றுமுகம் சுளித்தால் பணத்தைத் திருப்பிக் கொடுத்து "மாற்றிக் கொண்டுவா" என்று கறாராய்க் கூறி விடுகிறார்கள். கால் மைல் தூரத்துக்குள் கடைகள் எதுவும் இல்லாததால் பயணிகளும் விதியை நொந்து கொண்டு பணிந்து போக நேரிடுகிறது.

ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் சில்லறை இல்லையென்றாற்கூடப் பொறுத்துக் கொள்ளலாம். பத்து இருபது ரூபாயே இல்லாது போனால்..., திணைக்களம் கவனித்தால் சரி!


## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P.ஆறுமுகம் அவர்களை
கொழும்பில் அக்டோபர் 21 முதல் 31 வரை சந்திக்கலாம்
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு)
கொழும்பு நாட்கள் மட்டும் செல்டெல் No. 072-609388
கல்முனையில் நவம்பர் 7,8,9ம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329
வவுனியாவில் நவம்பர் 14,15,16ம் திகதிகளில் சந்திக்கலாம்
(முன்கூட்டியே பதிவுசெய்யவும்) VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் வீதி, வவுனியா. T.P. 024-22074 Residend: T.P. 065-24019
கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
No. 33, Tissa Weerasingam sq, Boundary Road, Batticaloa. SRI LANKA.

## New Victors



பழுது பார்க்கும் இடம்
நியூ விக்ரஸ்
40 1B, காலி வீதி,
(அலெக்சான்ட்ரா வீதிக்கு அருகில்)
வெள்ளவத்தை.

## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் — தபால் மூலம் தையற் கலை

டிப்ளோமா ஆசிரியரால் தபால் மூலம் தையற்கலை பயிற்றுவிக்கப்படுகின்றது. சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையுடன் இன்றே தொடர்பு கொள்ளுங்கள். பரீட்சை எழுதிய மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யப்படுவதை அறியத் தருகிறோம். பெண்களுக்கு மாத்திரமே பயிற்சி அளிக்கப்படும்.
DRIECTOR:- Mrs. SITHY KAMILA RAFI, 7/1, Gongawala Road, Matale.




சூழ்நிலையின் பிரதிபலிப்பே உண்மைக் கவிஞனின் படைப்பு. நம் மண்ணின் மைந்தர், மாயராஜா அன்பழகனின் – இதயத்து ஏக்கம், இசைக்கோலமாய் வெளிவருகிறது. திரையிசை என்ற எல்லைக்கு வெளியே – தமிழிசை, நவீன ஒலிநய ஆடையுடுத்திப் புலம் பெயர்ந்து, நம்மவர் வாழும் மண்ணிலே, சோகத்திலும் சுகம் தரும் சங்கீதமாய் மலர்கின்றது. இந்த இதயத்தின் ஏக்கம் இதம் தரும் இசை அலைகளாய் தேச எல்லைகளைக் கடந்து பரவிப் புகழ்பெற என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்!

B.H. அப்துல் ஹமீத்
உங்கள் அன்பு ஒலிபரப்பாளர்.

இயற்றி இசையமைத்துப் படைக்கிறார்
மாயராஜா அன்பழகன்
CANADA
ஒளியிழைப்பேழை
வெளியீடு 31-10-1998
தொடர்பு: கனடா
பொன் சிவா வரதராஜன்,
(514)-381-3409
இலங்கை
மாயராஜா புவி அழகன்
113, சதாம் வீதி, கொழும்பு-01
T.P. 074/717276, 717277

## விஞ்ஞானம்

| | |
|---|---|
| ஆண்டு | 11 – 73/= |
| ஆண்டு | 10 – 77/= |
| ஆண்டு | 9 – 70/= |

(குறிப்புக்கள், விரிவான வினா–விடை)
விஞ்ஞான விளக்கம் 10/11-43/=
(250 வினா– விளக்கம்)
துரிதமீட்டல் O/L 42/=
விஞ்ஞானச் சுருக்கம் 9,10,11
ஆசிரியர்:
ஆ. யோகராஜா
எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும்
தொடர்பு: A. Jogarajah
90/1, Christuraja Mawatha,
Nayakakanda, Hendala, Wattala.

## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், இருமல், சளி, தும்மல், மூக்கடைப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய அஸ்மா சிகிச்சை நிபுணர் Dr. சுராஜ் சோமசுந்தரம் அவர்களை இல.25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசையில் (மவுண்ட் லேவினியா) (கொழும்பு) தினமும் மாலையில் 4 மணி முதல் 7 மணி வரையும் சந்திக்கலாம். தூர இடத்தில் உள்ளவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படுவர். சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலை பேசி மூலம் பதிவு செய்து பார்வையிடப்படும் நாளையும், நேரத்தையும் பெற்று வரவும்.

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.
DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD
NINTAVUR-21
SRI LANKA.

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் கோசன் 22.10.1998

புங்குடுதீவைச் சேர்ந்த யோகராஜா-கலிங்கராணி தம்பதியினரின் செல்வப் புதல்வன் கோசன் தனது முதலாவது பிறந்தநாளை இலண்டன் மாநகரில் 25.10.1998 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சீனியப்பாமார், சீனியம்மா, ஆசையப்பா, ஆசையம்மா, சித்தப்பாமார், சித்தி, மாமாமார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் புங்குடுதீவு கண்ணகை அம்மன் அருளால் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

## Metro Computer World

17 Charlemont Road, Colombo - 06
Tel: 074 -511164

Computer courses with
Unlimited computer time * Individual attention

### DIPLOMA IN COMPUTER STUDIES

Information Technology, Ms Dos, Windows 95, Programming Techniques, Pascal, GW basic, Ms Word, Ms Excel.
Duration : 6 months Course Fee :Rs 7000

### DIPLOMA IN PROGRAMMING

Information Technology, Ms Dos, Windows95, Advanced Programming Techniques, Basic, Pascal, dbase
Duration : 4 months Course Fee : Rs 6500

### MICROSOFT OFFICE

Information Technology, Ms Dos, Windows 95, Ms Word, Ms Excel, Power Point
Duration : 3 months Course Fee: Rs 4500

### Individual Program

Visual Basic Ver.5 : Rs 7500 Clipper: Rs 5000
C++ Rs 5500, Access: Rs 3500, Excel :Rs3000

Classes will Commence 1st Batch on 25-10-1998
2nd Batch on 01-11 - 1998
sun day at 2pm
Payments can be made in Instalments.



படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஓயாத அலைகள்-03

விடுதலைப் புலிகளின் மகளிர் படையணி வன்னிக் களத்தை அதிர வைத்துக் கொண்டிருக்கிறது.

சமீபத்திய கிளிநொச்சி சமரில் மகளிர் படையணி பிரதான பாத்திரம் வகித்திருந்தது.

புலிகள் தரப்பில் பலியானவர்களில் பெண் புலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

பெப்ரவரி முதலாம் திகதி கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு முகாம்கள் மீது தாக்குதல் யுத்தம் ஒன்றைப் புலிகள் நடத்தினர்.

அத்தாக்குதல் சமரில் பரந்தன் பகுதியில் இருந்த படை நிலைகளை தாக்கும் பொறுப்பை மகளிர் படையணி ஏற்றிருந்தது.

பலர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

ஓயாத அலைகள்-01, ஓயாத அலைகள்-02, இரண்டிலும் பெண் புலிகள் முக்கிய பாத்திரம் வகித்துள்ளனர். பெண் புலிகள் அணி இல்லையானால் இலங்கை இராணுவ வரலாற்றில் மிகப் பாரிய தாக்குதல் சமர்கள் இரண்டும் தமது இலக்கை எட்டியிருக்காது.

தரைத்தாக்குதல்களில் மட்டுமன்றி கடற் சமர்களிலும் பெண் புலிகள் பங்குகொள்கின்றனர்.

புலிகளின் சகல படைப்பிரிவுகளிலும் பெண்களும் உள்ளனர்.

துரிதமாக முன்னேறுவதிலும், ஊடறுத்து தாக்குதல் நடத்துவதிலும் சிறப்பு பயிற்சி பெற்ற சிறுத்தை படையணியிலும் பெண் புலிகள் உள்ளனர்.

பீரங்கிப் படையணியிலும், விமான எதிர்ப்பு

படை முகாம்களுக்கு அருகில் இருப்போரை வெளியேறுமாறுதான் யாழ் குடாநாடு எங்கும் புலிகள் அறிவித்தல் விடுத்து வருகின்றனர்.

குறிப்பாக தென்மராட்சிப் பகுதியில் படை முகாம்களுக்கு அருகில் உள்ள மக்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து தென்மராட்சியில் உள்ள படைமுகாம்கள் சில மூடப்பட்டுள்ளன.

கிளிநொச்சியை கைப்பற்றிய புலிகளின் அடுத்த குறி ஆனையிறவுத் தளமாக இருக்க

அவ்வாறு படையினர் நகர்வதை தடுக்க நீண்ட முன்னரங்கம் அமைத்து மறிப்புச் சமரில் ஈடுபடவேண்டும். அதற்காக பெரியளவான ஆட்பலத்தை முடக்க வேண்டியிருக்கும் என்பதால் புலிகள் தந்திரோபாய பின் நகர்வு ஒன்றை மேற்கொண்டனர்.

புளியங்குளம், கனகராயன் குளப்பகுதியில் இருந்து புலியணிகள் பின்நகர்ந்து மாங்குளம் பகுதியை தமது முன்னரங்கமாக, மறிப்புச் சமருக்கான முனையாக மாற்றிக் கொண்டன.

அவ்வாறு மாற்றிக்கொள்ளும்போதே மறுமுனையான கிளிநொச்சியை கைப்பற்றுவ

தொடுக்கப்படப் போகிறதா? என்ற கேள்விகளுக்கு படையினர் விடை கண்டுபிடிப்பது சிரமம்.

1991 ஜூலை 09ம் திகதி ஆனையிறவுப் படைத்தளம் புலிகளால் பாரிய தாக்குதலுக்கு உள்ளானது. ஒரு மாதகாலம் உக்கிரமாக நடந்த சமரில் புலிகளால் இலக்கை எட்டமுடிய வில்லை.

அப்போது கடற்புலிகள் அணி இல்லாமையும் அரச துருப்புக்களின் கடல்வழி தரையிறக்கத்தை புலிகள் தடுக்க முடியாமைக்கு முக்கிய காரணமாகும்.

ஆனையிறவு சமர் முடிந்து இப்போது ஏழு வருடங்களாகிவிட்டன. அதன்பின்னர் பல களங்கள் கண்ட அனுபவமும், அப்போது இருந்ததைவிட கனரக ஆயுத பலமும் தற்போது புலிகளிடம் உள்ளன. விமான எதிர்ப்புப் படையணி தற்போது விரிவாகி உள்ளது. ஒரு குறிப்பிட்ட வான் பரப்பில் பறக்கும் விமானங்களை வீழ்த்த தரையில் இருந்து வலைவிரித்து காத்திருக்கும் அளவுக்கு விரிவாகியுள்ளது. ஏவுகணைகளும் உள்ளன.

ஆனையிறவுச் சமர் நடக்கும்போது விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் மட்டுமே



பெண் கடற்புலிகள்



மகளிர் படையணி



புலிகளின் மகளிர் காவல்துறை

# எங்கே? எப்போது?

அப்பகுதியில் ஒன்பதாவது கெமுனு படைப்பிரிவு தங்கியிருந்தது. மகளிர் படையணியைச் சேர்ந்த ஐம்பது பெண் புலிகள் வரை கெமுனு படைப்பிரிவுடனான மோதலில் பலியானார்கள்.

எனினும் பரந்தன் பகுதியில் தாம் நினைத்த இலக்கை மகளிர் படையணியால் அன்று எட்ட முடியவில்லை.

அன்று ஏற்பட்ட பின்னடைவுக்கு பதிலடி கொடுக்க இம்முறை தமக்கு சந்தர்ப்பம் கேட்டது மகளிர் படையணி.

பொறுப்புக்களை பிரித்துக் கொடுத்தார் பிரபாகரன். இம்முறை தமக்கு கொடுத்த பொறுப்புக்களை கச்சிதமாக நிறைவேற்றி முடித்தனர்.

பெண்கள் இளகிய மனதினர், உறுதியில்லாதவர்கள் என்ற பழங்கதைகள் களத்தில் பொய்யாகிக் கொண்டிருக்கின்றன.

தாண்டிக்குளம் சமரின்போது களத்தில் இருந்த அரச படை அதிகாரி ஒருவர் கூறியது இது: "தமக்கு முன்னால் வந்த பெண் புலிகள் சூடுபட்டு விழ, அந்த உடல்களை தாண்டி அணி அணியாக எங்களை நோக்கி பெண் புலிகள் முன்னேறிக் கொண்டிருந்தனர்." என்று பிரமித்திருந்தார்.

கிளிநொச்சியில் ஓயாத அலைகள்-02 இலும் அதுதான் நடந்தது.

கிளிநொச்சியில் இருந்த ஆட்டிலெறி தளம்மீதான தாக்குதல் உட்பட சமருக்கு முக்கியமான பல தாக்குதல்களில் பெண் புலிகளும் ஆண் புலிகளும் சம பங்கு வகித்தனர்.

சமர் முடிந்து ஆயுதங்கள் அள்ளுவதிலும் பெண் புலிகளே ஆரவாரத்தோடு ஆர்வமாக ஓடுபட்டுத் திரிந்தனராம்.

காயப்பட்ட பெண் புலிகள் காண்பிக்கும் மன உறுதியும் ஆச்சரியம் தருகிறதாம். ஆண் புலிகள் சிலர்கூட காயங்களின் வலி தாளாமல் அவதிப்படும்போது பெண் புலிகள் பலர் பல்லைக் கடித்துக்கொண்டு தாங்கிக் கொள்கிறார்களாம்.

சண்டையில் பட்ட காயத்துக்கு கட்டுப் போட்டுக் கொண்டு, எதுவும் நடக்காதது போல ஆயுத சேகரிப்பில் பெண் புலிகள்

படையணியிலும் பெண் புலிகளும் உள்ளனர்.

இந்தியாவில் சுபாஸ் சந்திரபோஸ் உருவாக்கிய தேசிய இராணுவத்திலும் பெண்கள் சம அளவில் சமர்களில் பங்கெடுத்தனர். பிரிட்டிஷ் படையுடன் பல இடங்களில் போரிட்டனர்.

பல்வேறு விடுதலை இயக்கங்களில் பெண் போராளிகள் ஆயுதம் ஏந்திப் போராடி உள்ளனர்.

ஆனாலும் மிக முக்கியமான சமர்களில், மிக முக்கியமான படைநிலைகளை தாமே தாக்கியழிக்கும் விதமான சமர்களில் பெண் புலிகள் காட்டும் உக்கிரத்தை வேறு எந்த நாட்டு பெண்கள் அணிகளும் காண்பிக்கவில்லை.

அதுதவிர மனிதக் குண்டாக மாறி தாக்குதல் நடத்துதல், கடற் சமர்களில் பங்கெடுத்தல், தாமே படகுகளை செலுத்திச் சென்று சண்டையிடுதல் போன்றவற்றில் பெண் புலிகள் மட்டுமே இதுவரை கால பெண்கள் படையணிகளது வரலாற்றில் முன்னணியில் நிற்கின்றனர்.

••

ஓயாத அலைகள் 03 எங்கே? எப்போது? இராணுவ ஆய்வாளர்களின் அதி முக்கியமான கேள்வி அதுதான்.

யாழ் குடாநாட்டில் தென்மராட்சிப் பகுதியில் இருந்து குடி மக்களை வெளியேறுமாறு புலிகள் சுவரொட்டிகள் ஒட்டியதாக செய்திகள் பரவின.

ஆனால் சுவரொட்டிகளை கண்ணால் கண்டவர்கள் யாரும் இல்லை. கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்பது போன்றதே இதுவும்.

லாம் என்று படைத்தரப்பு கருதுவதாகத் தெரிகிறது.

ஆனையிறவுத் தளத்தை முற்றுகையிட்டு தாக்கும்போது தென்மராட்சியில் இருந்து படையினர் உதவிக்கு நகருவதை தடுக்கும் விதமாக அங்கும் தாக்குதல் நடத்தப்படலாம். ஆட்டிலெறி தாக்குதல்களும் தொடுக்கப்படலாம்.

கடலிலும் தரையிலும் சண்டை போடும் திறன்மிக்க சிறுத்தைப் படையணி கிளிநொச்சி சமரில் ஆனையிறவு தளத்தை சுற்றி ஆங்காங்கே ஊடறுத்து தாக்குதல் நடத்தியது. கடற்பாதையால் படகுகளில் வந்து இறங்கியே சிறுத்தை அணி தாக்குதல் தொடுத்தது.

ஆனையிறவுத் தளத்தை புலிகள் தாக்கும்போதும் தென்மராட்சியில் உள்ள படை முகாம்கள்மீது சிறுத்தை படையணி தாக்குதல் தொடுக்கலாம்.

அல்லது ஆனையிறவுத் தளத்துக்கு முன்பாகவே தென்மராட்சியில் உள்ள பலவீனமான முகாம்களை புலிச்சேனை அள்ளிக்கொண்டு போகவும் கூடும்.

இவற்றையெல்லாம் ஊகித்தே தென்மராட்சியில் பலவீனமான படை முகாம்கள் மூடப்பட்டன.

மாரிகாலம் முடிவடைய முன்பாக ஓயாத அலைகள்-03 வெடிக்கலாம் என்பதே பரவலான எதிர்பார்ப்பாகும்.

'ஜயசிக்குறுய்' சமரில் புளியங்குளம் சண்டைகள் பலமாதங்களாக தொடர்ந்து நடந்தன.

நெடுஞ்சாலை வழியாக புளியங்குளத்தை கைப்பற்ற முடியாத நிலையில், சாலையின் இருபுறத்தாலும் நீண்ட உள் சுற்றுப்பாதையூடாக படையினர் நகர்ந்தனர்.

தற்கான திட்டமும் தீட்டப்பட்டு, பெப்ரவரி 01ல் தாக்குதல் தொடுக்கப்பட்டது. நகரின் மையம்வரை புலிகளின் கையில் வீழ்ந்தது.

ஒருமுனையில் பின் நகர்ந்தபடி மறுமுனையில் முன் பாய்ந்தன புலியணிகள்.

மாங்குளம் பகுதியை கைப்பற்ற கடந்த பெப்ரவரி முதல் படையினர் முயன்று வந்தனர். பல தடவைகள் பாரிய முன் நகர்வு முயற்சிகளும் நடந்தன.

அவ்வாறு இருந்தும் மாங்குளம் பகுதியில் புலிகளது அரண்களை நெருங்க முடியாதிருந்தது.

சண்டையில் தேர்ச்சியும், அனுபவமும் மிக்க புலிகளின் போ-வன் படையணி மாங்குளம் நகர் சண்டைகளில் அரச துருப்புக்களுக்கு சிம்ம சொர்ப்பனமாக விளங்கியது. பாரிய படை நகர்வுகளின்போது கருணா அம்மான் தலைமையிலான ஜயந்தன் படையணியும் முறியடிப்பு சமர் நடத்தியது.

எனினும் ஓயாத அலைகள் 02இன் பின்னர் மாங்குளம் பகுதியில் முன்னர் போன்ற கடும் தரைச் சண்டையை நடத்தாமல் புலியணிகள் பின்நகர்ந்தன.

கிளிநொச்சி முதல் பரந்தன் சந்திவரை கைப்பற்றிய பின்னரே மாங்குளம் பின்நகர்வு நடந்திருக்கிறது.

எனவே, வவுனியா யாழ் சாலையில் படையினர் அடுத்த நகர்வை மேற்கொள்ள வேண்டுமானால் இன்னொரு இழப்பை புலிகளிடம் கொடுத்தாக வேண்டுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

அந்த இழப்பு ஆனையிறவுத் தளமாக இருக்கப்போகிறதா? அல்லது மாங்குளம் முனையிலேயே பலத்த மழைக்கால தாக்குதல் ஒன்று

புலிகளிடம் இருந்தன. விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருக்கவில்லை.

அதனைவிட முக்கியமாக புலிகளிடம் வான் கல வசதியும் இப்போது சேர்ந்திருக்கிறது என்பதும், சமீபத்தில் முல்லையில் ஹெலி பறந்த செய்தியும் முக்கியமான படைபல, கள நிலை மாற்றம் எனலாம்.

சமீபத்திய கிளிநொச்சி சமரின்போது சண்டைகள் நடந்த பிரதேசத்திற்குள் அரச விமானப்படை விமானங்கள் அதிகம் பிரவேசிக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

வான்படை இல்லாமல் புலிகளது தாக்குதலை படைத்தரப்பு எதிர்கொள்வது சிரமமானது என்பதையே கிளிநொச்சி களநிலவரமும் நிரூபித்திருக்கிறது.

கிளிநொச்சி சமரில் ஆயுதங்களையும், நிலப்பகுதியையும் புலிகள் கைப்பற்றியது உடனடி வெற்றி மட்டும்தான். அச் சமரில் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களும், அச் சமரால் ஏற்பட்டுள்ள உற்சாகமும் இனி ஜயசிக்குறுய் களத்தில் ஏற்படுத்தப்போகும் விளைவுகளும் இருக்கின்றன. அதனையும் உள்ளடக்கியே கிளிநொச்சி சமரை மதிப்பிட வேண்டியுள்ளது.

தப்பியோடிய படையினரை தேடி நடக்கும் துரித வேட்டைகள் புலிகளது பாரிய தாக்குதல் பலத்தால் படைத்தரப்பு எதிர்நோக்கும் அச்சுறுத்தலை வெளிப்படுத்துகின்றன.

புலிகளைவிட பல மடங்கு ஆட்பலம் இருந்தும், படைக்கல வசதி இருந்தும், ஆட்பலம் மேலும் தேவைப்படுவதானது புலிகளது சண்டையிடும் ஆற்றல் உயர் நிலையில் உள்ளதையும் காட்டுகிறது.

மழைக்காலம் வடக்கில் பல அரங்குகளில் இடி மின்னல்களை உருவாக்கப் போகிறது.

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



***ஹெலி பறந்து*** போனால் கூடவே கிலி பிடிக்குது. உப்பிடித்தான் போன கிழமை ஹெலியைப் பார்த்ததும் •நண்பர் ஒருத்தர் கேட்டார் பாருங்கோ ஒரு கேள்வி: "உது எந்த எயார் போஸ்?" இந்தக் கேள்வி சாதாரண சனத்துக்கு மட்டுமில்லை, சீருடைத் தரப்பாருக்குள்ளும் அடிக்கடி எழுவதாய்க் கேள்வி!

***வெள்ளம் வரும் முன்னர்*** அணை கட்டாமல், தலைக்குமேல் வெள்ளம் போனபின்னர் ஆரவாரப்பட்டு என்ன பிரயோசனம்? முகத்துவாரம் கடற்கரையில் நடந்த அநியாயங்களும், காடு மண்டிக் கிடந்த சுற்றாடலும் மாநகரசபைக்கும், காவல் துறைக்கும் ஒரு பெண்ணின் மரணத்தின் பின்னர்தானே கண்ணில் தெரிந்திருக்கிறது. அதுவும் பலியானது நாலு பெரிய இடத்தோடு தொடர்புள்ள குடும்பம் என்பதால் இத்தனை பெரிய பிரச்சனையாச்சு. சாதாரண ஆட்கள் என்றால், ஃபைல் குளோஸ். அப்படியே ஒரே அமுக்காக அமுக்கியிருப்பினம்.

***முகத்துவாரம் கடற்கரையில்*** ஒதுங்கி காதல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட பல ஜோடிகள் ரவுடிக் கும்பலிடம் மாட்டியிருக்குதாம். காதலனை கத்திமுனையில் மடக்கிவைத்துக் கொண்டு காதலியை தள்ளிக்கொண்டுபோய் வல்லுறவு கொண்ட பல சம்பவங்கள் நடந்திருக்குதாம். இரகசியக் காதல், இரகசிய சந்திப்பு, அதனால் வெளியே சொல்லமாட்டார்கள் என்ற துணிச்சலில் பலமுறை ருசிகண்டிருக்கிறார்கள். கடற்கரைகள் போன்ற தனிமையான பகுதிகளுக்கு செல்லும் ஜோடிகள் கவனிக்கவும்: தனியான இடம் நாடிப் போகவேண்டாம்!

***அதிகாரத் தரப்பிடம்*** நல்ல பெயர் வாங்குவதில் நிலமானவருக்கும், சம்பந்தமானவருக்கும் இடையே பலத்த போட்டி தலைதூக்கியிருக்கிறதாம். இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருந்தவைக்குள் சின்னச் சின்ன விரிசல். சம்பந்தமானவர் தனியாக தொடர்புகளை வைத்துக் கொள்வதோடு பல காரியங்களையும் சாதிக்கிறாராம். திருவானமலை பொலிஸ் அதிகாரிக்கு கிடைத்த மாற்றல் உத்தரவை மேடத்தோடு பேசி உடனடியாக நிறுத்துமளவுக்கு நேரடித் தொடர்பு உண்டாம். தனக்கு மட்டுமே இருந்த வாய்ப்புக்களை சம்பந்தமானவரும் பெற்று வருவது நிலத்தாருக்கு கசப்பைக் கொடுத்திருக்கிறதாம். சபாஷ்- சரியான போட்டி!

***யாழ் மாநகர*** முதல்வராக நாற்காலியில் அமர 'நிலவுமுக ராசா' ஒற்றைக்காலில் நிற்கிறாராம். உறுப்பினர்களின் கையொப்பம் பெற்று தலைமையிடம் கோரிக்கை விட்டதும் அவர்தானாம். மாலையானால் மப்பும் மந்தாரமுமாக இருப்பவர் மேயரானால் காலை, மாலை, இரவு மூன்று நேரமும் மந்தாரம்தான். காந்திக் கட்சியில் மாபெரும் 'குடிமகன்!'

***யாழ் குடாநாட்டில்*** ராஜா திரையரங்கில் 'ரோஜா' ஓடுகிறது. சிலநாட்கள் ஏதோ காரணத்தால் காட்சிகள் தடைப்பட, 'கடிதம் வந்துவிட்டது போல கிடக்கு!' எண்டு கதை பரவியது. ரெண்டு எழுத்தார் கடிதம் மூலம் அறிவிப்புக்கள் வெளியிடுவதால், இப்போது கடிதம் பற்றித்தான் பேச்சு! 'கடிதம் வந்தாச்சாக்கும்' என்றால் 'ரெண்டு எழுத்தாரின் அறிவித்தல் வந்தாச்சு' என்பதே அர்த்தம். என்பது யாழில் யாவருக்கும் பொதுவான சங்கேத வார்த்தை!

***சீருடையினர் ஆயுதம்*** கொண்டு நடத்தும் நிர்வாகத்தை ரெண்டு எழுத்தார் காகிதம் கொண்டு உடைக்கினம். கடிதம் எழுதுவது காகிதத்தில்தானே! ஆயுதமோ, காகிதமோ, அது ரெண்டு எழுத்தாரின் கையில் இருந்தால் மரியாதையே தனிதான் போல கிடக்கு!

***ஜனநாயகக் கட்சியை*** முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண சபை கட்சி செயலாளர் வசைபாடியவர். சென்றவாரம் ஜனநாயகக் கட்சித் தலைவருக்கு ஐஸ்வைத்து ஃபோனுக்கு மேல் ஃபோன் செய்து நேரம் எடுத்துப்போய் சந்தித்தவராம். பொதுநல சந்திப்பு என்று நினைச்சுப்போடவேண்டாம். 'பொதுத் தேர்தல் தள்ளிவைக்கப்பட அனுமதிக்கக்கூடாது' என்று கேட்கத்தான் போனவராம். பின்னே என்ன, பொதுத் தேர்தல் தள்ளிப்போகப்போக நாற்காலிக் கனவுமல்லோ தள்ளிக்கொண்டுபோகுது! இதுதான் ஐக்கியம்! வாழ்க பொதுநலம்! தனித்து நின்றால் தங்களுக்கு ஓர் ஆசனம்கூடக் கிடைக்காது என்று தெரிந்துதான் 'ஐக்கியம் முக்கியம்' எண்டும் முன்னாள் மாகாணசபைக் கட்சியினர் முழங்கிவருகினம்.

***இவ்வாரப் பொன்மொழி:***

"யாருக்கு முன்னால்
உன் எண்ணங்களை
வெளிப்படையாகச்
சொல்ல முடியுமோ
அவனே
உன் நண்பன்!"



படிப்பகம்

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## மினி முகாம்மீது மகளிர் அணி தாக்குதல்!

**1990** நவம்பர் மாதம் 21ம் திகதி முதல் 27ம் திகதிவரை மாவீரர் தினத்தை புலிகள் வடக்கு-கிழக்கு எங்கும் அனுஷ்டித் தனர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகளின் தலைவர் பிரபாகரன் விசேஷ செய்தி வெளியிடுவது வழக்கம். ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படும் வழக்கம் அது.

மாவீரர் தினத்தில் பிரபாகரன் என்ன கூறுகிறார் என்பதை அறிய உள்நாட்டு, வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் மட்டுமன்றி, அரசும், அதன் உளவுப் பிரிவினரும் கூட தங்கள் காதுகளை தீட்டிக்கொள்வார்கள்.

1990ல் மாவீரர் தினத்தை முன்னிட்டு பிரபாகரன் விடுத்த செய்தியில் இருந்து சில பகுதிகள்:

"எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கிறது. மாவீரர்களின் இறப்புக்கள் ஆத்த மற்ற இறப்புக்கள் அல்ல.

இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் முச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேக மளிக்கும் ஊக்க சக்தியாக அமைந்துவிட்டது.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவியல்ல. அவன் ஒரு இலட்சியவாதி. ஒரு உயரிய இலட்சியத்துக்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் பிறருக்காக, பிறரின் விடிவுக்காக வாழ்பவன்.

'சுதந்திரம்' என்ற உன்னத இலட்சியத்துக்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கவும் துணிகிறான்.

ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண நிகழ்வல்ல. அந்த சாவு ஒரு சரித்திர நிகழ்வு. ஒரு உன்னதமான இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு.

உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை. அவனது உயிராக இயங்கி வந்த இலட்சியத் தீ என்றுமே அணைந்து விடுவதில்லை.

அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்று சக்தியாக மற்றவர்களைப் பற்றிக்கொள்கிறது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பி விடுகிறது.

### ஆசியாக் கண்டத்தில்

தமிழீழ சுதந்திரப் போர் இன்று ஆசியாக் கண்டத்தில் முதன்மையான விடுதலைப் போராட்டமாக சர்வதேசப் புகழ் அடைந்திருக்கிறது.

மூன்றாம் உலகின் ஒடுக்கப்படும் இனங்களுக்கும், அடக்கப்படும் மக்களுக்கும் எமது புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒரு முன்னுதாரணமாக, வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

சிங்கள ஆயுதப் படைகளையும், உலகின் மிகப் பெரிய இந்தியப் படைகளையும் எதிர்த்து தனித்து நின்று போராடி எமது மாவீரர்கள் படைத்த மகத்தான சாதனைகள் உலக வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

நீண்டதும், கடினமானதும், அபாயகரமானதுமான இந்த யுத்தத்தில் எமது விடுதலை வீரர்கள் சந்தித்த இன்னல்களை, இடையூறுகளை, துன்பங்களை எழுத்தில் வடிக்க இயலாது.

### உறுதிக்கு உரம்

இரும்பையொத்த இலட்சிய உறுதியுடன், எதையும் தாங்கும் இதயத்துடன், சாவுக்கு அஞ்சாத வீரத்துடன் எமது வீரர்கள் போராடினார்கள். போர்க்களத்தில் வீர மரணத்தை தழுவினார்கள்.

நான் உயிருக்குயிராக நேசித்த தோழர்கள், என்னுடன் தோளோடு தோள் நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழ்ந்தபோதெல்லாம் என் இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை.

இந்த இழப்புகள் எமது இலட்சிய உறுதிக்கு மேலும் உரமூட்டுகிறது.

இந்த மாவீரர்களை நான் கௌரவிக்கிறேன்.

அவர்களுக்கு சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன். அவர்களது தியாகத்தையும், வீரத்தையும், விடுதலைப் பற்றையும் எண்ணிப்பார்க்கும்போது எனது உள்ளம் பெருமை கொள்கிறது.

இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகிறேன்.


உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்துக்கு உகந்தளித்த பெற்றோர்களாகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும்.

எமது தாய்நாடு விடுதலை பெற வேண்டும். எம்மை பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும். இந்த இலட்சியம் நிறைவேற வேண்டுமாயின் நாம் போராடித்தானாக வேண்டும்.

மரணத்தின் நிழலில் வாழத்தான் வேண்டும்.

நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கிறோம். அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தால் நீர் பாய்ச்சி வளர்க்கிறோம். அந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை ஒருநாள் நனவாக்கும்" என்று தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தார் பிரபாகரன்.

1990 மாவீரர் தினம் நவம்பர் 21 முதல் 27ம் திகதிவரை அனுஷ்டிக்கப்பட்டது. நவம்பர் 22ம் திகதி மாங்குளம் இராணுவ முகாம்மீது தாக்குதல் ஆரம்பமானது. முகாம் தரைமட்டமானது.



மாவீரர்தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பாரிய தாக்குதலாக அது அமைந்தது.

மாங்குளம் முகாம் தாக்குதல் தொடர்பாக முன்னரே விபரித்தாகிவிட்டது.

## "இலட்சியம் நிறைவேற— இரத்தம் சிந்த வேண்டும்"

### மணலாறு தாக்குதல்

மாங்குளம் தாக்குதலுக்கு முன்பாக மணலாறு இராணுவ முகாம்மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு முகாம் தகர்க்கப்பட்டது.

எனினும் மாங்குளம் முகாம் போன்று அது பெரிய முகாம் அல்ல.

வடக்கு-கிழக்கு பிரதேசத்தின் இதயப் பகுதியே மணலாறு. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடத்தி, அதன் பெயரை வெலி ஓயா என்று மாற்றிவிட்டனர்.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத் தொடர்ச்சியை துண்டித்து, இனப் பலத்தை சிதைத்துவிடும் கச்சிதமான திட்டத்தோடு மணலாறு குடியேற்றங்கள் அரசாங்கத்தால் நடத்தப்பட்டன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் மேலும் நுட்பத்தோடு குடியேற்றத் திட்டங்கள் உருவாகின.

திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு பாதுகாப்பாக வேலிபோன்று இராணுவ முகாம்கள், காவலரண்கள் என்பவை தொடர்ச்சியாக நிறுவப்பட்டன.

வடக்கையும், கிழக்கையும் புவியியல் ரீதியாக இணைக்கும் இதயப் பகுதியை குடியேற்ற வெள்ளத்தால் விழுங்கிவிட்டால், தமிழ் பேசும் மக்களின் பலத்தில் பாதி போய்விடும் என்பது தான் சிங்கள அரசியல்வாதிகள் பலரது சூழ்ச்சித்திட்டம்.

ஆயுதப் போராட்டமும், குடியேற்றங்கள் மீதான தாக்குதல்களுமே அந்த சூழ்ச்சித்திட்டம் பெரிதும் தீவிரமாவதை தடுத்து வைத்திருக்கிறது.

தென்னிலங்கையில் பெரும் குற்றங்கள் புரிந்த காடையர்களை தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றினால் தங்கள் பாதுகாப்பை அவர்களே பார்த்துக் கொள்வதோடு, அயலில் உள்ள தமிழ்க் குடும்பங்களையும் அச்சுறுத்தி விரட்டி விடுவர். அவ்வாறு விரட்டப்பட்ட பகுதிகளில் மேலும் குடியேற்றத் திட்டங்களை நடத்தலாம் என்று ஜே.ஆர்.கருதினார்.

வன்னியில் டொலர், கென் பண்ணைகளில் குடியேறிய காடையர்கள்மீது புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து அந்த சூழ்ச்சித் திட்டம் முழு அளவில் வெற்றி பெறவில்லை.

இந்தியப் படை காலத்தில் திருமலையில் சிங்களக் குடியேற்றங்கள்மீது ஈ.பி.ஆர்.எல்.எஃப். தாக்குதல் நடத்தியது. இவை பற்றி முன்னமே கூறப்பட்டுள்ளது.

மணலாற்றுப் பகுதியில் உள்ள குடியேற்றங்கள் மீதும், அங்குள்ள இராணுவ முகாம்கள் மீதும் புலிகள் அடிக்கடி தாக்குதலை நடத்துவது வழக்கம்.

அதன் காரணமாக அரசால் குடியேற்றப்பட்ட பல குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறின. புதிதாக சென்று குடியேறவும் பெருமளவில் முன்வரவில்லை.

அவ்வாறு முன்வந்திருந்தால் வன்னியில் பெரும்பகுதி குடியேற்ற வெள்ளத்தால் அள்ளுண்டு போயிருக்கும்.

### அதிகாலையில்

நவம்பர் முதலாம் திகதி (1990) மணலாறு இராணுவ முகாம்மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

அதிகாலை ஒரு மணியளவில் முகாமை முற்றுகையிட்ட புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினர்.

முதலில் படையினரும் திருப்பித் தாக்கினார்கள்.

காவலரணை உடைத்துக்கொண்டு உட்புகும் முயற்சியில் ஈடுபட்ட புலிகள் சிலர் படையினரின் தாக்குதலால் பலியானார்கள்.

தொடர் தாக்குதலில் காவலரண்கள் வீழ்ந்தன. புலியணிகள் முகாம்மீது பலத்த தாக்குதலை தொடுத்தபடி உட்பிரவேசித்தன.

புலிகளின் கை ஓங்கியதால் படையினர் முகாமைவிட்டு பின்வாங்க ஆரம்பித்தனர்.

முற்றுகையை உடைத்துக்கொண்டு வெளியேறுவதற்காக படையினர் தங்கள் சுடுபலத்தை பிரயோகித்தனர்.

இறுதியில் முகாம் புலிகளின் கையில் வீழ்ந்தது. அங்கிருந்த ஆயுத தளபாடங்களை கைப்பற்றிய புலிகள் முகாமை தரைமட்டமாக்கினர்.

புலிகளின் தாக்குதலில் மணலாறு முகாமுக்கு அருகில் குடியிருந்த பத்துப்பேர்வரையான குடியேற்றவாசிகளும் பலியாகினர். பலியானோரில் பதினைந்து படையினரின் உடல்கள் முகாம் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டன. இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் மேஜர் சங்கர் (நவலோகிதன்-திருமலை), இரண்டாம் லெப்ரினன்ட் மதுவன் (தவராஜசிங்கம்- யாழ்ப்பாணம்), முசோலினி (ஆபிரகாம்- மூதூர்) ஆகியோர் பலியாகினர்.

### மகளிர் அணி பாய்ச்சல்

03.11.90 அன்று யாழ் குடாநாட்டில் மாவிட்டபுரத்தில் இருந்த மினிமுகாம் ஒன்று விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது.

இத்தாக்குதலில் புலிகளின் மகளிர் படையணியே பங்குகொண்டது.

முகாம் தாக்குதல் ஒன்றில் தாம் ஈடுபட வேண்டும் என்று பெண்கள் அணியினர் தலைமையை கேட்டுக்கொண்டிருந்தனர்.

மாவிட்டபுரம் மினி முகாமை தாக்குதலுக்கான தலைமையை பெண்புலியிடம் ஒப்படைத்தார் பிரபாகரன்.

மேஜர் சஞ்சிகா என்னும் பெண்புலியின் தலைமையில் பெண் படையணியினரும், ஆண்கள் படையணியும் முகாம்மீது தாக்குதல் தொடுத்தனர்.

தாக்குதலின் ஆரம்பத்தில் படையினரின் கை மேலோங்கியது. உஷாராகி தற்காப்புத் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தனர்.

பாரிய முகாம்கள் பின் தளமாக இருந்தமையால் அங்கிருந்து உதவி வரும்வரை தாக்குப் பிடிக்கும் நம்பிக்கையோடு படையினர் சண்டையிட்டனர்.

அதனால் சண்டை தீவிரம் அடைந்தது. மேஜர் சஞ்சிகா தனது அணிக்கு உக்கிரமாக தாக்குமாறு கட்டளை பிறப்பித்தார்.

முகாமை தாக்கி முடிக்காமல் திரும்புவதில்லை என்று தனது அணிக்கு உற்சாகம் கொடுத்தபடி தானே முன்னால் நின்று தாக்குதல் நடத்தியபடி முன்னேறினர். பலத்த சண்டையின் பின்னர் மினிமுகாம் புலிகள் வசம் வீழ்ந்தது.

முகாமில் இருந்து படையினர் பின்வாங்கினர். அங்கிருந்த ஆயுதங்களும், பதினொரு படையினரின் உடல்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய மேஜர் சஞ்சிகா (கலைச் செல்வி சுந்தரராஜ்- கரவெட்டி) மோதலில் பலியானார். அவர் தவிர கப்டன் அருந்ததி, லெப்ரினன்ட் காஞ்சனா ஆகிய பெண்புலிகளும், ஒன்பது ஆண் புலிகளும் பலியாகினர்.

### மன்னார் மோதல்

1990 நவம்பர் 03ம் திகதி மன்னாரில் பாரிய படை நகர்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும், வான்மார்க்கமாகவும் படையினரின் நடவடிக்கை ஆரம்பமானது.

விமானத்தில் இருந்து கிராமங்களில் படையினரை இறக்கும் முயற்சிகளும் நடந்தன. இறங்கும் படையினருக்கு உதவியாக ஹெலிகளில் இருந்து துப்பாக்கிகள் ரவைகளை கக்கிக் கொண்டிருந்தன. குண்டுவீச்சு விமானங்களும் குண்டுகளை கொட்டிக் கொண்டிருந்தன.

புலிகள் பதில் தாக்குதல் நடத்தியவண்ணம் இருந்தனர்.

விடத்தல்தீவில் குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு குண்டுகளை தள்ளிக் கொண்டிருந்தன. இக் குண்டுவீச்சில் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சுவாம்பிள்ளை தேவா என்னும் பொதுமகன் பலியானார். பலர் காயமடைந்தனர். பலவீடுகள் நாசமாகின.

### புலிகள் குற்றச்சாட்டு

கிழக்கில் முஸ்லிம் மக்கள்மீது புலிகள் நடத்திய தாக்குதல்களும், வடக்கில் இருந்து முஸ்லிம் மக்களை விரட்டியது தொடர்பாகவும் புலிகள்மீது கண்டனம் தொடுக்கப்பட்டது.

இதனையடுத்து 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் கிழக்கு நிலை தொடர்பாக ஒரு கட்டுரை வெளியானது.

முஸ்லிம்மக்கள் மீதான தாக்குதல்களுக்கோ, வடக்கில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றிய தற்கோ உத்தியோகபூர்வ மாக காரணம் எதையும் புலிகள் கூறவில்லை.

ஆனால் தமது செயலுக்கு காரணம் கூறுவதைப்போன்றே 'விடுதலைப் புலிகளில்' வெளியான கட்டுரை அமைந்திருந்தது.

அக் கட்டுரையின் முக்கிய பகுதிகள் சில:

"கடந்த ஆனி மாதம் (11.06.90) தொடங்கிய தமிழீழ- சிறீலங்கா போரைத் தொடர்ந்து அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை போன்ற பகுதிகளில் ஆயுதம் தாங்கிய முஸ்லிம் குழுக்களால் தமிழர்கள் கூட்டம் கூட்டமாக படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

ஸ்ரீலங்கா படையுடன் போர் தொடங்கிய சில நாட்களில் தமிழ்ப் பகுதிகளை நோக்கி படை நகரத் தொடங்கியதும், அவர்களுடன் இணைந்து ஜிகாத் என்ற பெயரில் முஸ்லிம் காங்கிரசின் குழுவினர் தமிழ் மக்களை படுகொலை செய்தனர். தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர்.

ஸ்ரீலங்கா அரசின் தூண்டுதலின்பேரில் முஸ்லிம் காங்கிரசினால் ஊர்காவற்படைகள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு நவீனரக ஆயுதங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா அரச படைகளுடன் சேர்ந்து இவர்கள் நடத்திய வெறியாட்டத்தால் சுமார் நாலு இலட்சம் மக்கள் கிழக்கில் அகதிகளாயினர், அவதிக்குள்ளாயினர்.

கிழக்கில் கொல்லப்பட்ட சுமார் நாலாயிரம் தமிழர்களில் இரண்டாயிரம்பேர்வரை முஸ்லிம் குழுக்களாலேயே கொல்லப்பட்டனர்.

இருந்தபோதும் எமது இயக்கத்தின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த வடமாகாணத்தில் எந்த ஒரு முஸ்லிமும் கொல்லப் படவும் இல்லை. பாலியல் வன்முறைக்கு உள்ளாகவும் இல்லை.

தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம்களையும் முழுமையாக இணைத்து போராட்டத்தை நடத்த எண்ணினோம். அவர்களை அணிதிரட்ட முயன்றோம்.

அரசியலமைப்பு ரீதியாக எந்தக் காலத்திலும் நிலைத்திருக்கக்கூடிய விதத்தில் முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாக்க முடிவெடுத்து, அதைப் பகிரங்கமாக அறிவித்து செயற்பட்டு வந்தோம்.

ஆனாலும் முஸ்லிம் காங்கிரசின் தலைமை முஸ்லிம்களுக்கு மதவெறியூட்டி, தனது ஆயுதக் குழுவை தமிழர்கள்மீது ஏவிவிட்டது.

பாண்டிருப்பு, கல்முனை, வீரமுனை, சொறிகல்முனை... போன்ற அம்பாறை மாவட்ட தமிழ்க் கிராமங்களை பூண்டோடு அழித்து அவற்றை அபகரிக்கும் திட்டமும் செயற்படுத்தப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் (தென்தமிழீழம்) பெரும் பகுதியில் முஸ்லிம் தீவிரவாத குழுக்களால் தமிழர்கள் தமது சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டுள்ளனர்." என்று 'விடுதலைப் புலிகள்' தெரிவித்திருந்தது.

எனினும் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியதற்கு விடுதலைப் புலிகள் பத்திரிகையிலும் சரியான காரணம் எதுவும் கூறப்படவில்லை.

*(தொடர்ந்து வரும்)*

www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# சாத்தியமாகாத ஐக்கிய வியூகம்

கிளிநொச்சி சமரில் பெரும் தொகையான படையினர் பலியாகியுள்ளனர். அவர்களில் ஒருபகுதியினரது உடல்கள் வீடுகளுக்கும் அனுப்பப்பட்டிருந்தன.

மிகப் பாரிய பேரழிவு பற்றிய செய்திகள் தென்னிலங்கையில் இருவிதமான எண்ணப்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

இனவாத சிந்தனைக்கு அப்பால் உண்மையான நிலவரங்களை எடைபோடுகின்றவர்கள் புலிகளை வெல்ல முடியாது என்றும், இராணுவத்தீர்வு வெற்றியளிக்காது என்றும் நன்கு அறிந்துள்ளனர்.

முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரிகுணத்திலக இராணுவ ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர். ஐ.தே.கட்சிக் காலத்திலும் இராணுவ நடவடிக்கைகளது பலாபலன்கள் தொடர்பான விமர்சனங்களை கூறி வந்திருக்கிறார்.

அப்போது எதிர்க்கட்சியாக இருந்த பொதுஜன முன்னணியினருக்கு, ஐ.தே.கட்சி அரசின் இராணுவ நடவடிக்கைகளின் தோல்விகளை எடுத்துக்காட்டிய ஹரி குணத்திலகவின் ஆய்வுகள் இனிப்பாக அமைந்திருந்தன.

தற்போது பொதுஜன முன்னணி அரசின் இராணுவத் தோல்விகள் அவரால் விமர்சிக்கப்பட்டு வருகின்றன. அதனைக் கவனத்தில் எடுக்கவோ, தங்கள் பலம் பலவீனங்களை வெளியே கூறுவதற்கோ ஆட்சியாளர்கள் முன்வரவில்லை.

கிளிநொச்சி நகரைப் பாரிய பேரழிவுடன் பறிகொடுத்த பின்னர் மாங்குளத்தை கைப்பற்றியமை போர்த்தந்திர ரீதியில் முக்கியமானதல்ல என்றும், ஒரடி முன்வைத்தால் மூன்றடி பின்னால் செல்லும் நிலையே இருப்பதாகவும் ஹரி குணத்திலக கூறியிருக்கிறார்.

ஹரி குணத்திலக மட்டுமல்லாமல் பக்கச் சார்பற்ற நோக்காளர்களான சிங்கள, ஆங்கில பத்திரிகையாளர்கள் பலரும் அரசின் இராணுவத்தீர்வு முனைப்பு சாத்தியமானதல்ல என்றே கூறிவருகின்றனர்.

ஆனால் பேரினவாத விமர்சகர்களும், மற்றும் பேரினவாத சக்திகளும் என்ன விலை கொடுத்தாவது யுத்தத்தில் தமிழர் தரப்பை வெற்றிகண்டாக வேண்டும் என்றும், ஆகவே கிளிநொச்சிச் சமரில் ஏற்பட்ட இழப்புக்கள் அவசியமானவையே என்றும், மேலும் திட்டமிட்டு, நுட்பமாக போரை நடத்த வேண்டும் என்றும் கூறிவருகின்றன.

இந்த இரண்டாவது மனநிலைதான் சமீபத்திய பேரழிவின் தாக்கத்தை சிங்கள மக்கள் முழுமையாக உணரவிடாது தடுத்தும் இருக்கிறது. அதனால் ஆட்சியாளர்களையும் சிங்கள மக்களின் அதிருப்தி பார்வைகளில் இருந்து கேடயமாக பாதுகாத்தும் இருக்கிறது.

பலியான படையினருக்கு அஞ்சலி தெரிவித்து தெற்கில் கட்டப்படும் பதாகைகளில் நாட்டைக் காக்க மரணித்த வீரர்கள் என்றே வாசகங்கள் காணப்படுகின்றன.

பலியான படைவீரர்களுக்கு ஆட்சியாளரால் எழுப்பப்படும் நினைவுத் தூபிகளிலும், நினைவு நிகழ்வுகளிலும் தாய்நாட்டை காக்கும் போரில் பலியான வீரர்களாகவே குறிப்பிடப்படுகின்றனர்.

தேசிய வீரர்கள் தினம் என்று ஆண்டுதோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. வடக்கு-கிழக்கு போரில் பலியான படையினரே இந் நிகழ்வில் நினைவுகூரப்படுகின்றனர்.

புலிகளின் மாவீரர் தினத்துக்கு போட்டியான ஒன்றாகவே இந்த தேசிய வீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

1971ம் ஆண்டிலும், 1987 முதல் 1989ம் ஆண்டுவரையும் தென்னிலங்கையில் ஜே.வி.பி.யினரின் ஆயுதக் கிளர்ச்சிகள் இடம்பெற்றன.

இக் கிளர்ச்சிகளில் பல நூற்றுக்கணக்கான படையினர் ஜே.வி.பி.யினரால் கொல்லப்பட்டனர். முகாம்களும் தாக்குதலுக்கு உள்ளாகின. சாதாரண பொதுமக்களும் ஜே.வி.பி.யினரால் பலியாகினர்.

1971ல் சிறிமாவோ அம்மையார் தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியும், 1987 முதல் 1989 வரை ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியும் ஜே.வி.பி. கிளர்ச்சியை ஈவிரக்கமின்றி ஒடுக்கியிருந்தன.

ஜே.வி.பி.யினருடன் நடைபெற்ற மோதல்களில் பலியான படையினரோ, பொலிசாரோ இன்றுவரை தேசிய வீரர்களாகக் குறிப்பிடப்படவில்லை.

ஜே.வி.பி.யினருடன் நடைபெற்ற சண்டைகளில் படையினர் பலியானபோது 'தாய் நாட்டைக் காக்கப் போராடிய வீரர்கள்' என்று குறிப்பிட்டு வெள்ளைப் பதாகைகள் எதுவும் கட்டப்படவுமில்லை.

இத்தகைய நிகழ்வுகள் ஒரு உண்மையை தெட்டத்தெளிவாக புலப்படுத்தி நிற்கின்றன.

ஜே.வி.பி.கிளர்ச்சியும், ஜே.வி.பி.யினருக்கும் படையினருக்கும் இடையேயான மோதல்களும் ஒரே இனத்துக்குள், ஒரே நாட்டுக்குள் நடைபெற்ற உள்நாட்டு மோதலாகவே கருதப்பட்டு வருகிறது.

உள்நாட்டு மோதலில் பலியாகும் படை வீரர்களுக்கோ, பொலிசாருக்கோ நினைவுத் தூபிகள் எழுப்புவது மரபாக இருப்பதில்லை.

ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளை பயங்கரவாதம் என்று ஆட்சியாளர்கள் கூறினாலும்கூட, ஜே.வி.பி.யால் தாய்நாட்டுக்கு ஆபத்து என்றோ, தாய் நாட்டை காக்க ஜே.வி.பி.யுடன் போர் நடப்பதாகவோ கூறத் தலைப்பட்டதில்லை.

தங்கள் இனத்தைச் சேர்ந்த சிலர் தவறான வழிநடத்தலில் சென்று கொண்டிருப்பதாகவே ஜே.வி.பி. கிளர்ச்சி ஆட்சியாளர்களால் நோக்கப்பட்டது. ஜே.வி.பி.யை தோற்கடிக்குமாறு பௌத்த மத பீடங்கள் ஒன்றுகூடி அறைகூவல் விடுக்கவுமில்லை.

எனவே, வடக்கு-கிழக்கு யுத்தம் என்பது உள்நாட்டுப் போராக அல்லாமல், இன்னொரு நாட்டுடன், இன்னொரு இனத்துடன் நடைபெறும் போராகவும், இதில் ஏற்படும்வெற்றி, தோல்விகள் இன கௌரவம் சார்ந்த ஒன்றாகவுமே பேரினவாத சக்திகளால் நோக்கப்பட்டு வருகிறது.

இன்னொரு விடயமும் நன்கு உற்று நோக்கத்தக்கதாகும். இதுவரைகால யுத்தத்தில் தமிழ் பொலிஸ் அதிகாரிகள் பலரும் பலியாகியுள்ளனர்.

ஆயுதப் போராட்டத்தை முளையிலேயே கிள்ளி எறிவதற்காக ஆரம்பத்தில் முழு மூச்சாக முயன்றவர்கள் தமிழ் பொலிஸ் அதிகாரிகளே. இன்ஸ்பெக்டர்கள் பஸ்தியாம்பிள்ளை, பத்மநாதன், குருசாமி, குமார் உட்பட பலர் இயக்கங்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

எந்த ஆட்சியாளர்களும் இவ்வாறான தமிழ் அதிகாரிகளை தேசிய வீரர்களாக கௌரவிக்கவும் இல்லை. நினைவுத் தூபிகளும் எழுப்பவுமில்லை.

புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று திரையை தொங்கவிட்டுக்கொண்டு, அந்தத் திரைமறைவில் பேரினவாத சிந்தனைகளின் அபிலாசைகளுக்கு ஏற்ற யுத்தம் ஒன்றே நடத்தப்பட்டு வருகிறது.

தலைநகர ஆங்கில தினசரி ஒன்றில் எழுதப்பட்டுள்ள ஆசிரியர் தலையங்கம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

"அரசும், எதிர்க்கட்சியும் ஒன்று சேர்ந்து நின்று, தங்கள் அரசியல் பேதங்களை மறந்து நாட்டைக்காக்க முன்வரவேண்டும். புலிகளைத் தோற்கடிக்க வேண்டும்!" என்ற சாரப்பட அந்த ஆசிரியர் தலையங்கம் தீட்டப்பட்டிருந்தது.



உதட்டில் புன்னகை. உள்ளத்தில் அரசியல்பகை.

பேரினவாத சிந்தனையை முன்நிறுத்தி வரும் குறிப்பிட்ட பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் அரசியல் தீர்வை வலியுறுத்தவில்லை.

'நடவடிக்கைக்கான தருணம் இது!' என்ற தலைப்பில் தீட்டப்பட்டுள்ள அத் தலையங்கத்தில், கிளிநொச்சி சமர் பேரினவாத சக்திகளுக்கு ஏற்படுத்தியுள்ள அதிர்ச்சியையும் காணக்கூடியதாகவுள்ளது.

நாட்டின் இனப்பிரச்சனைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஆளும் தரப்பையும், எதிர்க் கட்சியையும் ஒன்றுபடுமாறு கோருவதற்கு சிங்கள மக்களிடம் பிரபலமான மத, சமூக நிறுவனங்கள் எதுவும் இதுவரை முன்வந்ததில்லை.

சிறு அமைப்புக்களும், விரல் விட்டு எண்ணத்தக்க சிங்கள புத்திஜீவிகள் சிலருமே இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வின் அவசியம் பற்றி ஆரோக்கியமான கண்ணோட்டங்களை கூறிவருகின்றனர். ஆனால் இவர்களால் தென்னிலங்கை அரசியல் போக்கில் தீர்க்கமான பாத்திரம் வகிக்க முடியாமல் உள்ளது.

இந்நிலையில் பேரினவாதமே முன்னெப்போதையும்விட வேகமாக வளர்ந்து வருகிறது.

ஆளும் கட்சியையும், எதிர்க் கட்சியையும் ஒன்றுபடுமாறு பேரினவாத முகாமில் இருந்து உரத்த குரல் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

ஆளும் கட்சி சார்பாகவோ, அல்லது எதிர்க்கட்சி சார்பாகவோ நின்று யுத்தத்தை விமர்சிக்கும் போக்குக்கு பதிலாக, பேதங்களை மறந்து போரை முன்னெடுக்க வேண்டும் என்பதே பேரினவாத புத்திஜீவிகள் கூறும் வியூகமாகும்.

சிங்களவர்கள் என்ற இன உணர்வுடன் ஒன்றுபடுங்கள் என்று இருபெரும் கட்சிகளிடமும் கூறாமல் கூறுகின்றனர்.

வெளிப்படையாகவே அவ்வாறு கூறினால் போருக்கு உலக உதவிகள் கிடைக்காமல் போய்விடும் என்பதால் 'தாய்நாட்டுக்கு ஆபத்து', 'தாய் நாட்டைப் பாதுகாப்பது' போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றுவருகின்றன.

கிளிநொச்சியில் இடம்பெற்ற சமரில் ஏற்பட்ட தோல்வியை குறிப்பிட்ட ஆங்கிலப் பத்திரிகை 'தேசிய அவமானம்' என்று விபரித்திருக்கிறது. இதனைவிட மிக உயர்ந்த பேரினவாத விளக்கம் எதுவும் இருக்க முடியாது.

இன்னொரு நாட்டிடம் தோல்வி காண்பதையே 'தேசிய அவமானம்' என்று கூறுவது வழக்கமாகும்.

போரை நடத்தும் முறையைத்தான் விமர்ச்சிக்கிறோம், படையினரை அல்ல என்றுதான் எதிர்க்கட்சியும் கூறிவருகிறது.

போர் முனையிலுள்ள படையினர் பற்றி தகவல் அறிந்து கூறும் மையம் ஒன்றையும் எதிர்க்கட்சி ஆரம்பித்துள்ளது.

படையினரை விமர்சிப்பதோ, அவர்கள் தோல்வி பெற்றுள்ளதாக கூறுவதோ தேசப்பற்று இல்லாத செயலாகவே கருதப்படுகிறது.

ஆனால் ஜே.வி.பி. காலத்தில் படை நடவடிக்கையில் ஏற்பட்ட தவறுகளையும் அத்துமீறல்களையும் விமர்சிப்பதோ, வெளிப்படுத்தி கண்டிப்பதோ தேசப்பற்றில்லாத நடவடிக்கையாக கொள்ளப்படவில்லை.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் படையினரை பகிரங்கமாகவே காரசாரமாக கண்டித்து திருமதி சந்திரிக்கா குமாரதுங்கா உரையாற்றினார்.

வடக்கு-கிழக்கில் செம்மணிப் புதைகுழிகள் விவகாரத்தில் படையினரை இன்று எதிர்க்கட்சி அதே காரசாரத்துடன் கண்டிக்குமானால் தேசத்துரோகிகள் என்று ஆளும் கட்சி குற்றஞ்சாட்டும். பேரினவாதிகளும் கிளர்ந்தெழுவர்.

யுத்தம் பற்றி எதிரணி விமர்சித்ததற்காக 'நாய்கள்' என்று உவமானம் கூறி பதிலடி கொடுக்குமளவுக்கு இன்று நிலமை மாறியுள்ளதையும் நாம் உற்று நோக்கியாக வேண்டும். அந்த உவமானத்தை ஜனாதிபதியே கூறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் படையினரையும் எதிர்க்கட்சி விமர்சித்தால் பேய்கள் என்று கூறி, அவர்களை விரட்ட ஆணை பிறப்பிக்கப்படலாம்.

ஆனால் பேரினவாதிகளின் ஐக்கிய வியூகம் சாத்தியமாகக்கூடியதல்ல. தென்னிலங்கை அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை பேரினவாதமும், சுயநல அரசியலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையாகும்.

சுயநல அரசியலே பேரினவாதம் வளருவதற்கும் தூபம்போட்டு வருகிறது. இந்நிலையில் பிரதான கட்சிகள் இரண்டும் ஒருபோதும் எவ்விதத்திலும் ஒன்றுபடப்போவதில்லை.

அதுதவிர இன்றைய யுத்தம் என்பது பொதுஜன முன்னணியின் தேர்தல் வியூகமாகவும் மாறி இருக்கிறது. எனவே ஆளும் அணியுடன் ஒத்துழைப்பது தமது தோல்விக்கான பலிக்களத்தில் எதிரணி தாமாக முன்வந்து தலையைக் கொடுப்பது போன்றதே.

இந்த முரண்பாடு தமிழ் பேசும் தரப்புக்கு பயன்தரத்தக்கதாகும். கிளிநொச்சி சமர் தொடர்பான பல தகவல்கள் தணிக்கையை மீறி வெளியானதற்கும் எதிரணியே காரணமாகும்.

கொழும்புக் கைதுகள் தொடர்பாகவும் எதிரணித் தலைவர் ரணில் சமீபத்தில் கண்டனம் செய்திருந்தார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியிலும் ஆட்சியாளரின் போக்கை ரணில் விமர்சித்து வருகிறார்.

எனவே, தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டுக்கும் இடையே உள்ள முரண்பாடு பெரிதாகும் போதுதான், தமிழ் பேசும் தரப்பின் பக்கமுள்ள நியாயம் ஏதாவது ஒரு வகையில் வெளியுலகுக்கும் தெரியவருகிறது.

இந்த முரண்பாட்டை களைந்து இரு பிரதான கட்சிகளையும் ஒன்றுபடுத்தும் பேரினவாத வியூகம் தோல்வியைத் தழுவுவது தவிர்க்க முடியாதது.

இலங்கைத்தீவில் தேசிய இனப் பிரச்சனை வளர்ந்ததுக்கும், சிக்கலானதுக்கும் சுயநல அரசியலே காரணமாகும். இன்று தீராமல் இருப்பதற்கும் அதுவே காரணமாகும். அதேபோல பேரினவாத முகாமில் ஐக்கியம் ஏற்படாதிருக்கவும் சுயநல அரசியலே காரணமாக இருக்கிறது.

ஐக்கியம் ஏற்பட்டிருந்தால் இன்றுள்ளதைவிட கூடுதலான அழுத்தங்களை தமிழ் பேசும் தரப்பு முகம் கொடுக்கும் நிலை தோன்றியிருக்கும். என்பதையும் மறந்துவிடலாகாது!

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

# தமிழரிடம் பணம் இருந்தால் ஆயுதம் வாங்க!

"புலிகளை ஜனநாயக கோட்பாடுகளை மதித்து நடக்குமாறு கோருக என்று உலகத் தலைவர்களிடம் கோரிக்கை. யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபை தலைவர்களும் உறுப்பினர்களும் கையொப்பம் இட்டு உலகத் தலைவர்களுக்கு மனு."

இப்படி ஒரு செய்தி தலைநகர தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் வெளியானது. அதனைவிட அரசின் ரூபவாஹினியில் தலைப்புச் செய்தியாக கூறப்பட்டது.

அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை. உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் கையொப்பம் போடவும் இல்லை.

கலப்படமில்லாத பொய் செய்திகள் என்றால் ரூபவாஹினிக்கு அப்படி என்ன அலாதிப் பிரியம்?

மனு ஒன்று அனுப்பப்பட்டதா கையொப்பம் இடப்பட்டதா? என்றுகூட ஆராயாமல் செய்தி போட்டுவிட்டனர்.

யாழ் நகரில் உள்ள ஒரு நிருபர் செய்தியை முந்திக்கொடுக்கும் ஆர்வத்தில் தன் காதில் விழுந்த செய்தியை தீர ஆராயாமல் செய்தியாக அனுப்பிவிட்டார். அதுதான் பத்திரிகையில் பிரசுரமாகியது. ரூபவாஹினியும் அதனை எடுத்து, அரசுக்கு இலவச பிரசாரமாக கிடைத்த செய்தி என்ற சந்தோசத்தில் தான் கிளப்பிவிட்டது.

### பொய்ச் செய்தி நம்பர் 02

"கொழும்பில் 10 இலட்சம் அமெரிக்க டொலர்களுடன் தமிழர் ஒருவர் கைது. புலிகளுக்கு ஆயுதம் வாங்க வைத்திருந்த பணம் என்று சந்தேகம்" என்று ரூபவாஹினி கூறியது.

ஆயுதம் வாங்க வேண்டுமானால் கொழும்பில் ஏன் பணம் வைத்திருக்க வேண்டும்? அதுவும் டொலர்களாக வைத்திருந்து என்ன செய்வது? சட்டப்படி வெளிநாட்டுக்கு அனுப்பக்கூட முடியாதே!

எதனையும் சிந்தித்துப் பாராமல் தமிழர் என்றால் புலி, அந்தத் தமிழரிடம் பணம் இருந்தால் புலிகளுக்கு ஆயுதம் வாங்கப் பணம் என்ற ரீதியில்தான் பாதுகாப்புத் தரப்பும், அரச தகவல் தொடர்பு சாதனங்களும் சிந்திக்கின்றன.

பரபரப்பாக செய்தி வெளியிட்டு நான்கு நாட்களின் பின்னர் உண்மை வெளியானது. அத்தனையும் போலியான அமெரிக்க டொலர்கள்!

அதனைப் பற்றி ரூபவாஹினி மூச்சுக் காட்டவில்லை! தவறுக்கு வருந்துவதும் இல்லை. மேற்கொண்டு திருந்துவதும் இல்லை.

முன்னர் கொழும்பு பொலிஸ் அதிபராக கொட்டகதெனியா கடமையாற்றியபோது, தமிழ வர்த்தகர்கள் சிலர் கைதானார்கள். உண்டியல் எனப்படும் பணப் பரிமாற்றத் தொழில் செய்தவர்கள் அவர்கள்.

பெரும்தொகையான பணத்துடன் புலிகள் கைது. செல்டெல் தொலைபேசியும் கைப்பற்றப்பட்டது என்று செய்திகள் கூறப்பட்டன.

பின்னர் காதும் காதும் வைத்தமாதிரி அத்தனைபேரும் விடுதலையாகினர். தாங்கள் புலிகளல்ல என்பதை நிரூபிக்க கவனிக்க வேண்டியவர்களுக்கு அபிஷேகம் செய்துதான் விடுதலையாகினர். இலட்சார்ச்சனை!

### பொய்ச் செய்தி நம்பர் 03

'கண்டியில் இராணுவ சீருடை வைத்திருந்த வர்த்தகர் கைது!' இது கைது செய்தவர்கள் கூறிய செய்தி.

கண்டியில் கொட்டு கொடல்ல வீதியில் ஆடை விற்பனை நிலையம் ஒன்று இருந்தது.

கடைக்காரருடன் விரோதம் உள்ள யாரோ ஒருவர் அக்கடையில் இராணுவச் சீருடைகள் இருப்பதாகத் தகவல் கொடுத்துவிட்டார் போலிருக்கிறது.

விரைந்த பொலிசார் கடையை முற்றுகையிட்டு, 39 ஜேக்கின்களை கைப்பற்றினர். சீருடையை ஒத்த நிறத்தில் இருந்தனவே தவிர சீருடைகள் அல்ல. அப்படியிருந்தும் வர்த்தகரை கைது செய்ததுடன் பெரிதாக செய்தியும் சொல்லப்பட்டது.

வர்த்தகர் தமிழராக இருந்தமையால் சாதாரண ஜேக்கின்கூட இராணுவ சீருடையாகிவிட்டது.

பின்னர் வர்த்தகர் விடுதலையானார். அதுபற்றி மட்டும் மூச்!


படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 32

# இடி அமீன்

**கடந்தவாரம்**

**அமீனுக்கு அழகிகளை அனுப்பி வைக்கின்றனர் படை அதிகாரிகள். அமீனிடம் நற்பெயர் எடுக்க போட்டி போடுகின்றனர். ஒபேடேயின் கிளர்ச்சிப் படை எல்லைப் பகுதியில் இரு முகாம்களைத் தாக்குகிறது. தாக்குதலை முறியடிக்காத அந்த முகாம் பொறுப்பதிகாரிகள் இருவரும் அமீனால் கொல்லப்படுகின்றனர்.**

**இனி....**

உகண்டாவின் போக்குவரத்து அமைச்சர் தனது அலுவலகத்திற்கு வழக்கம் போல காலையில் சென்றார்.

காரில் இருந்து இறங்கும்போது பணியாளர் ஒருவர் எதிரே ஓடிவந்தார்.

"ஐயா அவர்களே! உங்கள் பதவி இன்று காலையில் காலியாகிவிட்டது! வானொலியில் **கூறினார்கள்!"** என்றார் பணியாளர்.

அமைச்சருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. வெட்கமாக வேறு இருந்தது.

அதிர்ச்சியை பணியாளருக்குக் காண்பிக்கக்கூடாதே என்று "ஒ.கே. பரவாயில்லை. நான் வருகிறேன்...!" என்று காரில் ஏறப்போனபோது, அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது.

"மன்னிக்க வேண்டும், உங்கள் காரை இங்கேயே விட்டுச் செல்ல வேண்டும் என்பது உத்தரவு..." என்றான் பணியாளர்.

அமைச்சருக்கு அழுகை வந்துவிட்டது. நடுவீதியில் வைத்து நிர்வாணமாக்குவது போலிருந்தது.

காரையும், சாரதியையும் விட்டுவிட்டு விடுவிடுவென்று நடந்து போய்விட்டார்.

போக்குவரத்து அமைச்சருக்கு மட்டுமல்ல, வேறும் பல அமைச்சர்களுக்கு இத்தகைய அனுபவம் ஏற்பட்டது.

கல்வி அமைச்சருக்கு ஏற்பட்ட அனுபவம் வேறு விதமாக இருந்தது.

தனது செயலாளருடன் இடி அமீனைச் சந்திக்கச் சென்றார். செயலாளர் அழகான இளம் பெண்ணாக இருந்ததுதான் பிரச்சனையாகிவிட்டது.

தன் மேசையின் முன்பாக இருந்த நாற்காலிகளில் அமைச்சரையும், செயலாளரையும் அமருமாறு கூறினான் அமீன்.

தன் அமைச்சு சம்பந்தப்பட்ட தகவல்களை கல்வியமைச்சர் கூறிக் கொண்டிருக்க அமீனின் பார்வை அவரது செயலாளரின் மீதுதான் தாவிக்கொண்டிருந்தது.

கழுத்துக்கீழே செழிப்பாக இருந்த பிரதேச விஸ்தீரணம் இடி அமீனை இடறிக் கொண்டிருந்தது.

அமைச்சருடன் பேசிக்கொண்டே தன் கால்களை மேசைக்குக்கீழே நீட்டி, அவளது கால்களை உரசினான்.

அவள் முகத்தில் கலவர ரேகைகள் எட்டிப்பார்த்தன. பயத்தோடு அமீனை நோக்கினாள். ஒருவேளை தற்செயலாக கால்பட்டிருக்குமோ என்று அவள் நினைத்தாள்.

அமீனின் கால்விரல்கள் அவள் காலை வருடின. தற்செயல் அல்ல என்று தெரிந்துவிட்டது.

அப்படியே அமர்ந்திருந்து, எதுவும் நடக்காதது போல, அவர்கள் பேசுவதைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள்.

அமீனின் கால் மேலும் மேலும் உயர்ந்து கொண்டிருந்தது. அவளுக்குக் கூச்சமாகவும், குறு குறுப்பாகவும் இருந்தது. அமைச்சர் தன் பாட்டுக்கு ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.

இடையே குறுக்கிட்ட அமீன், **"உமது அமைச்சு செலவுக்கு பணம் போதவில்லை; அவ்வளவு தானே?"** என்றான்.

"ஆம் அதிபர் அவர்களே!" என்றார். தன் செயலாளர் சியம்பாவை அழைத்து, "இவர் கேட்கும் நிதி வசதியைச் செய்து கொடும்!" என்றான்.

கல்வி அமைச்சர் எழுந்தார். செயலாளரும் எழ, **"நீ இரு!"** என்றான் அமீன். கல்வி அமைச்சர் கலவரமாகப் பார்க்க, "கல்வித் திட்டத்தைப் பற்றி அடிமுதல் நுனிவரை ஆராய்ந்து பார்க்கப் போகிறேன்..." என்றான்.

அமைச்சருக்குப் புரிந்துவிட்டது. செயலாளருடன் சென்றவர் தனியாளாக வெளியே சென்றார்.

அமைச்சர்கள் அனைவரும் காலை எழுந்ததும் தவறாமல் வானொலி கேட்க ஆரம்பித்தனர்.

சில அமைச்சர்கள் வானொலி கேட்பதுடன், அலுவலகம் செல்ல முன்பாக, அங்கு ':'போன் செய்து தங்கள் பதவி இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே புறப்பட்டுச் சென்றனர்.

தன் செயலாளர் சியம்பாவிடம் கூறினான் அமீன்: **"நான் வானொலியில் ஒரு நாள் உரையாற்றிவிட்டு, போக்குவரத்து அமைச்சரிடம் 'உரை எப்படி?' என்று கேட்டேன். அந்த முட்டாள் வானொலியே கேட்கவில்லை என்றான். அதுதான் அவனைப் பதவியில் இருந்து தூக்கியதை வானொலியில் அறிவித்துவிட்டு அவனை அவமானப்படுத்தி அனுப்பினேன்."**

தன் வழக்கமான இடிச்சிரிப்பை உதிர்த்தபடியே தொடர்ந்து சொன்னான்: **"இப்போது சகல அமைச்சர்களும் காலையில் எழுந்ததும் தவறாமல் செய்தி கேட்கிறார்கள். வானொலி கேட்பது நல்ல பழக்கம் தானே?"** என்று கேள்வியும் எழுப்பினான்.

"ஆமாம் நல்ல பழக்கம்தான்!" என்றார் சியம்பா.

**"அமைச்சரின் செயலாளர் அம்சமாக இருக்கிறாள். நீரும் ஒருநாள் கூடியிருந்து பாருமேன்...!"** என்றான்.

சியம்பாவுக்கும் சிறிது சலனம் எட்டி எட்டிப் பார்த்தது.

அவளது மதர்ப்பான– இளமையான தேகம் அவர் கண்முன்னால் வந்துபோனது. அந்த நேரம் பார்த்து அமீனால் கொல்லப்பட்ட தனது செயலாளரின் நினைவும் வந்து சேர்ந்தது.

**"வேண்டாம். நன்றி!"** என்றார். என்றதற்கு அமீன் நகைத்தான்.




"இப்போது அனுபவிக்காது எப்போது அனுபவிக்கப் போகிறீர்?" என்றான்.

வெளியுறவுத்துறை அமைச்சர் கிபேடி அமீனின் போக்கு குறித்து அதிருப்தியாகப் பேசிய தகவல் அமீனுக்கு எட்டியது.

**"வெளியுறவு அமைச்சர் வெளியேற ஆசைப்படுகிறார் போலிருக்கிறது!" என்று** கூறினான் அமீன்.

கிபேடியை கண்காணிக்க அமைச்சகத்திலேயே ஆள் போட்டான்.

இடி அமீனுக்கு எதிராகப் பேசியவர்கள், இடி அமீனின் சுற்றத்தினருக்கு வேண்டப்படாதவர்கள் ஆகியோர் ஒபேடேயின் கிளர்ச்சிப் படையினர் என்ற போர்வையில் கொல்லப் பட்டனர்.



எரிக்கவோ, புதைக்கவோ நேரமில்லாவிட்டால், நீர் வீழ்ச்சியில் பிணங்களைத் தூக்கிப் போடுங்கள்!" என்று உத்தரவிட்டான் அமீன்.

ஓவன் நீர் வீழ்ச்சியில் பிணங்கள் மிதந்து செல்வதையும், அதன் அருகேயுள்ள அணைக்கட்டில் தேக்கப்பட்ட நீரில் பிணங்கள் மிதந்ததையும் பலர் கண்டனர்.

ஓவன் நீர் வீழ்ச்சியில் மட்டுமல்லாமல் மேலும்சில அணைக்கட்டுக்களிலும்சடலங்கள் மிதந்தன.

காடுகள், மலையடிவாரங்கள் போன்றவற்றிலும் சடலங்கள் உருக்குலைந்து காணப் பட்டன.

**"மக்களிடம் பயமும் இருக்க வேண்டும். அதே நேரம் பலியான ஆட்கள் ஒபேடேயின் ஆட்கள்தான் என்ற எண்ணமும் இருக்க வேண்டும்!"** என்றான் அமீன்.

நாடெங்கும் பரவலாக சடலங்கள் காணப் பட்டதால் மக்கள் மத்தியில் இடி அமீனின் பெயர் கேட்டாலே அச்சம் நிலவியது.

ஒபேடேயின் ஆட்கள் என்று கூறிக் கொண்டு, தனக்கெதிரான சக்திகளை இடி அமீன் வேட்டையாடி வருவதை மக்களும் அறியாமல் இல்லை. அச்சத்தில் வாய்மூடி இருந்தனர்.

கம்பாலா நகரில் ஒரு குடும்பத்தினர் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

ஒபேடே ஜனாதிபதியாக இருந்தபோது அவ்வீட்டுக்குச் சென்று விருந்துண்டார். அந்தக் குடும்பத் தலைவர் ஒபேடேயின் பள்ளித் தோழர்.

அந்தக் குடும்பத்தோடு பகை கொண்ட ஒருவரால் பழைய சம்பவம் நினைவு கூரப்பட்டு அமீனின் படைகளுக்கு எட்டியது.

வீட்டில் தேடுதல் நடத்தியபோது ஒபேடேயின் புகைப்படங்கள் சிலவும் கண்டுபிடிக்கப் பட்டன.

"அப்படியா சங்கதி?" என்றான் தகவல் அறிந்த அமீன். சற்று யோசித்துவிட்டு "குடும்பத்தோடு சிங்கப்பூருக்கு அனுப்பி வையுங்கள்!" என்று ':'போனை வைத்துவிட்டான்.

"உங்களை சிங்கப்பூருக்கு அனுப்பிவைக்கச் சொல்கிறார் அதிபர் இடி அமீன்," என்றான் இராணுவக் கப்டன்.

அவர்களுக்குப் புரியவில்லை. தங்களை எதற்கு சிங்கப்பூருக்கு அனுப்ப வேண்டும், என்று ஆச்சரியப்பட்டனர்.

அந்த ஆச்சரியத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது கப்டனின் துப்பாக்கி.

சரமாரியாகப் பாய்ந்த ரவைகள் அத்தனை பேர் உடம்புகளையும் முத்தமிட்டு உயிர் குடித்தன.

கணவனையும் மனைவியையும் நீர்வீழ்ச்சி ஒன்றிலும் ஆண் பிள்ளைகள் இருவரையும் மலையடிவாரத்திலும் வீசினர்.

தனது செயலாளரான சியம்பாவை கலாசார அமைச்சின் செயலாளராகவும் நியமித்தான் அமீன்.

**"கலாசார அமைச்சரின் வேகம் போதவில்லை. அதனால்தான் உமக்கு அங்கும் வேலை வந்திருக்கிறது. இரண்டையும் கவனித்துக் கொள்ளும்!"** என்றான்.

1972 நவம்பர் 4ம் திகதி கலாசார அமைச்சின் பட்டமளிப்பு விழா ஒன்று நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

கலாசார அமைச்சர் யெகோஸ் ':'பற்றி எங்கள் விழாவில் கலந்து கொண்டு பரிசளிப்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

என்ரபே விமான நிலையத்திற்கு எதிரே உள்ள குன்று ஒன்றில் அமர்க்களமாக விழா ஏற்பாடுகள் நடந்திருந்தன.

அந்த விழாவுக்காக சியம்பா தன் காரில் சென்று கொண்டிருந்தார். காரிலிருந்த வானொலி குண்டொன்றை தூக்கிப்போட்டது.

"நான்கு அமைச்சர்கள் அதிபர் இடி அமீனால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தங்கள் பணிகளில் அசிரத்தையாக இருந்து மக்கள் நலனைக் கவனிக்கத் தவறியதால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது!" என்று அறிவித்தது வானொலி.

பதவி நீக்கப்பட்டதாக கூறப்பட்ட நான்கு பேரில் கலாசார அமைச்சரும் ஒருவர்.

அப்படியானால் பரிசு கொடுப்பது யார்? விழா நடக்குமா? என்ற கேள்விகளோடு விழா நடக்கும் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார் சியம்பா.

நிகழ்ச்சி நடந்த இடத்தில் இருந்த தொலைபேசியூடாக அமீனைத் தொடர்பு கொண்டார்.

அச்சமயத்தில் அமீன் மசாஜ் ரூமில் இருந்தான். இரண்டு கறுப்பு அழகிகள் அவனுக்கு மசாஜ் செய்துகொண்டிருந்தனர்.

"அதிபர் முக்கியமான கூட்டத்தில் இருக்கிறார். பின்னர் தொடர்பு கொள்ளுங்கள்!" என்று சியம்பாவுக்கு கூறப்பட்டது.

அரைமணி நேரம் சென்ற பின்னர் சியம்பா மீண்டும் தொடர்பு கொண்டார்.

இப்போது ':'போனில் வந்தான் இடி அமீன்.

"என்ன விஷயம்? உமது தலை தனியாகப் போகப்போகிறதா?" என்றான் கேலியாக.

**தருவது ரசிகன்**

"கலாசார அமைச்சரை நீக்கிவிட்டீர்கள். இங்கு பரிசளிப்பு விழா ஏற்பாடாகி இருக்கிறது. என்ன செய்வது?" என்று கேட்டார் சியம்பா.

எவ்வித தயக்கமோ, தாமதமோ இன்றி மறுமுனையில் இருந்து வந்தது பதில்: "அதனால் என்ன, நீரே கலாசார அமைச்சராக இருந்து பரிசுகளை வழங்கும். விழா முடிந்ததும் நேராக இங்கு வாரும். என் முன்பாக பிரமாணம் எடுத்துக் கொள்ளும்!" என்றான்.

(இடி தொடரும்)

# பளார்–பளார் மணமேடையில் முறிவு

இத்தாலி நாட்டில் நடந்துள்ள சம்பவம் ஒன்று ருசிகரமானது.

இத்தாலியில் சான்டா லூசியா என்ற கிராமத்தில் ஒரு சர்ச்சில் திருமண நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. விருந்தினர்கள் பலர் வந்திருந்தனர்.

திருமண சம்பிரதாயப்படி பாதிரியார் மணமகனிடம், "இந்தப் பெண்ணை மணக்க



சம்மதமா?" என்று கேட்டார்.

'ஆம்' என்று பதில் வரும் என்று எதிர்பார்த்தால், அதற்கு மாறான பதில் அதிரடியாக வந்தது.

"எனக்கு சம்மதமில்லை. அதோ நிற்கிறானே என் நண்பன், அவன்தான் இவளது காதலன். அவனையே மணக்கட்டும்" என்று கூறினார் மணமகன்.

அந்த நேரம் 'பளார்' என்று ஒரு சத்தம் கேட்டது.

மணமகனின் நண்பரை அவரது மனைவி அறைந்த சத்தம்தான் அது.

திருமணத்திற்கு முதல்நாள் மணமகளை சந்திக்க மணமகன் சென்றிருக்கிறார். அங்கு மணமகள் தனது நண்பனின் அணைப்பில் இருந்ததைப் பார்த்துவிட்டார்.

ஒப்புக்காக தன்னை மணந்துகொண்டு, தன் நண்பனுடன் உல்லாசமாக இருப்பதே நோக்கம் என்று அறிந்துகொண்டார்.

அதனால் மண மேடையில் பலர் முன்பாகவே இருவரையும் அவமானப்படுத்த திட்டமிட்டு, செய்து முடித்தார்.

மணமகனின் நண்பர் பந்தாவாக முன்வரிசையில் மனைவியுடன் அமர்ந்திருந்தார். மனைவி பளார் பளார் என்று அவரது கன்னத்தில் அறைய அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டார்.

திருமணம் அத்தோடு குழம்பியது. உறவினர்கள் முணுமுணுத்தபடி கலைந்து சென்றனர்.

# அறுவை சிகிச்சையில் ஆள் மாறாட்டம்

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர் ரபெல்லா மார்டிரூபிஸ். 39 வயது. இவர் பிரசவ பரிசோதனைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.



அங்குள்ள டாக்டர்கள் அவருக்கு அறுவைச் சிகிச்சை நடத்தி கருப்பையை அகற்றிவிட்டனர். அதனால் அவரது கருவில் வளர்ந்த குழந்தையும் இறந்துவிட்டது.

இந்த குளறுபடிக்கு காரணம், அதே பெயரில் இன்னொரு பெண்ணும் அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததுதான்.

அப் பெண்ணுக்கு புற்று நோய்க்கான அறுவைச் சிகிச்சை நடத்த வேண்டியிருந்தது. அவர் என்று நினைத்தே பிரசவ சிகிச்சைக்கான பெண்ணுக்கு அறுவை சிகிச்சை நடத்திவிட்டனர்.

இந்த விபரீத சம்பவத்திற்கு ஸ்பெயின் மக்களிடம் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார்.

# சிங்களத்தில் பூலான்



முரசில் ரசிகன் எழுதி இலட்சக்கணக்கான வாசகர்களின் அபிமானத்தைப் பெற்றது 'கொள்ளைராணி பூலான் தேவி'

அதனை தற்போது சிங்களத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளனர். சிங்களத்தில் அமோக விற்பனையாகி முதற் பதிப்பு தீர்த்துவிட்டது.

முரசினதும், ரசிகனதும் அனுமதி பெற்று உபாலி என்பவர் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். அவரே பதிப்பித்தும் உள்ளார்.



# 79 + 35

நடிகர் ஜெமினி கணேசனுக்கு 79 வயது. அவர் சமீபத்தில் 35 வயது ஜூலியா என்ற இளம் பெண்ணை மணந்து கொண்டார்.

ஜெமினி கணேசன், சாவித்திரி தம்பதிக்கு பிறந்த ஒரே மகளான விஜய சாமுண்டிஸ்வரிக்கு இப்போது 2 மகன்கள் உள்ளனர். ஒரு மகன் நடிகர் ஒய்.ஜி மகேந்திரனின் மகளை மணந்துள்ளார்.

அவரது தந்தையின் திருமணம் பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது: "எனது தந்தை ஜெமினி கணேசனின் திருமணச் செய்தி மற்றவர்கள் கூறித்தான் எனக்குத் தெரியும்.

அந்தத் திருமணத்தை நான் ஏற்கவும் இல்லை. எதிர்க்கவும் இல்லை.

இந்தக் காலத்தில் அப்பாவுக்கு தெரியாமல் பிள்ளைகள் திருமணம் செய்கிறார்கள். பிள்ளைகளுக்கு தெரியாமல் அப்பாக்களும் திருமணம் செய்து கொள்கிறார்கள்" என்று கூறினார்.

ஜெமினி பாப்ஜி தம்பதிக்கு பிறந்த மகள் ரேகா இந்தியில் செக்ஸ் புயல். இன்னொரு மகள் பிரபல டாக்டர்.

# 40 - 25

சச்சின் டெண்டுல்கரை இருபத்தைந்து கோடி ரூபா கொடுத்து (இந்திய மதிப்பில்) ஐந்துவருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்தார் மார்க்மார்க் ரென்னஸ்.



பலவித பொருட்களுக்கு சச்சினை மொடலிங் செய்ய வைத்த அவர் சம்பாதித்த தொகை 40 கோடி. இரண்டு வருடத்தில் இத்தொகையை சம்பாதித்து விட்டார். மேலும் மூன்று வருடத்தில் எத்தனை கோடி சம்பாதிக்கப் போகிறாரோ?

# மாத வாடகை

டைட்டானிக் பட கதாநாயகனை ரசிகைகள் துரத்துகின்றனர். அவரும் லேசுப்பட்ட ஆளல்ல.



அமெரிக்காவில் உல்லாச விடுதி ஒன்றை வாடகைக்கு எடுத்து அழகிகளுடன் ஜமாய்க்கிறார்.

உல்லாச விடுதியில் சகல சொகுசு வசதிகளும் உள்ளன. வாடகை அதிகமில்லை. ஒரு மாதத்திற்கு பதினைந்து இலட்ச ரூபாய்.


இந்த உல்லாச விடுதியின் ஒரு பக்கத்தில் ஹொலிவுட் நடிகையான கவர்ச்சிப் புயல் டெமி மூரும் வாடகைக்கு தன் ஆண் நண்பருடன் தங்கியிருந்தாராம்.

டெமி முருக்கும் டைட்டானிக் நாயகனில் ஒரு பிடிப்பு. தன் ஆண் நண்பர் முன்பாகவே டைட்டானிக் நாயகனுக்கு உதட்டோடு உதடு பதித்து அழுத்தமாக ஒரு முத்தா கொடுத்தாராம்.



படிப்பகம்

www.padippakam.com



## ஒளிரும் குடை

← இந்தக் குடை ஒரு கொடை என்று கூறலாம். அந்தளவு உபயோகம். கடும் மழை. கும்மிருட்டு. அஞ்சற்க! இந்த குடையை விரித்தால் போதும் ஆளை நனையாமல் காக்கும். தரையை வெளிச்சத்தால் நனைக்கும்!

ஆம்! இந்தக் குடையின் நடுப்பகுதியில் குழல் விளக்கும், கைப்பிடியில் அற்குரிய ஸ்விட்சும் இருக்கிறது. இந்த புதியரக ஒளிரும் குடையை பெங்குயின் நிறுவனம் தயாரித்துள்ளது.

குடையின் துணி வெளிப்புறம் கறுப்பு. உட்புறம் வெள்ளை. சூரிய ஒளியில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்களை தடுக்கும் வல்லமையும் உண்டு. இந்தக் குடை உடைக்கும் இருள் என்னும் தடை! ■

## சவாரியால் மரியாதை

↘ சிலர் தொட்ட காரியம் துலங்கும் என்பர். அவர்களை ராசியானவர்கள் என்று கூறுவர். டயானா தொட்ட காரியங்கள் பிரபலமாகின. டயானாவை தொட்டவர்களும் பிரபலமானார்கள். இப்போது டயானா தொட்ட காரும் பிரபலமாகி பெரும் விலை போயுள்ளது. படத்தில் இருப்பது போர்ட் எஸ்கோர்ட் ரக கார். இக்காரை சாள்ஸ் டயானாவுக்கு பரிசளித்தார். கிட்டத்தட்ட ஒரு இலட்சம் கிலோமீட்டர் வரை இக்காரில் டயானா சவாரி செய்திருந்தார்.

டயானா சவாரி செய்த கார் என்பதால் இதனை வாங்க பலத்த போட்டி. அதனால் இதன் பெறுமதி அநியாயத்திற்கு ஏறியுள்ளது. எவ்வளவு தெரியுமா? ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள். நம்மூர் மதிப்பில் 6 1/2 கோடி ரூபாய்கள்.




## மண்டையோட்டு மலை

➘ வந்தாறுமூலை அகதி முகாமில் கைதாகி படுகொலையானவர்களின் மண்டையோடுகளா? செம்மணியை தோண்டியதில் கிடைத்தவையா? என்று ஆராய்ச்சி வேண்டாம்! அவைதான் தடயங்கள் இல்லாமல் செய்யப்பட்டு விட்டதாமே?!

இது தாய்லாந்தின் தலைநகரான பாங்ஹொக்கில் இருக்கும் இடுகாடு ஒன்றின் உலக சாதனை.

மொத்தம் 21 ஆயிரத்தி 347 மண்டை ஓடுகளும், அவற்றுக்கான எலும்புகளும் இங்கு பலநூறு வருடங்களாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

முன்னொரு காலத்தில் சீனர்களுடைய புதைகுழி ஒன்றில் இருந்து இவை சேகரிப்பட்டன. சமுட் சகோன் மாகாணத்தில் உள்ள ஆலய வளவில் 1997 ஆண்டு டிசம்பர் மாதம் இவை எரியூட்டப்பட்டன.

உலகிலேயே மிக அதிகமான மண்டை ஒட்டுக் குவியல் என்ற உலக சாதனையை இது பெற்றுள்ளது. ■



தகவல் பெட்டி



## விமான மனிதர்கள்

↑ விமானம் போலிருக்கும், ஆனால் விமானமல்ல. நூறுபேர் கூடி தேர் இழுக்கலாம். ஆயிரம்பேர் கூடி விமானம் போல நின்று பேரெடுத்துள்ளனர். கூர்ந்து பாருங்கள், விமானம் போல ஆட்கள் கூடி நின்று வடிவமைத்து காட்டுகிறார்கள்.

உலகிலேயே மிக நீளமான விமானத்தை உருவாக்க வோஷிங்டன் போயிங் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதனுடைய தோற்றம் எப்படி இருக்கும் என்பதை ஆயிரம் பேரை நிற்க வைத்து வடிவமைத்து காட்டியுள்ளனர்.

வித்தியாசமான முயற்சிதானே! ●

## நகமா? இது நகமா?

➘ உலகில் மிக நீளளளமான நகம் கொண்டவர் ஸ்ரீலால் சில்லால். அவர் இந்தியாவைச் சேர்ந்தவர். அவரது படமும் நக அளவுகளும் முன்னரே தகவல் பெட்டியில் தரப்பட்டுவிட்டன.

அவருக்கு போட்டியாக உருவாகிவரும் நக அழகி இவர்தான். அமெரிக்காவைச் சேர்ந்தவர். பெயர்:- ஃபிரான்ஸெஸ் ரெட்மொண்ட். உலக சாதனையை இன்னமும் எட்டாவிட்டாலும் அமெரிக்காவில் பெரும் நக சாதனையாளர் இந்த அம்மணிதான்.

இவரது நகங்கள் 48 சென்றிமீட்டர்வரை வளர்ந்துள்ளன. இந்தளவு வளர்வதற்காக எத்தனை வருடம் பிடித்தது தெரியுமா? 12 வருடங்கள்! நகமா? இது நகமா? பயமாய் அன்றோ இருக்குது! ■





## நீச்சல் யானை

↑ மனிதர்கள் நீச்சலடிப்பதையும், நீருக்குள் சுழியோடுவதையும் கமராக்கள் படம்பிடித்துள்ளன.

ஃபிரான்ஸ் நாட்டு கமராக்காரரான ஒலிவியர் பிளெய்ஸ் என்பவர் யானை நீச்சலடிப்பதை மிகக் கஷ்டப்பட்டு 'கிளிக்' செய்திருக்கிறார்.

இப்புகைப்படத்திற்கு 1996ம் ஆண்டுக்கான மிகச் சிறந்த படம் என்ற பாராட்டும், பரிசும் கிடைத்துள்ளது. தி வேல்ட் பிரஸ் போட்டோ பவுண்டேஷன் என்ற அமைப்பே பரிசு வழங்கியுள்ளது. தினமும் 32 கிலோமீட்டர் இந்த யானை நீச்சலடிக்குமாம். ■

## தொட்டிக்குள் என்ன?

↓ இது என்ன உலகில் மிகப் பெரிய குப்பைத் தொட்டியோ? என்று எண்ணிவிடாதீர்கள்.

வயிற்றுக்குள் கொட்டும் உணவுள்ள தொட்டி இது. அமெரிக்காவில் வோஷிங்டன் சதுக்கத்தில் உலகில் மிகப் பெரிய சாலட் தயாரிக்கப்பட்டது. அந்த சாலட்தான் மாபெரிய தொட்டிக்குள் காணப்படுகிறது.

இதனைத் தயாரிக்க தேவையான வெட்டப்பட்ட காய்கறிகளை பல நூற்றுக்கணக்கான மக்கள் கொண்டு வந்து கொட்டினார்கள். அவற்றை வைத்து உருவான இந்த காய்கறி சால்ட்டின் எடை இரண்டு தொன். உலக சாதனை படைத்த பின்னர் இதனை ஆள் ஆளுக்கு வயிற்றில் கொட்டிக் கொண்டனர். மூக்கு முட்ட வெட்டிக் கொண்டனர். ■





படிப்பகம்

www.padippakam.com

## உருக்கம்

மாலை ஆறு மணிக்கு மேல் பணிபுரிவதில்லை என்பது இளையராஜாவின் கொள்கை. அக் கொள்கையையும் மீறி பிரசாந்த் நடிக்க அகத்தியன் இயக்கும் படத்திற்காக நள்ளிரவு வரை இசையமைத்தார் இளையராஜா.

படத்தின் பெயர் 'காதல் கவிதை'. படத்தின் கதையில் உருகி நின்ற இளையராஜா ஒரே மூச்சில் இசையமைத்துக் கொடுத்தாராம்.

## மகாஜித்தன்

பாண்டியராஜனும், பழம்பெரும் நடிகர் ரவிச்சந்திரனின் மகன் அம்சவிர்தனும் இணைந்து நடிக்கும் படம் 'மகாஜித்தன்.'

இவர்களுக்கு ஜோடிகளாக வினிதாவும், ராஜஸ்ரீயும் நடிக்கின்றனர். அம்சவிர்தன் சின்னப் பையன். ஜோடிப் பொருத்தம் எப்படி இருக்குமோ?

இப்படத்தை வி.சி. குகநாதன் கதை வசனம் எழுதி இயக்கவுள்ளார்.

## மினிசினி

* 'மீண்டும் கௌரவம்' என்ற தொலைக் காட்சித் தொடரை முதன் முறையாகத் தயாரித்த சிவாஜி புரடக்ஷன்ஸ் நிறுவனம், அடுத்து இந்திப்படமொன்றைத் தயாரிக்கவுள்ளது. சிவாஜி புரடக்ஷன்ஸ் நிறுவனம் இந்தியில் ஏற்கனவே 'ராக்கி', 'கௌரி' ஆகிய படங்களைத் தயாரித்துள்ளது.
* 'கள்ளழகர்' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடித்து வரும் லைலா, 'உன்னைத்தேடி' என்ற படத்தில் நடிக்க ஒப்பந்தமானார். இப்போது 'உன்னைத் தேடி' படத்தில் இருந்து லைலா நீக்கப்பட்டு மாளவியா என்ற புதுமுகத்தைப் போட்டுள்ளனர்.
* கமலின் சகோதரர் சாருஹாசன் முதன் முதலாக 'இ.பி.கோ. 125' என்ற படத்தை கதை-வசனம் எழுதி இயக்குகிறார். இந்தப் படத்தில் மறைந்த நடிகை பத்மப்பிரியாவின் மகள் பிரியங்கா கதாநாயகியாக அறிமுகமாகிறார்.
* பழம் பெரும் இயக்குநரான கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், பல வெற்றிப்படங்களை தந்தவர். இவர் முதன் முதலாக பார்த்திபன் இயக்கி நடிக்கும் 'ஹவுஸ்ஃபுல்' படத்தில் முக்கிய வேடமொன்றில் நடிக்கிறார்.
* கார்த்திக்-மீனா நடித்து தமிழில் வெற்றி பெற்ற 'அரிச்சந்திரா' படம் தெலுங்கில் தயாராகவுள்ளது. தமிழில் மீனா நடித்த வேடத்தில் தெலுங்கில் நடிக்க விருப்பவர் மந்த்ரா.
* 'காதல் தேசம்' படத்தில் அறிமுகமான அப்பாஸ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய 4 மொழிப் படங்களில் நடித்துவிட்டார். இப்போது இவர் மலையாளப் படமொன்றில் நடித்து வருகிறார்.
* முன்னாள் இந்தி நடிகை மூன்மூன் சென்னின் மகள் ரியா சென் பாரதிராஜாவின் 'தாஜ் மஹால்' படத்தில் நடித்துவருகிறார் என்பது தெரியும். அண்மையில் இவர் அமிதாப்பின் மகன் அபிஷேக்குடன் இந்திப் படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

## சினிவிசிட்

மிங்க் சிங்
படம்: என் சுவாசக் காற்றே




## சரத்தின் 'வீரமுத்து'

'நட்புக்காக' படமும் சூப்பர் ஹிட்டானதால் சரத்குமார் காட்டில் தொடர் மழை.

கிராமிய கதை அம்சம் உள்ள படங்களில் நடிப்பதையே சரத்குமார் பெரிதும் விரும்புகிறார்.

'நாட்டாமை', 'சூர்யவம்சம்' 'நட்புக்காக' போன்ற அவரது சூப்பர் ஹிட் படங்கள் எல்லாமே கிராமிய வாசனை கொண்ட படங்கள்தான்.

தற்போது சரத் புதிதாக ஒப்பந்தமாகியுள்ள படம் 'வீரமுத்து' கதாநாயகி தேர்வு நடந்துவருகிறது. படத்தின் கதை, வசனம், இயக்கம், மணிவாசகம். இவர் கட்டப் பொம்மன் படத்தில் சரத்குமாரை இயக்கியவர். இசை, தேவா. சண்டைப்பயிற்சி பம்மல் ரவி.

சென்னை... பாதையில் உ... ஒன்றில் குடி... பங்களா... பணச்செலவி... உள்வாங்கும்... என்று தா... 'வோட்டர்... குளிரிலும் ... வெளிச்சம் ... படுக்கையறை...

பிரபல... நண்பர்கள்... நடிக்க அ... சம்மதித்துவி... ஒன்றில் சத்... அதில் உண்...

## காதோடு சொல்லுகிறே

மூன்றெழுத்து இளம் நடிகர் இப்போது ... குதிரையில் வலம் வருகிறார். அவர்மீது தமிழக ... கட்சி இளைஞரணி தலைவரின் பார்வை சென்றுள்... தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தலாமே ... இப்போதே வளைத்துப்போட நினைக்கிறாராம். ந... இல்ல நிகழ்ச்சிகளில் இளைஞரணித் தலைவர் ... கொள்கிறாராம்.

நட்சத்திர தம்பதியின் ஆறெழுத்து மகன் ... படங்கள் எதுவும் சரியாகப் போகவில்லை. ... விரக்தியில் மைந்தன் உற்சாக பானம் அருந்திக்கொ... திரிகிறார். அவருடன் ஒட்டியிருந்த மந்திர நடி... மார்க்கெட் டல்லானதும் வெட்டிக் கொண்டு... விட்டார். தந்தைதான் நடிகருக்கு தினமும் ... பணம் கொடுக்கிறாராம்.

தேவ நடிகையின் காதலரான இயக்குநருக்கும் தேவகி என்ற நடிகைக்கும் நீண்டகாலத் தொடர்பு. இது தெரியாமல் தான் அவரை காதலித்து நெருக்கமாக இருந்தார் காதல் கோட்டை 'தேவ' நடிகை. தேவகி சமீபத்தில் 'தேவ' நடிகையை கிழி கிழி யென்று கிழித்துவிட்டாராம். நடிகர் சங்கத்திற்கு பொறுப்பான நடிகருடன் தேவகிக்கு இருந்த பழைய நட்பை கிளறிக்காட்டி வசை பாடினாராம் 'தேவ' நடிகை.

அனுப... கிடை...

"என் சொ... வாடா. இது ஆ... இருக்கிறது. அ... ஏழாவதுவரை... பெரும்பா... லேயே போயிடு... பில் இருந்து... சென்னை... கல...

## கஜோல் வருவாரா?

'மின்சாரக் கனவு' படத்தில் நடித்த கஜோலை விஜய்க்கு ஜோடியாக நடிக்க வைக்க முயற்சி நடக்கிறது.

விஜய் ரசிகர் மன்றத் தலைவரான விஜயராமனுக்காக விஜய் ஒரு படம் நடிக்கப்போகிறார். அப்படத்தில்தான் கஜோலை நடிக்க வைக்க முயற்சி நடக்கிறதாம். இன்னொரு மின்சாரக் கனவு.

வினீத்-ரவளி
படம்: மறவாதே கண்மணியே




முகப்பில் பிரசாந்த்
ப்ரீதா விஜயகுமார்



## ஹவுஸ் புல்

நடிகர் பார்த்திபனுக்கு விருது பெறும் ஆசை வந்திருக்கிறது. அதற்காகவே படம் ஒன்று தயாரிக்கிறார்.

படத்திற்கு 'ஹவுஸ் புல்' என்று பெயரிட்டுள்ளவர் இப்படத்திற்காக தன் ஆசை மீசையை தியாகம் செய்துவிட்டார்.

'என் வாழ்நாளில் மீசையை எடுத்தது இதுதான் முதற்தடவை' என்கிறார். மதுரையில் திரையரங்கு ஒன்றை வாடகைக்கு எடுத்து இரண்டு வாரங்கள் தொடர்ச்சியாக படப்பிடிப்பு நடத்தினாராம். படத்தின் இயக்கமும் பார்த்திபன்தான்.

## நாயகன் இல்லாத படம்

கதாநாயகனே இல்லாத படம் எடுப்பது புதுமையல்லவா. 'முன் எச்சரிக்கை' படத்தில் அப்புதுமை நிகழப்போகிறது.

இதில், மூன்று கதாநாயகிகள் நடிக்கின்றனர். கதாநாயகன் இல்லை. வில்லன்கள் உண்டு. வில்லன்களை மூன்று நாயகிகளும் இணைந்து வீழ்த்துகின்றனராம்.

கீர்த்தனா, விசித்ரா, புதுமுகம் கவிதா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர்.

அரசியல்வாதிகளாலும், போலிசாராலும் பாதிக்கப்படும் மூன்று பெண்கள் அவர்களை பழி வாங்குவதுதான் கதை. இயக்கம்: எஸ்.தேவர். இசை: புதுமுகம் மணிவண்ணன்.

## தாடி நாயகம்

'மருதநாயகம்' படத்திற்காக கமல் நீளமாக ஒரிஜனல் தாடி வளர்த்தார். சமீபத்தில் கலைஞர் கருணாநிதியின் பவள விழாவில் கலந்து கொள்ள கமல் வந்திருந்தார்.

ஆறுமாத காலமாக வெளியே வராமல் மருதநாயகத்திற்காக தாடி வளர்த்த கமல், முதன் முதலில் பவளவிழா மேடையில் தாடியுடன் காட்சியளித்தார்.

மருதநாயகம் கெட் அப் இதுதான் என்று நினைத்து படப்பிடிப்பாளர்கள் கமலை கிளிக் செய்து தள்ளினார்கள்.

மேடையில் வைத்து படம் எடுப்பார்கள் என்று தெரிந்து தாடியை குறைத்துக் கொண்டுதான் வந்தாராம் கமல். இப்போது மீண்டும் நீளமாக வளர்க்கிறார்.

சுவலட்சுமி-சுவாதி
படம்: பொன்விழா

www.padippakam.com

## ...ிறப்பு வசதி

...பில் மகாபலிபுரம் கடற்கரைக்கு போகும் ...ளது ஈச்சம்பாக்கம். அங்கு புதிய பங்களா ...யறியுள்ளார் பிரியாராமன்.

...ல் உள்ள தனது படுக்கை அறையை அதிக ... நவீனமாக்கியுள்ளார். தொட்டால் விரலை ...மெது மெது மெத்தை. அது போதாது ...கவே வளைந்து நெளிந்து கொடுக்கும் ...ட்' என்னும் தண்ணீர் மெத்தை. ஏ.சி. ...ப்பம் தர குட்டி மதுபான விடுதி. மெல்லிய ...தும் நீல விளக்கு என்று அசத்துகிறதாம்

## ...சக்தியும் நடிப்பார்

...பக்குநர் ஆர்.சி. சக்தியும் கமலஹாசனும் ...ருதநாயகம் படத்தில் ஆர்.சி. சக்தியை ...த்திருக்கிறார் கமல். அவரும் நடிக்க ...டார். மருதநாயகத்தில் முக்கிய வேடம் ...ாஜ் நடிப்பதாக செய்திகள் அடிபட்டன. ...ம இல்லை.

## கார்த்திக் ரொம்ப நல்லவர்

'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தில் கார்த்திக் ஜோடியாக நடித்தார் ரோஜா. இப்போது பல படங்களில் கார்த்திக்கின் ஜோடி.

ரோஜாவுக்கு பல ஹீரோக்கள் வலை வீசியிருக்கிறார்கள். இயக்குநர் செல்வமணியை காதலிக்கத் தொடங்கிய பின்னர் அவர்கள் ஒதுங்கிக் கொண்டனர். அப்படியிருந்தும் பிரபல ஹீரோக்கள் சிலர் ரோஜாவுடன் இடைக்கிடையே நெருக்கமாக இருந்தனர்.

தான் விரும்பினால் மட்டுமே நட்பாக நடந்துகொள்ள முன்வருவாராம். பிடிக்கவில்லை என்றால் எந்தப் பெரிய ஹீரோவானாலும் 'போய்யா' என்று கூறிவிடுவார்.

பிரபல நடிகர் ஒருவருடனும் அவ்வாறுதான் பிரச்சனை ஏற்பட்டது ரோஜாவின் இதழ்களில் மயங்கிய அந்த நடிகர், ஒருநாள் தன் உதவியாளரை ரோஜாவிடம் தூதுவிட்டாராம்.

வந்ததே கோபம் ரோஜாவுக்கு.

'அந்த ஆள் முத்தமிடத்தான் பல நடிகைகள் இருக்கிறார்களே. அவர்களுடன் வைத்துக்கொள்ள வேண்டியதுதானே" என்று கூறிவிட்டார். அதன்பின்னர் அந்த நடிகரின் படம் ஒன்றில் நடிக்கக் கிடைத்த வாய்ப்பையும் உதறியெறிந்தார்.

அவ்வாறாகப்பட்ட ரோஜா கார்த்திக் மீது மட்டும் ஐஸ் ஐஸாக கொட்டுகிறார். 'அவர் ரொம்ப நல்லவர். அவர் சிறந்த நடிகர்' என்று வார்த்தைக்கு வார்த்தை புகழுகிறார்.

'கார்த்திக் என்ன சொன்னாலும் தலையாட்டுவேன்' என்று கூறாததுதான் பாக்கி.




மீனா

...ாம்

...ற்றிக் ...ளும் ...தாம். ...ன்று ...ரின் ...ந்து ...த்த ...அந்த ...ண்டு ...கயும் ...போய் ...வுக்கு

...ாம் ...ாது

...ளர் விஜய ...் மாநிலத்தில் ...ம்சன் ஸ்கூலில் ...டித்தேன். ... ஸ்கூல் பஸ்சி...ன். எட்டாம் வகுப் ...நாம் வகுப்புவரை ...ல் படித்தேன். ... பாடசாலையாக ...தாலும் எந்தப் ...னோடும் பேச ...டன். அதனால் ... லவ்கிவ் சமாச் ...த்தில் எனக்கு ...ரியன்ஸ் கிடை... மேற்படி வாக்கு ... ரம்பாவினுடை...

## திரையுலக மறுபக்கம் 74

# இளமை திரும்பிய காதல் மன்னர்

## தம்பதி வீட்டு விருந்தால் நம்பிக்கை

காதல் மன்னராக வலம் வந்த நடிகர் அவர். ஒரு படத்தயாரிப்பு நிறுவனத்தின் பெயரை தன் பெயருடன் ஒட்ட வைத்திருப்பவர் அவர்.

நடிப்பில் மட்டுமல்லாமல் நிஜத்திலும் அவர் காதல் மன்னர்தான். பல திருமணங்கள் செய்தவர். நடிப்பில் சிறந்த நடிகையையும் திருமணம் செய்து பின்னர் விவாகரத்து செய்தவர்.

தற்போது 70 வயதை தாண்டிய நிலையில் தன் முதல் மனைவியுடன் வசித்து வந்தவருக்கு. மீண்டும் இளமை திரும்பியிருக்கிறது.

இளம் பெண் ஒருவரை மணந்துகொண்டு தனிக்குடித்தனம் சென்றிருக்கிறார்.

இவர் எத்தனை திருமணம் செய்தாலும் முதல் மனைவி இவர்மீது கோபப்படுவதே கிடையாது. எப்படியும் தன்னிடம்தான் திரும்பிவந்து சேருவார் என்று பொறுமையாக இருப்பார்.

முன்பும் அப்படித்தான் காதலிகள் பலருடன் கொட்டமடித்து ஓய்ந்து முதல் மனைவியிடமே திரும்பினார். கிட்டத்தட்ட பத்து வருடங்களாக காதல் லீலைகளுக்கு விடை கொடுத்துவிட்டு நல்லபிள்ளை மாதிரி இருந்தார்.

'சமீபத்தில் ஒரு பேட்டியில் செக்ஸில் ஈடுபடும் வயதை தாண்டி விட்டால் மனிதன் உயிரோடு இருக்கக்கூடாது. சுவாரசியம் இருக்காது.' என்று கூறியிருந்தார் காதல் மன்னர்.

இப்போது அந்த சுவாரசியத்தை அவராக தேடிக்கொண்டார். இது நிச்சயம் செக்சுக்காக நடந்த திருமணம்தான். தன் முதல் மனைவி தன் தவறுகளை பொருட்படுத்தாமல் தன்னை நன்றாக கவனிப்பதாக கூறிவருபவர் காதல் மன்னர். ஆகவே வயதான காலத்தில் பரிவான துணைதேடி திருமணம் செய்து கொண்டார் என்று கூறுவதற்கில்லை.

இன்னொன்று, காதல் மன்னரது காதலிகள் சிலர் முதல் மனைவியை விவாகரத்து செய்யுமாறு வற்புறுத்தியதுண்டு. 'அதுமட்டும் முடியாது' என்று பல காதலிகளையே கழற்றிவிட்டவர் அவர். இப்போதுகூட தனிக்குடித்தனம் போயுள்ளாரே தவிர, முதல் மனைவியுடன் உறவை முறிக்கவில்லை.

முதல் மனைவியுடன் இத்தனை பாசமாக உள்ளவர் இளம் பெண்ணை தேடித் திருமணம் செய்தது எதற்காக? விடை புதிரல்லவே.

### நட்சத்திர தம்பதி

பத்து வருடமாக ஒய்ந்திருந்த காதல் மன்னரை பழையபடி முருங்கை மரத்தில் ஏற்றிவிட்டவர்கள் யார்? அதற்கான பதில் சுவாரசியமானது. தமிழ்த் திரையுலக நட்சத்திரத் தம்பதிக்குத்தான் அந்தப் பெருமை சேரும்.

நட்சத்திர தம்பதியினர் நடத்தும் விருந்துக் கேளிக்கைகளுக்கு சமீபகாலமாக சென்றுவந்தார் காதல் மன்னர். இளம் நடிகைகள் பலர் தம்பதி வீட்டு கேளிக்கைகளில் கலந்து கொள்வர். தம்பதிகளது மகன்மாரும் கலந்துகொண்டு கேளிக்கையில் கலந்து கொள்ளும் நடிகர்களை கவனிப்பார்கள்.

பல நடிகர் நடிகைகள் இடையே உறவுக்கு பாலம் போடப்பட்டது தம்பதி வீட்டு கேளிக்கையில்தான்.

அந்த விருந்துக்கு சென்ற காதல் மன்னருக்கு இளம் நடிகைகளின் உபசரிப்பில் இளமை திரும்பியிருக்கிறது. எப்போது விருந்து நடந்தாலும் தவறாமல் தானே காரை செலுத்திச் சென்று கலந்து கொள்வார்.

இவ்விடயத்தை மோப்பம் பிடித்து தமிழக சஞ்சிகை ஒன்றும் ஜாடைமாடையாக செய்தி வெளியிட்டிருந்தது.

### உற்சாக வார்த்தை

இளம் நடிகை ஒருவர் காதல் மன்னரிடம் ஒரு உற்சாகத்துக்காக, 'உங்களுக்கு என்ன, இப்போது இருபது வயது இளைஞன் மாதிரித்தான் நடந்துகொள்கிறீர்கள்' என்று கூறினாராம். அதன்பின்னர்தான் தன்னால் இப்போதும் ஆட்டம் போடலாம் என்று நம்பிக்கொண்டார் காதல் மன்னர்.

இதற்கிடையே மஞ்சளான நடிகையும் காதல் மன்னருடன் ஒட்டி உறவாடி சுளையாக கறந்திருக்கிறார். மஞ்சளான நடிகையின் கணவரான குமாரர் இவ்வாறான உத்திகளை கண்டும் காணாமல் இருந்து கொள்வாராம்.

நட்சத்திர தம்பதியின் இத்தகைய பிடுங்கல்களுக்கு பயந்தே பல நடிகர்கள் அவர்கள் வீட்டு விருந்துக்கு போவதை நிறுத்தி விட்டனராம். காதல் மன்னரும் அவர்களுடன் உறவை கத்தரிக்க நினைத்திருக்கிறார்.

அதனால் தனக்கே தனக்காக என்று காதலியை கண்டுபிடித்து மணந்துகொண்டாராம்.

இதனையறிந்து தமிழ்த் திரையுலக வட்டாரங்களில் அடிபடும் கதை: "அமெரிக்காவில் உள்ள நண்பர்கள் மூலம் வயாக்ராவை தருவித்திருக்கிறார் காதல் மன்னர். அதுதான் துணிந்து கோதாவில் இறங்கியிருக்கிறார்." என்கிறார்கள்.


ஐம்பதில் மட்டுமல்லாமல் எழுபதிலும் ஆசைவரும்.

### சினிமா வேண்டாம்

**1994ம்** ஆண்டு மிஸ் கேரளாவாக தெரிவான அழகி சுவர்ணா.. சினிமாவில் இவர் நடிக்க வந்தால் இவரது நண்பிகளான கேரள அழகிகள் இவரது தயவை நாடுகிறார்கள். 'எங்களையும் சினிமாவில் சேர்த்து விடுங்கள்' என்று கேட்கிறார்.

"ஃபீல்டுக்குள்ளே காலை வைத்தது எவ்வளவு பெரிய தப்பு என்று ஃபீல் பண்ணிட்டு இருக்கேன். அதுபுரியாமல் என்கிட்டேயே வந்து உதவி கேட்கிறீர்களே" என்றாராம்.

"நடிகையாகிவிட்டால் பின்னர் அரசியல் தலைவர்கள் முதல் அதிகாரிகள், வி.ஐ.பி.க்கள் உட்பட அத்தனைபேரும் ஃபிரண்ட்ஷிப் வைத்துக்கொள்ள அலைவார்கள். அதெல்லாம் வேண்டாம். நிம்மதி இழந்துவிடுவீர்கள். பேசாமல் மொடலிங் மட்டும் செய்யுங்கள் போதும்!" என்று அறிவுரை கூறினாராம் சுவர்ணா.




விஜய்-ரம்பா
படம்: என்றென்றும் காதல்



## ஜொள் ராஜ்

பிரகாஷ்ராஜ் நாயகனாக நடிக்கும் படத்திற்கு 'ஸ்மைல் ஃப்ளீஸ்' என்று பெயர் வைத்திருந்தனர். இப்போது பெயர் மாற்றம். 'அனந்த கிருஷ்ணன்' என்று வைத்திருக்கிறார்கள். மகா ஜொள்ளரான பிரகாஷ்ராஜ் நடிகை ஒருத்தியைக் கண்டு மையல் கொள்ளுகிறார். பின்னர் அந்த நடிகைக்காக பல கஷ்டங்களை சந்திக்கிறார். அதுதான் கதையாம். ஆனந்த கிருஷ்ணனாக நடிக்கிறார் பிரகாஷ்ராஜ்.

## ராஜா கைய வைச்சால்

'மருதநாயகம்' பட டிரெய்லர் இண்டர் நெட்டில் போகிறது. எலிசபெத் மகாராணிக்குக் காண்பிக்க எடுக்கப்பட்ட காட்சிகள் டிரெய்லரில் காட்டப்படுகின்றன. இந்த டிரெய்லர் விளம்பரத்துக்கு இளையராஜா அருமையாக இசையமைத்துக் கொடுத்துள்ளாராம். 'மருதநாயகம்' படத்திற்கு இசையமைப்பதும் இளையராஜாதான். கமலுக்கு பிடித்த இசை அமைப்பாளரும் அவர்தான்.

## திலகமும் தங்கமும்

ரஜினிகாந்தின் மனைவி லதா வீட்டிலேயே பாடசாலை நடத்தி வருகிறார். ரஜினியின் இரு மகள்கள் உட்பட சில வி.ஐ.பி.களின் பெண் பிள்ளைகளும் அங்கு படித்து வருகின்றனர்.

அந்தப் பாடசாலையின் விழா ஒன்று சமீபத்தில் நடைபெற்றது. நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் கலந்து கொண்டார்.

சிவாஜிக்கு நினைவுப்பரிசாக சுருக்குப் பை ஒன்றை வழங்கினார் லதா. திறந்து பார்த்த சிவாஜிக்கு இன்ப அதிர்ச்சி. உள்ளே ஏராளமான தங்கக் காசுகள் இருந்தனவாம்.

## ஏற்றம்

மணிவண்ணனின் மார்க்கெட் மட்டும் ஏறிக்கொண்டே போகிறது. நகைச்சுவையில் தூள்பண்ணுவது ஒரு புறமிருக்க, 'எல்லாமே என் பெண்டாட்டிதான்' படத்தில் வில்லனாகவும் நடித்திருக்கிறார். அதனால் வில்லன் வாய்ப்புக்கள் குவியத் தொடங்க, மணிவண்ணன் மறுத்துவிட்டார்.

## இறக்கம்

இந்திய பண மதிப்பில் 25 இலட்சம் ரூபாய் சம்பளம் வாங்கியவர் நக்மா. இப்போது மார்க்கெட் அவுட்.

இராம நாராயணன் தயாரிக்கும் புதிய படத்தில் நக்மாவின் சம்பளம் ஆக மூன்று இலட்சம்.

www.padippakam.com

## புள்ளிக் கோடு

என்னோடு
கைகோர்த்து
கூந்தல்போட்டு
முடிச்சு விட்டவள் நீ!
••
இப்போது
எனக்கும் தெரியாமல்,
சிக்கும் எடுக்காமல்
பிய்த்துக் கொண்டு போய் விட்டாய்!
அதனால்–
கூந்தலோடு என் வாழ்க்கையும்
துண்டு துண்டுகளாக
சிதறிக் கிடக்கின்றது!
••
உன்னில் நான்–
சேர்ந்துள்ளேன் 'என்ற
பின்புதான் என்னையும்,
நான்–
மனமிட்டுள்ளேன்!
••
கண்ணீரின்
வெப்பக் கொடுமையைவிட
அந்தக் கண்ணீரில் வரும்
உன் ஞாபகங்கள்
கடுமையானவை!
••
கண்ணீரில் ஆடும்
உன் விம்பத்தில்
தொலைகிறது நிம்மதி!
••
பிரிந்திருக்கிறாயா...?
விலகி இருக்கிறாயா...?
உனக்கு 'விலக்கல்'
பழகி இருக்கும்,
எனக்கு–?
••
நீ காந்தப் புலன்களாக
ஒத்த திசையில் ஒவ்வாமலும்
எதிர்த்திசையில் ஒன்றியுமா?
••
இப்போது
உன்னிலிருந்து
வாழ்க்கை வரம்பில்
இடறி விழுகிறேன்!

யெம். யே. தஸ்ரீப்-அக்கரைப்பற்று.

## முடியும்?

சந்தேகமில்லை...
நாமெல்லாம்
சாகத்தான் போகிறோம்!
ஆனால்
மானத்தோடு!
–*–
கிளின்ரனை
கீறிப் பார்த்து
உடல் வியர்க்க–
உண்மையை
ஒப்புக்கொள்ள வைக்க
ஒரு
மோனிக்காவால்
முடியும்!
–*–
அமெரிக்க
செயற்கைக்கோளுக்கு
'அல்வா' கொடுத்து,
அணுகுண்டை
வெடித்துப் பார்க்க
ஒரு
வாஜ்பாயால்
முடியும்!
–*–
பாரதத்தின்
அணுகுண்டிற்கு
அடுத்து
ஒரு குண்டை
அச்சமாய் வெடிக்கவைக்க
அடுத்தநாட்டு–நவாப்
ஷெரீப்புக்கும்
முடியும்!
–*–
தேய்ந்து போகும்
எம் இனத்தின்
தேய்வினை ஈடுசெய்ய–
தமிழ் கட்சிகளால்
என்ன
முடியும்?
–*–

பாலகமலன்-வவுனியூர்.

## எனக்குள் நீ இருந்தால்...!

தென்றலுக்குள்
நான் இருப்பேன்–
அதனின்
இதமான குளிராக...!
•••
பழத்துக்குள் நான் இருப்பேன்–
அதனின்
இனிதான சுவையாக...
•••
பூவுக்குள் நான் இருப்பேன்–
அதனின்
வீசும் மணமாக...
•••
நிலவுக்குள் நான் இருப்பேன்–
அதனின்
மிதமான ஒளியாக...
•••
முகிலுக்குள் நான் இருப்பேன்–
அதனின்
கொட்டும் மழையாக...
•••
கனவுக்குள் நான் இருப்பேன்–
அதனின்
விரியும் காட்சியாக...
•••
விதைக்குள் நான் இருப்பேன்–
அதனின்
வெளியாகும் முளையாக...
•••
உனக்குள் நான் இருப்பேன்–
அதனின்
துடிக்கும் உயிராக...
..........

கலஹா. பெ.புண்ணியமூர்த்தி.

# தரை மட்டம்



இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கக் கடற்படையின் ஷெல்லடியால் தரைமட்டமான நகரம் ஒன்றுதான் இது. இந்நகரம் ஜப்பானில் இருக்கிறது. ஜப்பான் படைகளுடன் மோதுவதாகக் கூறிக்கொண்டு ஜப்பானியர்களையும் அவர்களது நகரங்களையும் அழிக்க முனைந்தன அமெரிக்கப் படைகள்.

போர் என்பது கொடும்புயல். ஒரு நகரம் இருந்த தடயமே இல்லாமல் போயிருக்கிறது பாருங்கள். நம்நாட்டிலும் கிளிநொச்சி நகர் போன்ற உதாரணங்கள் இருக்கின்றன.

## தேன் கிண்ணம்

### அன்றும் இன்றும்

வீடு வரை உறவு–
அன்று!
அகதிமுகாம் வரை உறவு–
இன்று!
காடு வரை பிள்ளை–
அன்று!
கடலில் பிள்ளை–
இன்று!
கடைசிவரை யாரோ–
அன்று!
கடைசிவரை அடையாள அட்டை
இன்று!

ஏழாலையூர் வதனா.

## பேனா நண்பர்கள்



பெயர்: யூ.கே. அமீர்,
வயது: 22
முகவரி: 6, பிரதான வீதி, கல்முனை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ். உமா,
வயது: 24
முகவரி: 98, கடல்முக வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: தையல், ரீ.வீ..

## இந்த வாரம் உங்கள் பலன்

(25.10.1998 தொடக்கம் 31.10.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

துலாம் – சூரியன், சுக்கிரன்.
விருச்சிகம் – புதன்.
சிம்மம் – செவ்வாய், ராகு.
கும்பம் – குரு, கேது.
மீனம் – சனி.

சந்திரன்– விருச்சிகம், தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை | 8 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 மணி |
| புதன்- பொருள் நஷ்டம், மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, உறவினர் பகை. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, வீண் பகை. | மு.ப. | 9 மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருட் செலவு, கடன் படல். | மு.ப. | 10 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| செவ்வாய்-வீண் கலக்கம், பிரயாண மிகுதி. | பி.ப. | 3 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. | 9 மணி |
| வெள்ளி- இனசன தன்மை, மனக்குறை நீங்கும். | பகல் | 11 மணி |
| சனி- முயற்சி பலிதம், பலவித பேறு. | மு.ப. | 9 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் சகவாசம். | மு.ப. | 9 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கடன் படல். | பகல் | 12 மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த எண்ணம். | காலை | 8 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 3 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, அரச உதவி. | பகல் | 12 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. | 9 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், காரியத்தடை. | மு.ப. | 9 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. | 10 மணி |
| புதன்- பயனுள்ள செயல், பொருள் வரவு. | காலை | 8 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | மு.ப. | 9 மணி |
| சனி- தொழில் விருத்தி, இனசன நன்மை. | பி.ப. | 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-8

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. | 3 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப. | 1 மணி |
| புதன்-உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு. | பகல் | 11 மணி |
| வியாழன்- காரியானுகூலம், துயர் நீங்கும். | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, வெளியிடப் பயணம். | மு.ப. | 10 மணி |
| சனி- துயர் நீங்கும், காரிய சித்தி. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, காரியசித்தி. | பகல் | 12 மணி |
| திங்கள்- வீண் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. | 3 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, மனக் கஷ்டம். | காலை | 8 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பகல் | 11 மணி |
| வியாழன்- தொழில் நஷ்டம், பயண மிகுதி. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள் அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் படல். | பகல் | 11 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, இனசன நன்மை. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. | 2 மணி |
| புதன்- உறவினர் உதவி, பண வரவு. | மு.ப. | 9 மணி |
| வியாழன்- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | மு.ப. | 10 மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. | 3 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், உறவினர் உதவி. | மு.ப. | 10 மணி |
| புதன்- மனக் கலக்கம், கடன் தொல்லை. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- தொழில் நிலைக் கஷ்டம், செலவு மிகுதி. | காலை | 7 மணி |
| வெள்ளி- பண வரவு, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| சனி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப., | 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | காலை | 8 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, அந்நியர் பகை. | பி.ப. | 1 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | காலை | 8 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, பலவித பேறு. | பகல் | 11 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, கௌரவம். | மு.ப. | 10 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 3 மணி |
| திங்கள்- மனக் கலக்கம், அந்நியர் உதவி. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், காரியசித்தி. | பகல் | 11 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | பி.ப. | 3 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| சனி- தொழில் மந்தம், பணவரவு குன்றல். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 4 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், புதிய முயற்சி. | மு.ப. | 9 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. | 3 மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- வீண் தொல்லை, மறைமுக எதிர்ப்பு. | காலை | 7 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள்வரவு. | காலை | 8 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவக்கேடு. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- காரியக் கேடு, மனக் கவலை. | பகல் | 11 மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்

www.padippakam.com

# வேளைப் பொழுது

## இரத்த பலன்



பிறந்த திகதி, நட்சத்திரம் போன்றவைகளை வைத்து குணநலன்களையும், பலன்களையும் கணிப்பார்கள். ஒருவரது இரத்தப் பிரிவை வைத்தும் அவரது சுபாவங்களை அறியலாம் என்று கூறுகிறார்கள்.

உங்களுக்கும் அது பொருந்துகிறதா என்று பாருங்களேன்.

**'ஏ' இரத்தப் பிரிவு:**

இவர்கள் நவநாகாரீகமாக உடையணிவார்கள். மற்றவர்களை வசீகரிக்க வேண்டும் என்ற எண்ணம் இவர்களிடம் இருக்கும். தான் சம்பந்தப்படும் சின்னச்சின்ன விஷயங்களில்கூட மிகவும் உஷாராக இருப்பார்கள். ரகசியங்களைப் பாதுகாப்பார்கள். எல்லோரிடமும் எல்லாவற்றையும் பேசமாட்டார்கள். எழுதுவினைஞர், கணக்காளர் வேலைகளில் அதிகம் ஈடுபட்டிருப்பார்கள்.

**'பி' இரத்தப் பிரிவு:**

இவர்கள் மிகவும் ஜாலியானவர்கள். எல்லோரிடமும் சகஜமாகப் பழகுவார்கள். தேவைக்கு அதிகமான சுதந்திரத்தை எடுத்துக்கொள்வார்கள். கலை ஆர்வம் நிறைய இருக்கும். சூழ்நிலைக்குத் தக்கபடி பழக முடியாமல் தவிப்பார்கள்.

**'ஏபி' இரத்தப் பிரிவு:**

இவர்களை மற்றவர்கள் கறார் பேர்வழிகள் என்று சொல்வார்கள். ஆனால் அப்படியே வாழவேண்டும் என்று ஆசைப்படுவார்கள். நுட்பமாய் பரிமாறுவார்கள். சமூகசேவை ஆர்வம் இருக்கும். சைவப்பிரியர்களாக இருப்பார்கள்.

**'ஓ' இரத்தப்பிரிவு:**

'யார் எக்கேடு கெட்டுப் போனால் என்ன? என் காரியம் நடந்தால் சரி' என்பதுபோல அவ்வப்போது நடந்து கொள்வார்கள். ஆழகை நேசிப்பார்கள். அரசியலுக்குப் பொருத்தமானவர்கள்.

## துணி துவைப்பது எப்படி?

துணிகளை எளிதாகத் துவைக்கும் முறைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள்:



- ★ துணி துவைக்கும் இயந்திரங்களைக் கொண்டு துணி துவைக்கும்போது, வெள்ளைத் துணிகளையும், ஏனைய வர்ணத்துணிகளையும் தனித்தனியாகப் போட்டுத் துவையுங்கள். இவ்வாறு செய்தால் வர்ணத்துணிகளின் சாயம் வெள்ளைத் துணிகளில் படாமல் இருக்கும்.
- ★ துணி துவைக்கும் இயந்திரத்தை இயக்கத் தொடங்கும் முன்பு துணிகளில் அதிக அழுக்கு இருந்தால், அந்தப் பகுதியை மட்டும் சவர்க்காரம் போட்டு அதை நீக்கிவிட்டு பின்னர் இயந்திரத்திற்குள் போட்டுத் துவையுங்கள்.
- ★ சட்டைகளின் பின் கழுத்துப் பகுதியில் அதிக அழுக்கு பிடித்திருக்கும். அந்த அழுக்குப் பகுதியில் 'டல்கம்' பவுடரைப் போட்டு ஒருநாள் வைத்திருந்து, பின்பு துவைத்தால் அழுக்கு எளிதாக நீங்கும் பளிச்சென்றிருக்கும்.
- ★ வியர்வை பட்டுக் கோடுகள் விழுந்த பகுதியில் சிறிதளவு வினிகரை புரட்டி 15 நிமிடம் வைத்திருந்து, பின் கழுவினால் சுத்தமாகிவிடும்.
- ★ பகல் முழுவதும் வெய்யில் காலத்தில் அலைந்து வேலை பார்ப்பவர்கள் வியர்வை நன்றாகக் காயமுன்னரே துணிகளைத் துவைப்பது நல்லது. துவைக்க முடியாவிட்டாலும், அப்போதே தண்ணீரில் ஊறப்போட்டு விடுங்கள்.
- ★ வெள்ளைத் துணிகளை ஆவியில் வைத்துத் துவைப்பவர்கள் தண்ணீரில் சிறிதளவு 'டேர்பண்டைன்' சேர்த்து அவ்வாறு செய்தால் துணிகள் நன்றாக வெளுக்கும்.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்:-

திருமதி சாமளா ஜெயரட்ணம்,
இல.21 பி, குடாரதண்ட ரோட்,
வத்தளை.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EP

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை — நேர்மை — வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 31-10-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 58

புவனா

திரையரங்கில் இருந்து டயானா தன் புத்திரர்களுடன் வெளியே வந்தார்.

அதற்காகவே காத்திருந்த புகைப்படப்பிடிப்பாளர் டயானாவை நோக்கி முன்னேறினார்.

டயானா அவரைக் கவனிக்கவில்லை. நேராக சென்ற புகைப்படப்பிடிப்பாளர் டயானாவின் நெஞ்சுப் பகுதியில் மோதினார். படப்பிடிப்பாளரின் கரம் ஒன்று டயானாவின் நெஞ்சை அழுத்தி மீண்டது.

டயானா பின்னால் நகர்ந்தபடி, அவரை திட்ட முன்பாக, "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறி சமாளித்தார் படப்பிடிப்பாளர்.

டயானா சமாதானமாகவில்லை. "ஏனப்பா என்னை இப்படி தொந்தரவு செய்கிறீர்கள்?" என்று கேட்டுவிட்டு, தன் புத்திரர்களோடு வேகமாக சென்றுவிட்டார்.

அச் சம்பவத்தின் பின்னர் டயானாவுக்கு பொது இடங்களுக்கு செல்லவே பிடிக்கவில்லை.

பொது வாழ்க்கையில் இருந்து ஒதுங்கினால் என்ன? என்றும் யோசித்தார்.

திடீர் என்று முடிவெடுப்பதும் அதே வேகத்தில் முடிவுகளை மாற்றுவதும் டயானாவின் வழக்கம்.



அதே புன்னகை

## "என் வாழ்க்கையை நரகமாக்கிவிட்டார்கள்"

1993 டிசம்பர் மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை பொது நிகழ்ச்சி ஒன்றில் டயானா கலந்து கொண்டார்.

சமூக சேவை அமைப்பு ஒன்றுக்கு நிதி திரட்டுவதற்காக அந் நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது.



### உருக்கமான உரை

அந்த நிகழ்ச்சியில் டயானாவின் உரை பரபரப்பாக அமைந்தது. உருக்கமாகவும் இருந்தது.

"12 வருடங்களுக்கு முன்னர் நான் எனது பொது வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்தேன். அப்போது செய்திப் பத்திரிகைகள் நல்ல நோக்கத்துடன் செயற்படும் என்று நம்பினேன்.

பத்திரிகைகள் ஆரம்பத்தில் என் சேவைகள் தொடர்பாக கரிசனை காட்டின.

அதேவேளை என் தனிப்பட்ட வாழ்க்கை, பொது வாழ்க்கை ஆகியவற்றிலும் அவர்களது கவனம் செல்வது தவிர்க்கமுடியாது என்று கருதினேன்.

ஆனால் அவர்கள் வரம்புமீறி என்னுடைய வாழ்வை இத்தகைய கடுமை நிலைக்கு இழுத்துச் செல்வார்கள் என்று நான் கருதியதில்லை.

அவர்கள் எனக்குத் தரும் தாக்கம் என்னால் தாங்கக்கூடியதாக இல்லை.

இத்தனை தூரம் எனக்குப் பாதிப்பைத் தருவார்கள் என்று நான் எண்ணியதில்லை.

இத்தகைய தாக்கங்களால் எனது பணிகள் பாதிக்கப்படுகின்றன.

இத்தனை காலமும் எனக்கு பொதுமக்கள் அளித்த மதிப்புக்கு நன்றி கூறுகிறேன்.

சிலகாலம் ஒதுங்கி இருந்துவிட்டு மீண்டும் வருவேன் என்று கூறி விடைபெறுகிறேன்" என்று கூறினார் டயானா.

கூடியிருந்தவர்கள் மௌனமாக இருந்தனர். அவர்களால் டயானா ஒதுங்குவதை ஜீரணிக்க முடியவில்லை.

தனது உரையின்போது தன் பிள்ளைகளை பொறுப்புள்ள பிரஜைகளாக வளர்த்தெடுப்பதே தனது முதற் பணி என்றும், அதில் கூடிய கவனம் செலுத்தப்போவதாகவும் டயானா கூறினார்.

திரையரங்கில் படப்பிடிப்பாளர் அநாகரிகமாக நடந்துகொண்டமை மட்டும் பத்திரிகைகள்மீது டயானா கோபப்பட காரணமல்ல. அதற்கு முன்னர் உடற்பயிற்சி செய்வதை மறைந்திருந்து படம் எடுத்து வெளியிட்டதும் டயானாவின் மனதை ரணப்படுத்தியிருந்தது.



### மாலையில் மாற்றம்

காலையில் அவ்வாறு மனமுடைந்து பேசிய டயானா மாலையில் அதற்கு நேர்மாறான மனநிலையில் இருந்தார்.

தன் மனதில் உள்ளதை வெளியே கொட்டிவிட்டதால் மனப்பாரம் குறைந்தவராக காணப்பட்டார்.

'கொஞ்சம் அதிகமாகவே பத்திரிகைகளை திட்டிவிட்டேனோ?' என்று தன் தோழிகளிடம் வருத்தப்பட்டார்.

'என் கணவரையும், அவரது சுற்றத்தாரையும்விட எனக்கு அதிக துன்பம் தந்தவர்கள் யார் இருக்க முடியும்? பத்திரிகைகள் அதற்கு அடுத்த படி நிலையில்தான் உள்ளன" என்று கூறியபோது டயானாவின் கண்கள் பனித்தன என்று நினைவு கூர்ந்தார் அவரது தோழி.

"1993ம் ஆண்டு என் பொது வாழ்க்கையில் இருள் சூழ்ந்த காலமாகிவிட்டது. எனது கணவரும், அவர் சகாக்களும் எனது வாழ்க்கையை நரகமாக்கிவிட்டனர்!" என்றும் டயானா வருந்தினார்.

1994ல் டயானா போஷகராக இருந்த கலை அமைப்பு ஒன்று நிகழ்ச்சி நடத்தியது.

அந்த நிகழ்ச்சியில் பழைய காந்தப்புன்னகையுடன் கலந்து கொண்டார் டயானா.

இனிமேல் பொது நிகழ்ச்சிகளில் டயானாவைக் காண முடியாதோ என்று கவலைப்பட்டவர்கள் ஆறுதல் அடைந்தனர்.

### சாள்ஸ் ஒப்புதல்

இளவரசர் சாள்ஸ் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பானது.

அந்த நிகழ்ச்சியில்தான் கமீலாவுடன் தனக்குள்ள அந்தரங்க உறவை ஒப்புக் கொண்டார் சாள்ஸ்.

சாள்ஸ்-கமீலா உறவு மக்கள் அறிந்ததே என்றாலும் அதனை பகிரங்கமாக சாள்ஸ் ஒப்புக்கொண்டது அதுவே முதல் முறை.

"டயானாவை நீங்கள் விவாகரத்து செய்வீர்களா?" என்று சாள்ஸிடம் கேட்கப்பட்டது.

அதற்கு சாள்ஸ் கூறிய பதில்: "எதிர்காலத்தில் ஏற்படக் கூடும். ஆனால் நானாக விவாகரத்து கோரமாட்டேன்!"

இந்த நிகழ்ச்சியை டயானாவும் காணத்தவறவில்லை.

"நானும் விவகாரத்து கோரப்போவதில்லை. அவர்தான் என்னைத் திருமணம் செய்ய விரும்புவதாக முதலில் கூறினார். அதனால் அவரே விவாகரத்து கோரி வழக்குத் தொடரட்டும்" என்றார் டயானா.

"ஏன் இப்படிக் கூறுகிறாய்? கமீலாவுடன் உள்ள தொடர்பை சாள்ஸ் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுவிட்டார். அதனை ஆதாரமாக வைத்தே விவாகரத்து கோரலாமே?" என்று டயானாவின் சிநேகிதி ஒருத்தி கேட்டார்.

"இல்லை, இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. நானாக விவாகரத்து கோரினால் என் பிள்ளைகளை என்னிடம் இருந்து பிரித்துவிடக் கூடும்" என்றார் டயானா.

தனது சட்ட வல்லுநர்களிடமும் கலந்தாலோசித்தார்.

மிஷ்கொன் பிரபு தலைமையில் ஒரு சட்டவல்லுநர் குழு டயானாவின் பிரச்சனைகளை கவனித்தது.

விவாகரத்து ஏற்படுமானால் டயானாவின் இருப்பிடம், வருமானம் போன்ற வசதிகளைப் பற்றி இந்த சட்டவல்லுநர் குழு ஆராய்ந்தது.

டயானாவின் விருப்பங்கள் என்னவென்று அக் குழு கேட்டது.

டயானா விரும்பியது ஒன்றே ஒன்றுதான்!

**(அடுத்த வாரமும் வரும்)**

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**மஸ்கெலியா வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**டி. சாரதா,**
**பிரவுன்லோ எஸ்டேட், மஸ்கெலியா.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 24


- ❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- ❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- ❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- ❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com





மேனி மேவித் துயரில் வீழ்வாய்,
எத்தனை கூறியும் விடுதலைக்
கிசையாய்;
பாவி நெஞ்சே! பார்மிசை நின்னை
இன்புறச் செய்வேன்; எதற்குமினி
அஞ்சேல்!
-சுப்பிரமணிய பாரதியார்.

# பொய் நட்பு

## பாப்பா முரசு சிறுகதை

ஒரு காட்டில் மிருகங்களும் பறவைகளும் ஒன்றாக வாழ்ந்து வந்தன. திடீரென ஏதோ சிறு பிரச்சனை காரணமாக இரு பகுதியினருக்குமிடையே கடும் சண்டை மூண்டது.

பறவைகள்போல பறப்பதும், மிருகங்கள் போல குட்டி போட்டு பால் கொடுப்பதுமான வெளவால், எந்தத் தரப்பிலும் சேராமல் தனியாக இருந்தது. இறுதியில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களின் பக்கம் சேர்ந்து விடலாம் என்று முடிவு செய்தது.

ஒருதடவை பறவைகளின் கை ஓங்கி, மிருகங்களைப் பயங்கரமாகத் தாக்கிக் கொண்டிருந்தன. உடனே வெளவால் பறவைகளிடம் போய்,

"நானும் உங்களைப்போல் பறக்கிறேன். மரங்களில்தான் வாழ்கிறேன். நானும் உங்கள் இனம்தான்," என்று பறவைகளுடன் சேர்ந்து கொண்டது.

சில நாட்களின் பின் பறவைகளின் பக்கம் தோல்விக்கான அறிகுறி தென்பட்டது.

'இங்கேயிருந்தால் பறவைகளுடன் சேர்த்து மிருகங்கள் என்னையும் கொன்றுவிடும்,' என்று எண்ணியது வெளவால்.

உடனே மிருகங்களிடம் ஓடிச் சென்று,



"நானும் ஒரு விலங்குதான். உங்களைப் போன்றுதான் குட்டி போட்டு பால் கொடுக்கிறேன்!" என்று அவற்றுடன் சேர்ந்து கொண்டது வெளவால்.

சிலநாட்கள் சென்றபின் பறவைகளுக்கும், மிருகங்களுக்குமிடையே சமாதானம் ஏற்பட்டது. அதனால் இரு பகுதியினரும் சண்டையை நிறுத்தி விட்டன.

இந்தச் சமயத்தில் வெளவாலின் நிலைமை தர்ம சங்கடமாகிவிட்டது.

வெளவாலின் சந்தர்ப்பவாத சூழ்ச்சியினை பறவைகளும் விலங்குகளும் உணர்ந்து கொண்டு வெளவாலை விரட்டியடித்து விட்டன.

இதன் காரணமாக வெளவால் பறவைகளுடனும் சேராமல், மிருகங்களுடனும் சேராமல் தனியாக வாழ்ந்து வந்தது.

சந்தர்ப்பவசத்தால் கிடைக்கும் சில அனுகூலங்களுக்காக பொய் நட்புக்கொண்டு ஏமாற்றுபவர்கள் அதிககாலம் தாக்குப்பிடிக்க மாட்டார்கள்.

இவர்களின் உண்மையான நிலை தெரியவரும் போது எல்லோராலும் இகழப்பட்டு, துரத்தியடிக்கப்பட்டு புகலிடமே இல்லாமல் தவிக்க விடப்படுவார்கள்.

இந்த நிலைதான் வெளவாலுக்கும் ஏற்பட்டது.

## அதிசயம் - ஆனால் உண்மை!

### நாய்ச் சண்டை:



↑ மத்திய நூற்றாண்டுக் காலத்தில் இங்கிலாந்து நாட்டில் நாய்களை சண்டையிட வைத்து இரசிப்பார்கள். அப்போது அங்கு நாய்ச் சண்டை விளையாட்டு மிகப் பிரபலமாக இருந்தது.

### நகர்த்தப்பட்ட கோவில்:

→ எகிப்து நாட்டில் உள்ள அபுசிம்பல் என்ற கற்கோவில் 1967-68ம் ஆண்டுகளில்



300 கிலோ மீட்டர் தூரத்துக்கப்பால் நகர்த்திச் சென்று வைக்கப்பட்டது.


### பைராஸ்டர்:



↙ ஆழ்கடலில் வசிக்கும் இந்தச் சிறிய மீன் எதிரிகளிடமிருந்து தப்பிக்கும் முறை மிகவும் விசித்திரமானது. இவை தமது எதிரிகளைக் கண்டதும், கடல் வெள்ளரிக்காய் எனப்படும் என்ற கடல் விலங்கின் வாய்க்குள் புகுந்து கொள்ளும்.

### பீரங்கிச் சூடு:

↓ ஐரோப்பாவில் 18ம், 19ம் நூற்றாண்டுகளில் மழை பெய்வதற்காக மேகங்கள்மீது பீரங்கியால் சுட்டுள்ளனர்.



## வாரம் ஒரு நாடு

### சோமாலியா



தலைநகர்- மொகாடிஷு
பரப்பு- 6,37,657 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 88 இலட்சம்
மொழி- சோமாலி, அரபி, ஆங்கிலம், இத்தாலியன்.
எழுத்தறிவு- 24%
சமயம்- இஸ்லாம்
நாணயம்- சோமாலி ஷில்லிங்
தனி நபர் வருமானம்- 106 டொலர்

**அமைவிடம்:**

ஆபிரிக்காக் கண்டத்தின் வடகிழக்கு முனையில் அரபுக் கடலையும் இந்துமா சமுத்திரத்தையும் தொட்டு ஒரு தீபகற்பமாக விளங்கும் இந்நாட்டின் மேற்கே எத்தியோப்பியா நாடுள்ளது.

**வரலாறு:**

இத்தாலிய சோமாலியப் பகுதியும், பிரிட்டிஷ் சோமாலியப் பகுதியும் இணைந்து 1960ல் சோமாலியக் குடியரசானது. 1992ல் மிகப் பெரும் பஞ்சம். உள்நாட்டுக் குழப்பங்களால் நிலையான அரசு எதுவும் உருவாகவில்லை. மக்கள் தொகையில் 50% பேர் பட்டினியில் வாடுகின்றனர். 21 வருடங்களாக ஆட்சி புரிந்துவந்த சியாத் பாரே 1991ல் பதவியிழந்தார். நாட்டில் கலவரம் ஏற்பட்டதால் ஐ.நா. படைகள் சென்றன. என்றாலும் கலவரம் தொடர்ந்தது. பல ஐ.நா.வீரர்கள் கொல்லப்பட்டனர். 1994ல் அமைதி ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானாலும் போராட்டம் தொடர்கிறது.

**பொருளாதாரம்:**

விவசாயம், கால்நடை வளர்த்தல் முக்கிய தொழில்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 31.10.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 268**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 266

**பரிசுக்குரியவர்:**
செல்வி சிந்துஜா சிவநாதன்,
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருக்கோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். லோகிதராஜ், கோனேஸ்வரா இந்துக்கல்லூரி, திருக்கோணமலை. | செல்வரட்ணம் லவசங்கர், சரஸ்வதி தேசியக்கல்லூரி, பதுளை. |
| கன்சுல் மெஹரூன் காதர், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாயலம். | கி. ஷர்மினா, சீ.சீ. தமிழ் வித்தியாலயம், பலாங்கொடை. |
| கு. பிறேமகுமாரி, மின்னா த.வி., சாமிமலை. | வி. துஷ்யந்தன், இந்துக்கல்லூரி, கொழும்பு-06. |
| அ. அருட் சங்கர், கருவேப்பங்கேணி, விபுலானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு. | மு. ஹஸ்ஸான், முஸம்மில் மத்திய கல்லூரி, மருதமுனை, கல்முனை. |
| கே. ஸப்ராஸ் மொஹம்மட், மஹவெல முல்ல முஸ்லிம் வித்தியாலயம், வெள்ளவாய. | ஃபாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்ஃபோட் சர்வதேச பாடசாலை, பலாங்தொடை. |

## வானவில் மலர்

அயர்லாந்து நாட்டில் 'ஐரீஷ் மலர்' என்ற மலர் உள்ளது. இந்த ஐரீஷ் மலர்கள் பல்வேறு வர்ணங்களில் இருப்பதால் இவை வானவில் மலர்கள் என்று அழைக்கப்படுகின்றன.



இந்த மலர் இனத்தில் நூற்றுக்கு மேற்பட்ட வகைகள் உள்ளன. இந்த மலர்கள் ஐரோப்பா, ஆபிரிக்கா, மற்றும் சில ஆசிய நாடுகளிலும் காணப்படுகின்றன.


வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதற்கு இந்த வானவில் மலர்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

## எப்படித் தெரியுமா?

குழந்தைகள் பிளாஸ்ட்டிக்கினால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்கள் வைத்துக் கொண்டு விளையாடுவதைப் பார்த்திருப்பீர்கள். இந்த விளையாட்டுப் பொருட்கள் செய்யப் பயன்படும் பிளாஸ்டிக் எப்படிப் பெறப்படுகின்றது என்று தெரியுமா?

தூய செல்லுலோஸுடன் தகுந்த அடர்வுள்ள நைட்ரிக் அமிலமும், கந்தக அமிலமும் கலந்து வெப்பப்படுத்தப்பட்டு, அதிலிருந்து செல்லுலோஸ் நைட்ரேட் பெறப்படுகிறது. இது செல்லுலோய்ட் என்று அழைக்கப்படுகிறது.

இந்த செல்லுலோய்ட்டில் இருந்துதான்



விளையாட்டுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. விளையாட்டுப் பொருட்கள் மட்டுமன்றி பிளாஸ்டிக் தகடுகள், வாளிகள் போன்றனவும் தயாரிக்கப்படுகின்றன.

## ஹென்றி மூர்



20ம் நூற்றாண்டின் சிறந்த சிற்பி எனப் போற்றப்படுபவர் ஹென்றி மூர்.

இவர் 1898ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் பிறந்தார். இவரது தந்தை ஒரு சுரங்கத் தொழிலாளி ஆவார். தன்னைப் போலவே தன் மகனும் நிலக்கரிச் சுரங்கத்தில் கஷ்டப்பட்டு வேலை செய்வதை அவர் விரும்பவில்லை.

இதனால் ஹென்றியை ஆசிரியருக்குப் படிக்க வைத்தார்.

பின் ஹென்றி கலை ஓவியங்கள் வரைவதில் சிறந்து விளங்கினார். இத்தாலிக்குச் சென்று சிற்பக்கலை பற்றிப் படித்தார். இவரது படைப்புக்கள் இயற்கையை ஒட்டியே அமைந்திருந்தன.

50வது வயதில் உலகப் புகழ்பெற்ற கலைஞராகத் திகழ்ந்தார் ஹென்றி.

இவர் கல் மற்றும் மரத்தில் 800 சிற்பங்கள் செய்தார்; 4000 ஓவியங்களும் வரைந்துள்ளார். இவர் 1986ம் ஆண்டு தனது 88வது வயதில் இயற்கை எய்தினார்.

## மனித உடல் அதிசயங்கள்

- சிறுநீரகம் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறிய குழாய்களால் ஆனது. இந்த இரு சிறுநீரகங்களின் குழாய்களின் நீளம்40 மைல்கள்.
- மனிதன் தனது 60வது வயதில் 50 வீத சுவையுணர்வையும், 40 சதவீத வாசனை உணர்வையும் இழந்து விடுகிறான்.
- இரைப்பையில் சுரக்கும் ஹைட்ரோக்குளோரிக் அமிலம் இரும்பைக்கூட கரைக்கும் தன்மை கொண்டது.
- மனித உடம்பில் இரத்தம் பாயாத



பகுதி விழிவெண்படலம் மட்டும்தான். இது தனக்குத் தேவையான ஒட்சிசனை காற்றில் இருந்து பெற்றுக் கொள்கிறது.
- ஒரு சதுர அங்குல மனிதத் தோலில் 19 மில்லியன் செல்கள், 90 எண்ணெய்ச் சுரப்பிகள், 19 ஆயிரம் உணர்ச்சி செல்கள் 19 அடி இரத்தக் குழாய்கள் உள்ளன.
- மனித ஈரலில் 80சதவீதம் வெட்டப்பட்டாலும், மீதியுள்ள ஈரல் பகுதி எல்லாப் பணிகளையும் திறம்படச் செய்யும் தன்மை கொண்டது. வெட்டப்பட்ட ஈரல் முழு வளர்ச்சி அடைந்துவிடுமாம்.

## ஐரோப்பியச் செய்திகள்

இலண்டனில் இருந்து வெளியாகும் 'விஷன்' என்ற பத்திரிகை ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாடுகளை ஆய்வு செய்து, பின்வரும் முடிவுகளைத் தெரிவித்துள்ளது:

* 15 ஐரோப்பிய நாடுகளுள் வசிப்பதற்கு மிகச் சிறந்த இடம் ஹொலண்ட்.
* வாழ்க்கை வசதிக்குச் சிறந்த நாடுகள் டென்மார்க், சுவீடன், நோர்வே.
* மற்ற எந்த ஐரோப்பிய நாடுகளின் தலை நகரை விடவும் இலண்டன் நகரில் மழை குறைவு.
* அயர்லாந்து குடியரசில் வன்முறைகள் குறைவு.
* செய்தித்தாள் விற்பனையில் பிரிட்டன் முன்னணியில் உள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

இரண்டாம் பாகம்

அங்கம் 09



# மேற்கே ஒரு குற்றம்





எழுத்துலக வேந்தன்

## சுஜாதா

கணேஷ் 'ஓ' என்று இரைந்தான்! "இருங்கள், என்னிடம் சரக்கு இருக்கிறது! இருக்கிறது! என் பைக்குள் ஸாம்பிள் இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு அப்புறம் சுடு. ப்ளீஸ்."

"இரு!" என்றான் தலைவன். "காட்டு!" என்றான்.

கணேஷ் தன் பையிலிருந்த உடைந்த வளையலை எடுத்துக் கீழே எறிந்தான். "பார்! முட்டாளே! சரக்கு இல்லை என்கிறாயே? இதைவிட சுத்தமான சரக்கு உனக்குக் கிடைக்குமா? பார்!"

அந்த வளையலின் உள்ளிருந்து உதிர்ந்த வெண் பொடியை அவன் விரல்களால் தொட்டு நாக்கில் வைத்துப் பார்த்தான்.

அவர்கள் வேற்று மொழியில் அவசரமாகப் பேசிக் கொண்டார்கள். யாரோ ஒருவன் வரவழைக்கப்பட்டு, அவன் கீழே கிடந்திருந்த பொடியைத் திரட்டி எடுத்துக்கொண்டு பரிசோதிக்கச் சென்றான்.

சற்று நேரம் அங்கே மௌனம் நிலவியது.

"முழுவதும் என்னிடம்தான் இருக்கிறது. எங்கே இருக்கிறது என்று எனக்கு மட்டும்தான் தெரியும். என்னைத் துன்புறுத்தினால் உனக்கு எந்த லாபமும் இல்லை! நான் பொலிஸ் இல்லை. நான் தனி ஆசாமி. கொடுக்க வேண்டிய காசைக் கொடு. பொருள் தருகிறேன். நேராக வியாபாரம் நடத்து. அடித்துப் பிடுங்காதே! என்னைக் கொல்வதால் உனக்கு எவ்வித லாபமும் இல்ல."

பரிசோதிக்கச் சென்றவன் வெளியே வந்து, "ஓகே!" என்று கட்டை விரலை உயர்த்திக் காட்டினான்! அந்த ஸூட் ஆசாமி திடீர் என்று குழைந்தான்.

"ஏய் முட்டாள், ஒதுங்கு! அவரை விட்டு நகரு! அவரைத் துன்புறுத்தாம கொண்டு வா என்றுதானே சொன்னேன். எதற்காக அவரைப் போட்டு அடித்தீர்கள்?" என்று கணேஷை அடித்தவனைக் கன்னத்தில் அறைந்து பிடரியைப் பிடித்துத் தள்ளினான்.

கணேஷை அன்பாக உட்கார வைத்து சின்சானோ ஒயின் கொடுத்தார்கள்.

"சொல்லுங்கள்! மிஸ்டர் கணேஷ்! மன்னித்து விடுங்கள். நீங்கள் சொன்னது போல பணம் கொடுக்கிறோம். பொருளைக் கொடுத்து விடுங்கள். ஏய், மரியாவைக் கூப்பிடு...." என்றான்!

மரியா என்ற வாட்டசாட்டமான பெண் வந்தாள். அவளிடம் அவன் ஏதோ பேச, கணேஷின் அருகில் அவள் புன்னகையுடன் உட்கார்ந்து, அவன் காயங்களை எல்லாம் ஒத்தடமிட்டு அவன் கையை எடுத்து தன் ஏராளமான மார்பின் சட்டைக்குள் வைத்துக் கொண்டாள்.

"அவள் வேணுமா?" என்றான் தலைவன். "ஏய், பணம் கொண்டுவா! கணேஷுடன் போ. அவர் சரக்கை எடுத்துக் கொடுப்பார்; வாங்கிக் கொண்டு வா!" என்றான்.

"ம்ஹும் நடக்காது!" என்றான் கணேஷ்.

"ஏன்?"

"உன் அடியாட்கள் யாரும் வேண்டாம். வியாபாரம் எனக்கும் உனக்கும் தான்." அந்தப் பெண் கணேஷின் கையை வேறு எங்கேயோ கொண்டு செல்ல, "ஏய் கொஞ்சம் இரு!" என்றான். "வியாபாரம் நம் இருவருக்கும்தான்! எனக்கு உத்தரவு நடு ஆசாமி யாரிடமும் கொடுக்கக் கூடாது. நேராக பெரிய கையில் கொடுக்க வேண்டும் என்பதே! எனவே நீ என்னுடன் வா! வந்து பணம் கொடுத்து சரக்கைப் பெற்றுக் கொள்!"

"வேண்டாம்! வேண்டாம்! ஆபத்தான விஷயம்!"

"சட் சும்மா இரு! ஆபத்தா? எனக்கா? அருகில் இவன் இருக்கிறவரைக்கும் எனக்கு ஆபத்தே கிடையாது. கணேஷ்! சம்மதம். நான் வருகிறேன். ஆனால் இதைப்பார்!" என்று துப்பாக்கியைக் காட்டினான்.

"நான் எப்போதும் உன் அருகில்தான் இருப்பேன். எப்போதும் இதுவும் தயாராக இருக்கும்; சுட்டுவிடுவேன்!"

அந்த மரியா சிரித்து கணேஷின் மேல் பூனைக்குட்டி போல் உரசினாள்.

"அதற்கெல்லாம் தேவையில்லை. பணம் எடுத்துக் கொள். நானும் நீயும் மட்டும்தான் புறப்படுகிறோம்!"

"நானும் வருகிறேன்" என்றாள் மரியா.

"நாளை சாயங்காலம்! உன்னைத் தீர விசாரிக்க வேண்டும்! உன் உடம்பில் இந்த இந்தியன் ஏகப்பட்ட கவிதைகள் எழுத வேண்டும்! பொறுத்திரு கண்ணே!" என்றான்.

மரியா பச்சென்று அழுந்த முத்தமிட்டாள். வலித்தது.

அந்த நீல ஸூட் தன் துப்பாக்கியின் தோட்டாக்களைச் சரி பார்த்துக் கொண்டான். "வா போகலாம்!" என்றான்.

கணேஷின் இதயம் படபடத்தது. குளிரும் பயமும் கலந்து உடல் நடுங்கியது. எத்தனை அபாயம் இது? அங்கே எதற்காக அவனை அழைத்துப் போகிறான்? வேறு என்ன செய்ய முடியும்? இது நேரம் நான் காணாமற் போனதை யாரேனும் கவனித்திருப்பார்களா? சான்ஸே இல்லை. வசந்த் பாட்டுக்கு அந்தப் பெண்ணுடன் சினிமா போயிருப்பான். பொலிசார் என்னைத் தொடர்வதற்கு சந்தர்ப்பமின்றி கோழிக்குஞ்சுபோல் அமுக்கி விட்டார்களே! ஒரு மிகப் பெரிய மெர்ஸிடிஸ் காரில் அவர்கள் சென்றார்கள். இரவின் விளக்குகள் காரின் ஜன்னலுக்கு வெளியே கீற்றல் கீற்றலாகச் செல்ல மிக வேகமாகச் சென்றது. டிரைவர் ராட்சசன் போல இருந்தான்.

எங்கே போக வேண்டும். அதிக நேரம் பாச்சா காண்பிக்க முடியாது. எப்படியும் சரக்கைக் கொடுத்துவிட வேண்டும். எல்லாம் அந்தப் பெண்களின் வளையல்களில் இருக்கின்றன. ஒவ்வொருத்தியிடமும் ஒவ்வொரு டஜன் வளையல்! ஒன்பது பெண்கள்! 108 வளையல்கள்! ஒவ்வொரு வளையலிலும் எத்தனை கிராம்! மற்றும் இன்னும் எத்தனை நகைகளில் அடைத்திருக்கின்றனவோ! கலாராதனா குழு தங்கியிருக்கும் இடத்திற்குப் போகலாம். அந்தப் பெண்கள் நகைகளைக் கழற்றி தத்தம் பெட்டிகளில் வைத்திருப்பார்கள்!" அங்கே தான் போகவேண்டும். வேறு எங்கே? ஹோட்டலுக்குப் போகலாமா? ம்ஹும் வேண்டாம். அந்த நகைகள்தான்! அங்கே தான்!

கார் அந்த டார்மிட்டரி முன் வந்து நின்றபோது இரவு மணி ஒன்று இருக்கும்! அந்த நீல ஸூட் கணேஷின் முதுகில் துப்பாக்கியைப் பதித்துக் கொண்டே நடந்தான். வாசல் பக்கம் ரிஸப்ஷனிஸ்ட் விழித்துக்கொண்டிருக்க அவர்கள் வருவதைப் பார்த்து, "யார் வேண்டும்?" என்றாள்.

"கலாராதனா இந்திய நடனக்குழு!"

"அவர்கள் எல்லோரும் தூங்குகிறார்கள். இப்போது எழுப்ப முடியாது. உங்களை அனுமதிக்க முடியாது!"

"அவளைக் கொஞ்சம் கவனிக்கிறாயா?"

அவன் துப்பாக்கியைக் காட்டினான்.

"அனாவசியமாகச் சுட வேண்டாம். பெண்ணே பேசாமல் இரு என்ன?" என்றான் கணேஷ்.

அவன் அங்கிருந்த டெலிஃபோனைப் பிடுங்கினான். பொலிசுக்கு ஃபோன் செய்தாலும் செய்து விடுவாள்!

"ஏய்! ரெட்டைக் கிழவி! எங்களுடன் வா! இல்லையேல் உன் மூளை எல்லாம் ரத்தக்குழம்பாகி விடும்."

பயந்து நடுங்கிக் கொண்டு அந்தப் பெண் சாவியை எடுத்துக் கொண்டு அவர்களுடன் நடந்து வந்தாள்.

"இத பார், அனாவசியமாக துப்பாக்கியை உபயோகிக்காதே. சரக்கு அந்தப் பெண்களின் செயற்கை நகைகளின் உள் பொதிந்திருக்கிறது. ஒவ்வொருத்தியாக நிற்க வைத்து நகைகளைக் கழற்றிக் கொடுக்கச் சொல்லிவிடலாம். வேறு மூர்க்கத்தனம் வேண்டாம். என்ன? அந்தப் பெண்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இல்லை!" என்றான் கணேஷ்.

அந்த ஹாலில் வரிசையாகப் போட்டிருந்த கட்டில்களில் குளிருக்குப் போர்த்திக் கொண்டு அந்தப் பெண்கள் படுத்திருந்தார்கள்.

கணேஷ் கத்தினான்!

"வேக் அப் ஆல் ஆஃப் யூ கால்ஸ்" என்று கைதட்டி, சப்தமிட்டான்.

"கமான் கமான் க்விக்!" என்று நீல ஸூட் கத்தினான்.

குபுக் என்று அத்தனை பேரும் எழுந்தார்கள். அத்தனை பேரும் பொலிஸ்காரர்கள்!

"கிரேட் ஒர்க்" என்றான் கணேஷ்.

"உங்க ஃப்ரெண்ட் வசந்துக்கு தாங்க்ஸ் சொல்லுங்க."

"எனக்கு தாங்க்ஸ் இல்லை! எல்லாம் கணேஷ்தான்! லாவண்யாவோட சினிமாவுக்குக் கிளம்ப வெளில வந்தபோது ஒரு துண்டு வளையல் கீழே கிடந்தது. பார்த்தேன்! என்னடாது? கொஞ்சம் சந்தேகமாக இருந்திச்சு. வாசல்ல ஒரு சிப்பந்தியைக் கேட்டேன். கணேஷை அடையாளம் சொல்லி. 'ஆமா ஒரு ஆள் சந்துப்பக்கம் அழைச்சுக்கிட்டுப் போனான்'னு சொன்னான். அங்கே பார்த்தா இன்னொரு வளையல் துண்டு கிடந்தது! சரிதான், ஏதோ விபரீதம்னு உடனே ஸ்டைன் ஹாஃபுக்கு ஃபோன் பண்ணிட்டேன்! பாஸ்! எப்படி உங்களுக்குத் தோணிச்சு, வளையலை அங்கங்கே கீழே போடறதுக்கு?"

"அப்புறம் சொல்றேன்!"

"ஆனா, மிஸ்டர் ஸ்டைன் ஹாஃப் செயல்பட்ட விதம் ரொம்ப அற்புதம் பாஸ். அவர்கிட்ட வளையலில் நான் கண்டு பிடிச்சதைச் சொன்னதும் உடனே புடிச்சுக்கிட்டார். அவுங்க உங்களைத் துன்புறுத்தி அடிச்சுப் புரட்டி கடைசியில் அந்தப் பெண்கள் தங்கியிருக்கிற இடத்துக்கு நிச்சயம் கொண்டு வருவாங்கன்னு ஷ்ரூடா ஊகிச்சுட்டார். அப்புறம் அந்த இடத்தில் பொலிஸ் மொச்சிட்டாங்க."

"அந்த ரிஸப்ஷனிஸ்ட் பொலிஸ்காரி! உள்ளே கட்டிலுக்கு கட்டில் பொலிஸ் கம்பளி போர்த்திக்கிட்டு.... பிரமாதம்!"

கணேஷ் ஸ்டைன் ஹாஃபைப் பார்த்துச் சிரித்தான்.

"மிஸ்டர் கணேஷ், நான் உங்களுக்கு வந்தனம் சொல்ல வேண்டும். அந்தக் கூட்டத்தின் தலைவனையே அழைத்துக் கொண்டு வந்துவிட்டீர்கள்; சரக்கும் பிடிபட்டுவிட்டது. ஆளும் பிடிபட்டு விட்டான். அவன் யார் தெரியுமா? பெரிய பணக்காரன். ஷிவாபிங்கில் மூன்று சினிமா நான்கு ரெஸ்டாரண்டுகள் சொந்தம் அவனுக்கு! எக்கச்சக்க சொத்து.... பெயர் மாவின்ஸ்கி. ஆஸ்திரிய தேசத்தவன்! வந்தனம் மிஸ்டர் கணேஷ். இன்றைக்கு சாயங்காலம் உங்களுக்கு ஒரு பார்ட்டி! அப்புறம் உங்களுக்கு சென்னை பொலிஸிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. கணேஷிடம் கடிதத்தைக் கொடுத்தார்.

"அன்புள்ள கணேஷ்,

நீங்கள் இறைத்த பத்து ரூபாய் நோட்டுகளிலே ஒன்று வேளச்சேரி ஸ்டேட் பாங்க் கிளையில் அகப்பட்டது. நீங்கள் குறிப்பிட்டபடி அருகே இருந்த ஷெட்டுகளில், தொழிற்சாலைகளில் விசாரிக்கத் தொடங்கினோம். ஒரு வளையல் தொழிற்சாலை நிழலாக இருந்தது. சோதித்ததில் ஆச்சர்யம்! அவர்கள் தயாரிப்பது வளையல். ஆனால் அதனுள் அடைப்பது ஒப்பியம்! காங்ராட்ஸ்.

ராஜேன்!"

கணேஷ் புன்னகைத்தான்.

"என்ன?" என்றார் ஸ்டைன் ஹாஃப்.

"அந்தப் பக்கமும் கண்டு பிடித்தாகி விட்டது!"

"கிரேட். திஸ் கால்ஸ் ஃபார் ஸெலிபரேஷன்."

"மிஸ்டர் ஸ்டைன் ஹாஃப் ஒரு சின்ன வேண்டுகோள்!" என்றான் வசந்த்.

"சொல்லுங்கள்."

"இன்றைய பார்ட்டிக்கு லாவண்யா என்கிற பெண்ணையும் கூப்பிட வேண்டும்!"

"சரி. என்ன மிஸ்டர் கணேஷ்!"

"எனக்கும் ஒரு விருந்தாளி! மரியா என்கிற பெண்ணை நீங்கள் கண்டு பிடிக்க வேண்டும்."

வசந்த் கணேஷை ஆச்சர்யத்துடன் பார்த்தான்.

"நல்லா உடம்பு புடிச்சு விடறா!" என்றான்.

"அப்புறம் ஒரு சின்ன விஷயம்! வசந்த், ஊருக்குப் போறதுக்குள்ள என் கோட்டை ரிப்பேர் செய்துக்கணும்!"

"ஏன்?"

"பையில் ஓட்டை! வளையல் துண்டுகள் போட்டா ஒண்ணு ரெண்டு கீழே நழுவி விழுந்திடறது."

முற்றும்




அடுத்தவார முரசில்

உங்களை அசத்தப்போகும்

புதிய தொடர்?

?..? ..??

அடுத்தவாரம் வரை பொறுத்துக்கொள்க!

இன்ப அதிர்ச்சி காத்திருக்கிறது!


# சதாம் உசேன்

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

12

எகிப்தின் தலைநகர் கெய்ரோ. மக்கள் நடமாட்டம் மிகுந்த பிரதான சாலை.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தலைத்தெறிக்க ஓடிக்கொண்டிருந்தான் ஒரு மாணவன்.

அவனை குத்திக்கொல்லும் ஆவேசத்துடன் கையில் கத்தியுடன் பற்களைக் கடித்துக்கொண்டு விரட்டி ஓடிவந்தான் சதாம்.

திடீரென்று நான்கைந்து கைகள் சதாமை பிடித்திழுத்து தடுத்து நிறுத்தின. சதாம் ஆத்திரத்துடன் திரும்பிப் பார்த்தான். கும்பலாய் பொலிஸ்காரர்கள்...!

"நட ஸ்டேஷனுக்கு...!"

கத்தியை மடக்கி பாக்கெட்டுக்குள் வைத்துக்கொண்டு சதாம் பொலிஸாருடன் ஸ்டேஷனுக்கு நடந்தான்.

பொலிஸ் அதிகாரி அவனிடம் விசாரணையைத் தொடங்கினார்.

"உன் பெயர்...?"

"சதாம்...!"

"சொந்த ஊர் கெய்ரோதானா...?"

"இல்ல. பாக்தாத். நான் ஈராக்கியன்!"

"கெய்ரோவுக்கு ஏன் வந்தே?"

"ஜனாதிபதி நாசர் கூப்பிட்டார். வந்தேன்!"

சதாம், நாசர் பெயரை சொன்னவுடன் அதிகாரி தடுமாறி விட்டார். பிறகு இவனை யாவது? நாசர் அழைப்பதாவது? பொய் சொல்லுகிறான் என்று நினைத்தார். சிரித்தார். அவனை இன்னும் சிறிது சீண்டிப் பார்க்கும் ஆசை அவருக்குள் எழுந்தது. கேட்டார்.

"நாசரை பாத்தியா?"

"பாத்தேன்..!"

"என்ன பேசினார்?"

"என்னை பத்தி அவர் ஏற்கனவே நிறைய கேள்விப்பட்டிருக்கிறார். அதனால ஈராக் அரசியல் பத்தி ரெண்டு பேரும் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருந்தோம். அப்புறம் உன் வயசென்னனு கேட்டார், இருபத்திரெண்டுனு சொன்னேன். என்ன படிச்சிருக்கேன்னு கேட்டார். இடைநிலைப் பள்ளிப் படிப்பை முடிச்சிருக்கேன்னு சொன்னேன். கெய்ரோவில் தங்கி மேலே உயர் நிலைப்பள்ளியில் படிக்கிறியான்னு கேட்டார். இந்த வயசுலயா?ன்னு திகைச்சேன். வயசைப் பத்தி கவலைப்படாதே. எந்த வயசுலயும் படிக்கலாம். நீ படிச்சுக்கிட்டே மாணவர்கள் மத்தியிலும் இளைஞர்களிடமும் அராபிசக் கருத்துக்களைப் பரப்பு. நீ ஹாஸ்டல்ல தங்கிக்கலாம். உன் படிப்புச் செலவுக்கு எங்க அரசு சார்புல உனக்கு உபகாரச் சம்பளம் குடுக்க ஏற்பாடுபண்றேன். என்ன சொல்றேனு கேட்டார். நான் சரின்னு சொல்லிட்டேன்."



ராஜையா

"அப்ப நீ ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கிற ஹைஸ்கூல் ஸ்டுடன்டா?"

"ஆமா"

"எந்த ஹாஸ்டல்?"

ஹாஸ்டல் பெயரைச் சொன்னான் சதாம். அதை காகிதத்தில் குறித்துக் கொண்டபின் அதிகாரி கேட்டார்.

"உனக்கும் அந்த மாணவனுக்கும் என்ன சண்டை? அவனை குத்திக் கொல்லணும்ங்கறதுக்காக நீ ஏன் கத்தியோட தெருத் தெருவா ஓடினே...?"

இப்படிக் கேட்டவுடன் சதாமுக்குள் பழைய ஆவேசம் மீண்டும் பீறிட்டுக் கிளம்பியது.

"அவன் இனத்துரோகி. மேற்கு நாடுகளை நாசர் பகைக்கிறது முட்டாள்தனமாம்! வீட்ல பெரியவங்களை சின்னவங்க மதிக்கிற மாதிரி. உலகத்துலேயும் பெரிய நாடுகளை சின்ன நாடுகள் மதிக்கத்தான் வேணுமாம். சொல்றான். இதை மாணவர்கள் மத்தியில பேசி அவங்களையும் குழப்பிக்கிட்டிருக்கான். அந்த இனத்துரோகி உயிரோட இருக்கலாமா?"- பொலிஸ் ஸ்டேஷன் என்றும் பாராமல் வெடித்தான் சதாம்.

அதிகாரிக்கு முதல் முறையாக குழப்பம் ஏற்பட்டது. தெளிவாக அரசியல் பேசுகிறானே? அப்படியானால் இவன் சொன்ன விஷயங்களெல்லாம் உண்மையாக இருக்குமோ?

டெலிஃபோன் டைரக்டரியை எடுத்தார். சதாம் தங்கியிருப்பதாகச் சொன்ன ஹாஸ்டல் ஃபோன் நம்பரை தேடிப்பிடித்தார். ஹாஸ்டல் வார்டனுடன் ஃபோனில் பேசினார். அதிர்ந்தார்.

'சதாம் சொல்லுவது அத்தனையும் உண்மைதான்..! ஜனாதிபதி நாசரே கெய்ரோவில் அவனுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறார். அவரது உதவியுடன் தான் இப்போது சதாம் உயர்நிலைப் பள்ளியில் படித்து வருகிறான்...!'

ஃபோனை கீழே வைத்த அதிகாரிக்கு கை கால் வெடவெடத்தது.

ஸ்டேஷனை விட்டு கம்பீரமாக வெளியே நடந்தான் சதாம்!

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## சுபா



சுரேஷ்–பாலா இருவரும் இணைந்து சுபா என்றபெயரில் தான் கிளப்பி வருகின்றனர். 'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் வசனமும் இவர்கள் கைவண்ணமே.

# உதட்டில் ஒரு மச்சம்



## அமோக வாரம் 01

**ஜ்**யோதி ஹேர் டிரையரைக் கூந்தலுக்குக் காட்டியிருந்தாள்.

அதன் சிறிய மோட்டார் வேகமாக துப்பாக்கி முனை போன்ற அமைப்பின் வழியே வெளியே அனுப்பிய வெப்பமான காற்று அடர்ந்த கூந்தலை அலையடித்துக் கொண்டிருந்தது.

தில்லியின் இளங்காலை வெயில் ஜன்னல் கண்ணாடியில் அறைந்து ஊடுருவி அவள் மீது சாய்ந்திருந்தது. மைசூர் சில்க் புடவை உடம்போடு தழுவியிருக்க, அவள் ஒரு கை உயர்த்தி, தலையை அண்ணாந்திருந்த கோணத்தில் அவளைப் பார்வையிலிருந்து மறைய விடக்கூடாது என்று சூரியனே தயங்கி மேலே எழும்பாமல் இருந்தது.

மொஸய்க் தரையில் இரண்டு பாதங்கள் மிருதுவாக அவளுக்குப் பின்புறம் நடந்து வருவதை அவள் உணர்ந்து திரும்புமுன்–

நீளமான கை ஒன்று புடவை விலகியிருந்த அவள் இடுப்பில் நுழைந்தது. இன்னொரு கை அவளுடைய கைக்குக் கீழே நுழைந்து, மடங்கித் தோளைப்பற்றி இழுத்தது.

ஹேர் டிரையர் நழுவியது. பிளக் பிடுங்கிக் கொண்டு தரையில் விழுந்தது.

'ப்ஹா...' ஜ்யோதி கண்களை மூடினாள். மூக்கு விகசித்தது. இடுப் பில் பரவிய கையை வயிற்றில் அழுத்திப்பிடித்தாள். பின் கழுத்தில் பற்கள் பதிந்தன. இன்பத்தில் துள்ளி பின் பக்கம் சரிந்து அவனை அழுத்தினாள்.

"இடியட்... என்னை அழுக்குப் பண்ணாதே... நான் குளித்தாயிற்று" என்று முனகினாள். ஆனால் அவன் அழுக்குப் பண்ணுவதற்கு வசதியாக இன்னும் அவன் மேல் தீற்றிக்கொண்டாள்.

"உன்னை யார் அவசரப்பட்டுக் குளிக்கச்சொன்னது?"-என்று அவள் காது மடலை உதடுகளால் உரசினான் அரவிந்த். அவளைப் புரட்டித் திருப்பி சேர்த்துக்கொண்டான். அவள் சிலீரென்ற உடம்பில் அவனுடைய வெப்பமான விரல்கள் நடந்தபோது மின்சாரத் துணுக்குகளால் தொட்டதுபோல் சிலிர்த்தாள்.

"அரவிந்த்... வேண்டாம்.... சீண்டாதே... எந்த நிமிடமும் உனக்கு ஃபோன் வரும். டூட்டி நேரம் வந்துவிட்டது. வெளியே கார் வந்து கூப்பிடும். அப்படியே என்னை பொத்தென்று போட்டுவிட்டு நீ யூனிஃபார்மில் நுழைந்து புறப்பட்டுப்போய் விடுவாய்.. நீ திரும்பும் வரைக்கும் நான் சூடாக தத்தளித்துக் கொண்டிருக்க வேண்டும்."

அவள் பேசியது, அவன் காதிலேயே விழுந்ததா... தெரியவில்லை. அவளுடைய ஈரக்கூந்தல் அவன் பனியனையும், பைஜாமாவையும் நனைத்தது. அரவிந்த் ஷேவ் செய்யாத முகத்தை அவள் இடுப்பில் தேய்த்து துடிக்க வைத்து பெடரூமிற்கு சுமந்து நடந்தான்.

"வேண்டாம்... அரவிந்த். ப்ளீஸ்"

"வேண்டும், கண்ணம்மா.. ப்ப்ப்ள் ளீஸ்ஸ்..."

அவளை மெத்தையில் எறிந்து மைசூர் சில்க்கைப்பற்றியிழுத்தபோது, டெலிஃபோன் 'நொண நொண' என்றது.

"எடுக்காதே!" என்றாள் ஜ்யோதி.

அரவிந்த் தரையைக் காலால் உதைத்து ஒரே எட்டில் டெலிஃபோனை எடுத்தான்.

"யெஸ்?" என்றான், புருவம் சுருக்கி, "நான் ரெடி சார்... பத்து நிமிடத்தில்தானே? காரை அனுப்புங்கள்... காத்திருப்பேன்." என்று ரிசீவரை அறைந்தான்.

"ஏன் எடுத்தாய்?"

"ஸாரி, ஹனி.. அந்த சிடுமூஞ்சி இவ்வளவு காலையிலேயே கூப்பிடும் என்று நினைக்கவில்லை.... பத்து நிமிடத்தில் கார் வருமாம். ஹெல்ப் மீ ப்ளீஸ்."

"அரசாங்கத்து நாய்க்குட்டிக்கு என்னத்துக்கு காதல், எதற்குக் கல்யாணம், எதற்குப் பெண்டாண்டி?"

"ப்ளீஸ் ஹெல்ப் மீடா"

ஜ்யோதி கால்களால் அவன் வயிற்றில் செல்லமாக உதைத்து எழுந்தாள். சரிப் படுத்திக் கொண்டாள்.



எலக்ரிக் ரேஸர், சோப், டவல், அவன் அணிய வேண்டிய சீருடை எல்லாம் எடுத்து வைத்தாள்.

"ஒரே ஒரு ஜில்ஜிட்டா ப்ளீஸ்." என்றான், அரவிந்த் அவளை நெருங்கி.

"நோ" என்று க்ரீச்சிட்டுப் பின்னால் விலகினாள். ஜ்யோதி, "அங்கேயெல்லாம் தொட்டாயோ, அப்புறம் ஆபீஸிற்கு நிச்சயம் அனுப்பமாட்டேன்."

அவன் எம்பிப் பிடிக்க முனைய, அவள் திமிறிக்கொண்டு அறையை விட்டு ஓடி விட்டாள். அவளைத் துரத்த வேண்டும் என்ற ஆசையைச் சிதைத்து விட்டு, வேறு வழியில்லாமல் அரவிந்த் பாத்ரூமிற்குள் நுழைந்ததை ஜ்யோதி கைதட்டி ரசித்தாள். பாத்ரூமில் போய் அவனைச் சீண்டலாமா என்று எழுந்த எண்ணத்தை கடிகாரம் மாற்றியது. கிச்சனுக்குள் பாய்ந்தாள்.

கிச்சனில் ஜாம் பாட்டில் பக்கத்தில்கூட அரவிந்தின் ஃபோட்டோ இருந்தது.

"ஜில்ஜிட்டா" என்றாள் ஃபோட்டோ அரவிந்தைப் பார்த்து, சொன்னபோது, கன்னம் சிவந்து புன்னகை விரிந்தது.

'ஏய், எதற்கு ரூமுக்கு ரூம் என் மூஞ்சி?"

"இந்த வீட்டில் பாதி நேரம் நான் தனியாக இருக்க வேண்டியிருக்கிறது அரவிந்த். மகாபோர். ரூமுக்கு ரூம் நீ இருந்தால், உன்னோடு ஜாலியாகப் பேசிக்கொண்டு, சிரித்துக்கொண்டு, சீண்டிக்கொண்டிருப்பேன்!"

"அவ்வளவு லவ்வாடா உனக்கு?"

"ஆமாண்டா. நீ ஓட்டுகிறாயே பிளேன்- அந்த ஆகாசத்தைவிட பெரிது என் லவ். என் மனசிலிருப்பதையெல்லாம் நின்று கேட்கக்கூட உனக்கு நேரம் கிடையாது. ஞாயிற்றுக்கிழமையில் கூட பெண்டாட்டியை விட்டுட்டு எஜமானுக்கு வால் ஆட்டப் போகிறவன் நீ!"

ஹாலில் அரவிந்த் ஷூ போடும் சப்தம் கேட்டது.

'எமன்! எப்படி அதற்குள் ரெடியாகி விட்டது பார்!'

கார்ன்ஃப்ளேக்ஸ் கப்பில் ஸ்பூன் போட்டு ஹாலுக்குள் விரைந்தாள்.

அவன் சாப்பிடும்போது, ஷூ லேஸ் முடிச்சிட்டாள். இடுப்பில் பெல்ட் செருகிப் பொருத்தினாள். காலரிலும் கையிடுக்கிலும் செண்ட் விசிறிவிட்டாள்.

"நேற்று விக்ரமிடமிருந்து ஃபோன் வந்தது," என்றாள்.

"என்னவாம்?"

"இன்றைக்கு வருகிறேன் என்றான்... ஐ ஹேட் ஹிம்."

"ஜ்யோதி... விக்ரம் பாவம்... அவனை வெறுக்காதே. என்ன இருந்தாலும் அவன் நம் நண்பன்."

"நீ இருக்கும்போது வந்தால், பரவாயில்லை. நீ இல்லாதபோது வந்தால், கதவைத் திறக்கப்போவதில்லை."

"ஜ்யோதி.... கமான்! அப்படியெல்லாம் அல்பமாக நடந்து கொள்ளாதே!"

ஹார்ன் சத்தம் தெருவில் கூப்பிட்டது.

அரவிந்த் எழுந்தான்.

"ஒரே ஒரு ஜில்ஜிட்டா..."

"கொன்று விடுவேன்!" என்று ஜ்யோதி பின்வாங்கினாள்.

"ஒன்றே ஒன்று...."

"கிட்டே வந்தாயோ சத்தம் போட்டு ரகளை பண்ணுவேன். டிரைவர் உள்ளே ஓடி வந்து விடுவான்."

அதையும் மீறி அரவிந்த் அவளை மிக நெருங்கி "ஜில்ஜிட்டா". ஜ்யோதி துள்ளிக் கொண்டு போய் சோபாவில் விழுந்தாள்.

நரம்புகளிலெல்லாம் அரவிந்த் சூடாகப் பரவியிருந்தான்.

இரக்கமில்லாத ராட்சஸன். கிளப்பி விட்டுவிட்டுப் போய்விட்டான். காரின் ஓசை தெரு முனையில் ஓய்ந்தது.

ஜ்யோதி சற்றுநேரம் இறுக்கமாகப் படுத்திருந்துவிட்டு எழுந்து குளிக்கப்போனாள். கூந்தலைச் சுருட்டி ரப்பர் தொப்பியால் மூடிக்கொண்டாள். பாத் டப்பில் இறங்கினாள்.

வெதுவெதுப்பான தண்ணீர் அவளை எல்லா இடங்களிலும் தொட்டது. வருடியது. அவளுடைய ஒவ்வொரு அசைவிற்கும் எதிர் அசைவு காண்பித்துத் தட்டிக் கொடுத்தது. 'இது தண்ணீர் இல்லை. அரவிந்த்...' என்று நினைத்துக் கொண்டாள்.

கூச்சத்தால் உடம்பு சிலிர்த்தது.

'ஏய்... அங்கே தொடாதே... ச்சீய்... விடு அரவிந்த், குறுகுறுவென்றிருக்கிறது... ஐயோ எச்சில் பண்ணாதே...'

பாத் டப்பில் அவள் புரண்டு புரண்டு தவித்தபோது, அழைப்பு மணி ஒலித்தது. எந்த முட்டாள் வந்து இப்போது தொந்தரவு செய்கிறான்?

லைப்ரரிக் காரனா? போஸ்ட் மேனா? ஸேல்ஸ் வுமனா? கேஸ் டெலி வரியா?

எரிச்சலுடன் எழுந்து, இன்னொரு முறை- 'டிங்டாங்'- பூத்துவாலையால் ஒற்றி, நைட்டியில் அப்படியே புகுந்து 'டிங்டாங்'- எவன்டா முட்டாள் தனமாக மறுபடி மறுபடி பெல் அடித்துக் கொண்டு?' கதவைத் திறந்தவள் அதிர்ந்தாள்.

விக்ரம்!

"ஹாய்!" என்றான். கையில் பூங்கொத்து, முகம் நிறைய சிரிப்பு. அதிர்ச்சியை விழுங்கிவிட்டு, "ஹாய்!" என்றாள் பாதிக்காற்றாக.

"அரவிந்த் இல்லை."

"உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். ஜ்யோதி..."

"உள்ளே வா..." என்றாள் மனமில்லாமல்.

விக்ரம் பூங்கொத்தை அவள் கையில் கொடுத்தான்.

"சந்தன சோப்பா? கமகமவென்றிருக்கிறாய்!" என்று அவள் எதிர்பாராத கணத்தில் முகத்தை முகர்ந்தான்.

ஜ்யோதி குறுகி விலகினாள். எவனோ மூன்றாம் மனுஷனாக இருந்தால், முகத்திலேயே காறித்துப்பி போடா நாயே என்று துடைப்பத்தை எடுக்கலாம்.

விக்ரம் பழைய நண்பன். அவனுடன் கைகோர்த்து மலையேறியிருக்கிறாள். பைக்கில் அவன் தோள் பிடித்து பயணம் செய்திருக்கிறாள். பீச்சில் துரத்திப் பிடித்த போது ஒருமுறை மேலேயே விழுந்திருக்கிறாள். நட்போடு செய்த போது, எதற்குமே கூசியதில்லை. அப்போது அவன் பார்வை அழுக்காக இருந்ததில்லை.

"பூக்கள் எல்லாம் அழகாய் இருக்கின்றன விக்ரம்."

"உன்னைப் போல..." என்றான். "கன்னத்தில் என்ன சிவப்பு? அந்த முரடன் கடித்தானா? பூவைக் கையாளத் தெரியாதவன். ஏய், ஏன் முகத்தை இவ்வளவு சீரியஸாக வைத்துக்கொண்டிருக்கிறாய்?"

"என்ன சாப்பிடுகிறாய், விக்ரம்?"

"சிரிக்காமல் கேட்கிறாய்..."

"சிரிப்பு வரவில்லை. என்ன சாப்பிடுகிறாய்?"

"உன்னை..."

"விக்ரம், கட் தி ஜோக்ஸ்"

"ஜோக் இல்லை ஹனி... என்றைக்கு என்னைப் புரிந்து கொள்ளப் போகிறாய்? என்னிடம் இல்லாதது எது இருப்பதாய் நினைத்து அரவிந்த் பக்கம் விழுந்தாய் ஜ்யோதி?"

"நாம் ஏற்கனவே இது பற்றிப் பேசி விட்டோம். விக்ரம் இரண்டு பேனாவையும் தராசுத் தட்டில் வைத்து நான் எந்தத் தீர்ப்பும் எழுதவில்லை. எனக்கு அரவிந்தைப் பிடித்தது. கல்யாணம் செய்துகொண்டேன்."

"என்னைப் பிடிக்கவில்லையா?"

"அப்படியில்லை. உன்னை நான் நண்பனாகப் பார்த்தேன். அரவிந்தை ஆண்மகனாகப் பார்த்தேன்."

"என்னை இன்று ஆண்மகனாகப் பார்க்கப் போகிறாய், ஜ்யோதி." விக்ரம் எழுந்து, காலால் கதவைச் சாத்தினான்.

(○—வரும்—○)

---

கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....

# கவியரசுவின் சுயசரிதை

## 20

**அ**ன்றைக்குத் தலைமைக் கழகத்திலிருந்து ஒருவர் வந்தார்.

அவர்களுக்காக உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்போவதாக அவர் சொன்னார்.

"செய்வதைச் சீக்கிரமாகச் செய்யுங்கள்...." என்று அவன் அவசரப்படுத்தினான்.

விடுதலையின் சுகத்தைச் சிறைச் சாலையில்தானே உணரமுடியும்!

அவர் போய்விட்டார்...!

ஒன்று, இரண்டு என மாதங்கள் கடந்தன.

அப்பீல் செய்யப்படவில்லை...!

காரணம், அது இரண்டாவது அப்பீல்.

ஒருவன் ஒரு கோர்ட்டில் தண்டிக்கப்பட்டதும் முதல் அப்பீலுக்கு நீதிபதி அனுமதி கொடுத்தே ஆகவேண்டும். அங்கேயும் தண்டனை உறுதி செய்யப்பட்டால், அதற்கும் மேல் கோர்ட்டில் அப்பீல் செய்யப்படும்.

அதை நீதிபதி விரும்பினால் எடுத்துக் கொள்ளலாம். இல்லையென்றால் தள்ளிவிடலாம்!

அது நீதிபதியின் மனோநிலையையும் வழக்கின் தன்மையையும் பொறுத்தது.

சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அவன் தண்டிக்கப்பட்டான்.

செஷன்ஸ் அப்பீலில் அந்தத் தண்டனை உறுதி செய்யப்பட்டது.

உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது அப்பீல்...!

உயர் நீதிமன்ற நீதிபதிகளில் கருணையுடையவர்களென்று சிலபேர் உண்டு.

அவர்களுடைய தவணை வரும்போதுதான் வக்கீல்கள் இரண்டாவது அப்பீலைக் கொண்டு போய் நீட்டுவார்கள்.

அவன் சிறையிலிருக்கும்போது அப்பீல் போகவேண்டிய இடத்தில் ஒரு நீதிபதி இருந்தார்.

அவர் கருணை இல்லாதவர், கோபக்காரர் என்றெல்லாம் பெயர் வாங்கியவர். அவர் இருக்கும்வரை அப்பீலைக் கொடுப்பதில்லையென்று கழக வக்கீல் முடிவு கட்டியிருந்தார்.

அந்தப் பாவி, வழக்கத்திற்கு விரோதமாக ஐந்து மாதகாலம் அந்த ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார்.

இடையிலே இரண்டுநாள் அவரது பிள்ளைக்குப் 'பூணூல் கல்யாணம்' என்று 'லீவு' எடுத்துக்கொண்டார்.

அந்த இரண்டு நாட்கள் டபிள்யூ. எஸ்.கிருஷ்ணசாமி நாயுடு என்பவர் ஆசனத்தில் இருந்தார்.

கைதிகளால் கருணைக் கடவுள் என்று போற்றப்படுகிற நீதிபதிகள் சிலர் உண்டு.

அவர்களில் நீதிபதி சோமசுந்தரமும், கிருஷ்ணசாமி நாயுடுவும் முக்கியமானவர்கள்.

கிரிமினல் குற்றவாளிகள்கூட தங்கள் அப்பீல் மனு இவர்களிடம்தான் போயிருக்கிறதென்று அறிந்தால் உற்சாகமாகவே இருப்பார்கள்.

அவனது வழக்கிலும் கருணை கிடைத்தது...!

நீதிபதி அப்பீலை ஏற்றுக்கொண்டு அவர்களை ஜாமீனில் விட உத்தரவிட்டார்.

அந்தச் செய்தியும் கட்சிப் பிரமுகர்களால் அவனுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

ஒருநாள் மத்தியானம் வேப்பமர நிழலில் துண்டை விரித்து அவன் தூங்கிக்கொண்டிருந்தபோது, ஒரு வார்டர் வேகமாக வந்து,



"ஒரு நல்ல செய்தி.... சொன்னால் எவ்வளவு கொடுப்பீர்கள்?" என்று கேட்டார்.

அவனுக்கிருந்த விடுதலை வெறியில் "ஆயிரம் ரூபாய் தருகிறேன்!" என்றான் அவன்.

வார்டர் சிரித்துக்கொண்டே, "அவ்வளவு வேண்டாம். ஐம்பது ரூபாய் கொடுங்கள் போதும்...!" என்று மடியிலிருந்து ஒரு பத்திரிகையை எடுத்தார்.

அந்தப் பத்திரிகையில் எட்டுப் பத்தித் தலைப்பில் 'கண்ணதாசன் ஜாமீனில் விடுதலை' என்று போடப்பட்டிருந்தது.

அதனடியில், முழு விவரமும் தரப்பட்டிருந்தது.

அந்த நேரத்தில் அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

துள்ளிக் குதித்தான்...!

ஓர் அரசியல் தியாகி விடுதலைச் செய்தியைக்கேட்டு அப்படிக் குதிக்கலாமா...?

கூடாதுதான்...!

அவன் என்ன தியாகியாவதற்கா ஜெயிலுக்கு வந்தான்...?

ஏதோ வந்தான்; மாட்டிக்கொண்டான்...!

விடுதலை என்றதும் உற்சாகம் பிறந்துவிட்டது.

அவனது நண்பர்கள் இருபது பேருமே மிகுந்த உற்சாகமாக இருந்தார்கள்.

அவனைச்சுற்றி உட்கார்ந்து கொண்டு, வெளியே போனதும் பத்திரிகை ஆரம்பித்து 'போலித்தலைவர்கள்' கொட்டத்தை அடக்க வேண்டும், என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

அந்த நேரத்தில்தான் அவனது 'கலை நண்பர்' தனது பத்திரிகையின் முதல் இதழை வெளியிட்டிருந்தார்.

அதில் அவனைப் பற்றிக் கொஞ்சம் விஷமும் கலந்திருந்தார்.

அவன் சிறையிலிருக்கும்போதே அவன் எழுதிய 'இல்லற ஜோதி' படம் வெளிவந்து தோல்வியடைந்திருந்தது.

அதில் ஒரு பகுதியைத் தான் எழுதியதாக அந்த நண்பர் வெளியிட்டிருந்தார்.

மனத்திலே ஆத்திரத்தையும் வஞ்சத்தையும் சுமந்த வண்ணம் அவன் விடுதலையை எதிர்பார்த்திருந்தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அவனும், அவனது நண்பர்களும் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்கள்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

## உருவகக் கதை

# சலுகைகள்

அது ஓர் அழகான தங்கக் கூடு. வெள்ளியினால் சங்கிலி செய்து வீட்டு முன் வாசலில் அதனைத் தொங்க விட்டிருந்தார்கள். அந்தக் கூட்டுக்குள்ளே! அப்பப்பா! எத்தனை வகையான பழங்கள்! என்னென்ன தானிய வகைகள்!


உள்ளே! அழகான ஒரு கிளி. அந்தச் சின்னஞ் சிறிய கிளிக்கு இத்தனை உணவு வகைகளா?

ஆமாம்! அது ஒரு பெரிய செல்வந்தரின் மாளிகை. வீட்டில் யாருக்காவது பொழுது போகவில்லையென்றால் அந்தக் கிளியோடு கொஞ்சிக் குலாவுவார்கள். அதற்கு ஒரு தங்கக்கூடு. கூடு நிறைந்த பழவகைகள், தானியங்கள். கொடுத்து வைத்த கிளி!

ஒரு பழத்தையெடுத்து இரண்டு கம்பிகளினூடாகக் கொடுக்கப் பார்த்தது, உள்ளேயிருந்த கிளி. பழம் ரொம்பப் பெரியது. வெளியே எடுக்க முடியவில்லை.

"கதவைத்திற, நான் எடுத்துக் கொள்ளுகிறேன்!" அவசரப்படுத்தியது வெளியேயிருந்த கிளி.

"அதைத் திறக்க முடியாதே! கதவு பூட்டியிருக்கிறது." கவலையோடு கூறியது உள்ளேயிருந்த கிளி. "நேரத்துக்கு நேரம் கதவைத் திறந்து புதிய புதிய பழவகைகள், தானியங்களை நிறையத் தருவார்கள். என்னால் சாப்பிட முடியாதளவுக்கு சாப்பாடு.



இரை தேடி அலுத்துவிட்ட ஒரு காட்டுக்கிளி, அந்த வீட்டு முற்றத்தில் நின்ற மாமரத்தில் வந்திருந்தது. பசிக்களையில் அதற்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது! அப்படியே மெல்ல தூங்கவும் செய்தது.

'கீ கீ....கீ...' சத்தத்தைக் கேட்டு விழித்துக்கொண்ட அந்தக் கிளி அங்குமிங்கும் பார்த்தது; ஒருவரையும் காணவில்லை. "என்ன பார்க்கிறாய்? நான்தான் கூப்பிட்டேன்!" குரலைக் கேட்டு கீழே குனிந்து பார்த்தது காட்டுக்கிளி. வீட்டின் முன்னால் தொங்கிய அந்தத் தங்கக் கூடு இப்போது நன்றாகத் தெரிந்தது அதற்கு. அதற்குள்ளே ஒரு கிளி, "என்ன அப்படிப் பார்க்கிறாய்? நான்தான் கூப்பிட்டேன். என் இனத்தவரைப் பார்த்து எத்தனை நாளாயிற்று?" ரொம்பக் கவலையோடு கூறிற்று கூட்டுக்கிளி.

மரத்திலிருந்த கிளி ஜிவ்வென்று பறந்து வந்து கூட்டுக்குப் பக்கத்தில் இருந்தது. கூட்டுக்குள்ளே! அடேயப்பா! விதம் விதமான பழவகைகள்; வேண்டிய மட்டும் தானியங்கள். அவைகளைப் பார்த்ததும் அதன் நாக்கில் ஜலம் ஊறிற்று. "எனக்குப் பசிக்கிறதேயில்லை; உனக்கு ரொம்பப் பசிக்கிறதா?" பரிவோடு கேட்டது கூட்டிலிருந்த கிளி. 'ஆம்!' என்பது போல பரிதாபமாகக் கூட்டைப் பார்த்தது அந்தக் காட்டுக்கிளி.

**வீ.எம். சுந்தரம்**

நீயே பார்! எவ்வளவு சாப்பாடு மிஞ்சிக் கிடக்கிறது!" பெருமையடித்துக் கொண்டது உள்ளேயிருந்த கிளி.

"அப்படியா? நீ வெளியே வருவதேயில்லையா?" ஆச்சரியத்தோடு கேட்டது, வெளியேயிருந்த கிளி.

"நான் ஏன் வெளியே வரவேண்டும்? உன்னைப் போல் ஒரு நேரச்சாப்பாட்டுக்கே ஊரூராய் அலைவதற்கா? இங்கே பார், வித்ம் விதமான சாப்பாடு, விரும்பிய நேரம் சாப்பிடலாம்." கர்வத்தோடு சொன்னது கூட்டுக்குள் இருந்த கிளி.

"ஓ நீ வெளியே வருவதேயில்லையா? கூட்டுக்குள்ளேயே அடைப்பட்டுக்கிடக்கிறாயென்று சொல்லு. அடிமை வாழ்வு. நீ...நீ... நீயொரு அடிமை. தங்கக்கூட்டுக்குள் அடிமையாயிருந்து வயிறு நிறையச் சாப்பிடுவதை விட, பட்டினியோடு சுதந்திரமாக வெளியில் உலாவி வருவேன். உன் அடிமைச் சாப்பாட்டை நீயே வைத்துக்கொள்!" கூறிக் கொண்டே விர்ரென்று பறந்துச் சென்றது அந்தக் காட்டுக்கிளி.

# வாய் விலங்கு

சூரியன் உச்சிக்கு வந்ததும் வேலுவுக்குப் பசி வயிற்றை கிள்ளியது. அவன் உடல் பூரா வியர்வை வழிந்தோடியது. தலையைச் சுற்றியிருந்த சால்வைத் துண்டால் வியர்வையை அழுத்தித் துடைத்தவன் கண்களுக்கு நாவலடியில் இருந்த கஞ்சிக் கலயம் கண்ணில்பட்டது. கூடவே ஆத்தாவின் ஞாபகம் அவன் மனசில் வந்தது. அவனுக்குப் பிடித்தமான புளிச்சாதம். கீலம் கருவாட்டு வறுவல். தனக்கு எது பிடிக்கும், பிடிக்காது என்று தெரிந்து நடக்கும் ஆத்தாவை எண்ணியதும் வேலுவுக்குப் பெருமையாக இருந்தது.

கஞ்சி முட்டியைக் காலி செய்து விட்டு வேலு நாவல் மரத்தடியில் சற்றே கண்ணயர்ந்தான். நாவற்பழம் ஒன்று அவன் முகத்தில் பொட்டென்று விழவே வேலு திடுக்கிட்டுக் கண்விழித்தான். எதிரே சலங்கை ஒலியாய்ச் சிரித்து நின்றாள் வள்ளி.

"அட உன்னோட வேலயா? ஒன்ன.. என்ன செய்யிறன் பார்!" என்று எழுந்த வேலு அங்கும் இங்கும் பார்வையை வீசிவிட்டு அவள் கன்னத்தில் இதழ் குவித்தான்.

"சீ...போ மச்சான். ஆராச்சும் பாத்திடப் போறாங்க!" வள்ளியின் கன்னஞ் சிவந்தது.

"நான் கட்டிக்கப்போறவள தொடப் படாதா?" கேட்டுவிட்டு அவள் காதைச் செல்லமாகத் திருகினான் வேலு.

"வெளயாடாத மச்சான். சுள்ளி பொறக்க வந்தனா-மறந்து போச்சி. மாரியாத்தாக்குப் பொங்கல் நேத்தி நாளைக்கி. மறந்துக்காம பண்டாரி கடையில ஈச்சம்பழம் வாங்கிக்க!" சொல்லிவிட்டு, இடுப்பசைய ஒயிலாக நடந்து போனாள் வள்ளி. அவள் போவதையே பார்த்துக்கொண்டிருந்த வேலு, 'என் கண்ணே பட்டிடும் போலிருக்கே!' என்று தனக்குள்ளேயே முணுமுணுத்தான். சிரிப்பு அவன் உதட்டில் சிக்கித் தவித்தது.

வேலு மருதமரத்தடிப் பக்கமிருந்த பாறாங்கல் ஒன்றின்மேல் உட்கார்ந்தான். பார்வைக்கெட்டிய தூரம் வளர்ந்திருக்கும் மரங்கள் காடாகக் காட்சி அளித்தது. நினைவுகளின் சிலுசிலுப்பில் வேலு தன்னை மறந்தான்.

**வே**லு ஒரு ஏழைத் தொழிலாளி. அவன் பண்ணையார் வீட்டுப் பரம்பரைக் கூலி. மந்தைகளை மேய்ப்பவன். விபரந் தெரிந்த நாளிலிருந்து அவரைத் தவிர அவன் வேறு யாரிடமும் வேலை செய்தது கிடையாது. பண்ணையாரே அவனுக்குத் தெய்வம். உறவு என்று சொல்லிக்கொள்ள ஆத்தாவைத் தவிர வேறு யாருமில்லை. பண்ணையார் கொடுக்கும் தினக்கூலியில், ஆத்தாவும் வேலுவும் வயிற்றைக் கழுவ அதுபோதுமாயிருந்தது.

பண்ணையார் அந்தக் கிராமத்தில் வச்சதுதான் சட்டம். பெரிய புள்ளி. பெயர் பெரியசாமி எனினும் அதைச்சொல்லி அழைக்கும் தைரியம் யாருக்கும் இல்லை. வயது ஐம்பதைத் தாண்டினாலும் வாலிப மிடுக்கும் முறுக்கிய மீசையும் காதோரமான கறுப்பு மச்சமும் பண்ணையாரை அடையாளங் காட்டிவிடும். வேலு வழக்கம்போல மந்தைகளை மேயவிட்டு மரத்தடியில் சாய்ந்திருந்தான். "ஐயோ, அம்மோவ், மாரியாத்தா!" என்ற கதறல் கேட்டு அவன் திடுக்கிட்டான்.

பார்வையைப் பலபக்கமும் சுழல விட்டான். ஆச்சரியம் அவனைக் கௌவியது. ஒரு அழகி, நொண்டி நொண்டி வந்து கொண்டிருந்தாள். அவள் வந்த பாதையில் இரத்தச் சொட்டுக்கள். வேலு மலைத்து நின்றபோது அந்த அழகி அவனை நெருங்கி விட்டாள். அவள் கண்களில் பெருகிய நீர் அவள் மார்புச்சேலையை நனைத்திருந்தது.

"என்னாச்சு புள்ள ஏதும் கடிச்சிரிச்சா?"

"இல்லிங்க கருவேலம் முள்ளு கால்ல நல்லா ஏறிரிச்சி. எடுக்க முடியல்ல. ரொம்பக் கடுக்குதுங்க!" சொல்லும்போதே அந்த அழகிய முகம் அபிநயித்தது.

"இந்தா புள்ள, எதுக்கு நீ சின்னப் புள்ளையாட்டம் அழுறே? பயப்புடுறே! இப்பிடி இருவன்," வேலு அவள் கையைப் பிடித்து இழுத்து இருத்தினான்.

அவன் வசதியாக உட்கார்ந்து அந்த அழகியின் காலைத் தூக்கி தன் மடியில் நீட்டி வைத்தான். மொழு மொழு என்றிருந்த காலில் வேலுவின் கைபட்டதும் அவள் மேனி சிலிர்த்தது.

"நீ ஒண்ணுக்கும் பயப்புடாத புள்ள. சோத்துக் கைப்பக்கமாத் திரும்பு..." சொல்லி வாயெடுக்குமுன் வெடுக்கென்று முள்ளைத் தன் கூரிய நகத்தால் கிள்ளி இழுத்து விட்டான் வேலு.

"யோவ்!" என்று அலறியவள் வேலுவின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள், வலிதாங்காது.

சட்டென்று தீயைத் தொட்டவள் போல் துள்ளி எழுந்தாள்.



"பெரிய உதவிங்க... நா வர்ரன்.."

போகப்புறப்பட்ட வள்ளியை வேலு மறித்தான். "என்ன புள்ள உன் பேரக்கூடச் சொல்லாமப் போனா எப்பிடி?"

"என் பேர் வள்ளிங்க. பண்ணையார்ர கரும்புத் தோட்டம் தெரியுமில்ல. அதுக்கங்கால கிழக்கு மேட்டுப் பக்கம் முனிசாமின்னு கேட்டா தெரியாதவங்க இல்ல. அவர் என் அப்பனுங்க... கெழமைக்கு மூணு வாட்டி சுள்ளி பொறக்க இந்தப் பக்கந்தான் வருவன்."

வள்ளி நடக்க அடியெடுத்தபோது வேலு. "வள்ளி கொஞ்சம் நில்லுபுள்ள. முள்ளுக் குத்தின காயம் மண்ணில பட்டா ஆகா." சொல்லிய வேகத்தில் தன் இடுப்பைச் சுற்றியிருந்த சால்வைத் துண்டைக் கிழித்து அவள் காலில் கட்டுப்போட்டான்.

**ரூபாராணி**

அன்று பூத்த காதல்... கலியாணத்துக்கு நாள் பார்த்துக் காத்துக் கிடக்குது. வேலு வெட்கத்தில் குழம்பியபோது சடசடவென்று பறவைகள் சிறகடிக்குஞ் சத்தங்கேட்டு நினைவுகளிலிருந்து நிமிர்ந்தான்.

அந்தி வானம் சிவந்ததைக் கண்ட வேலு மந்தைகளைச் சாய்ப்பதில் பரபரத்தான். 'செகப்பி மாடு மட்டும் கொறையுதே...' முணுமுணுத்த வேலு அதைத்தேடி அங்குமிங்கும் அலைந்தான்.

எல்லா இடமும் சுற்றி வளைத்துத் தேடுதல் வேட்டை நடத்தியபோது... "மொதலாளி.... என்ன உட்டிடுங்க. ஒங்களுக்குக் கோடிப்புண்ணியமுங்க. என்ன ஒண்டும் பண்ணிடாதீங்க சாமி. ஒங்களத் தெய்வமா நெனச்சிக் கும்பிடுறன். வேண்டாஞ் சாமி...!" அந்தக் கதறலும் அலறலும் வேலுவின் காதில் பரிதாபமாகக் கெஞ்சியது.

இந்தக் கொஞ்சும் குரல் வள்ளியினுடையது என்று தெரிந்துகொள்ள அவனுக்கு அதிகநேரம் பிடிக்கவில்லை. ஆவேசத்துடன், சடைத்து வளர்ந்த மரங்களின் பக்கம் பாய்ந்தபோது வேலுகண்ட காட்சி...

பண்ணையாரின் காமவெறியின் முன்னர் அவன் வள்ளி ஊசலாடிக் கொண்டிருந்தாள்.

வேலுவின் இரத்தம் கொதித்தது. அந்தப் பிரதேசமும் அதிரும்படி வேலு கனல் கக்கினான். அவனைக் கண்ட கணத்தில் பண்ணையார் தன்னை விடுவித்துக் கொண்டு சொன்னார்:

"அடோய் வேலு! சும்மா காட்டுக் கூச்சல் போடாத. ஊர் உலகத்ல நடக்காத வெசயமா? நான் சொல்றதக் கவனமா கேளு. இஞ்ச நடந்த வெவகாரத்த வெளியில மூச்சு விட்டியோ வள்ளியோட மானம் காத்தில போயிடும். சோரம் போனவளெண்டு அவள ஆரும் கட்டிக்க மாட்டானுகள். நீ கட்டிக்கிட்டாலும் கெட்டுப்போனவளக் கட்டிற்றான்னுதான் ஆக்கள் உன்ன இழப்பமா பாப்பானுகள், கதைப்பானுகள்.

நல்லா யோசி. நீயே முடிவெடு. ம்...ம்... கருக்கலுக்கு முந்தி மாடுகளச் சாச்சி கெதியா வந்திடு!"

சாதாரணமாகச் சொல்லிய பண்ணையார் இராஜமிடுக்குடன் நடையைக் கட்டினார்.

# செம்மணி சிரிக்கிறது

கடற்கரை மணலில் கால்கள் புதையப் புதைய நடக்கிறேன். மனதில் புதைந்துபோன பசுமை நினைவுகள் பீறிட்டுக் கிளம்பின. இன்றைய தடம் மாறிப்போன வாழ்க்கையின், வரண்டு போன நிஜங்களுக் கிடையில்.... அவளுடனான இறந்தகால நினைவுகளை அசை போடுவது சுகம் தந்தது...

"எந்தக் காட்டில்...
மான்கள் வலைவிரிக்க...!
வேடர்கள் சிக்கிக்கொள்கிறார்களோ....
அந்தக் காட்டில் நான் காணாமல் போனேன்...
உன்னால்....!?"

அவளிடம் முதன் முதலாய் என் காதலை விடுகதையில் சொன்ன நாளும்... இலேசாய் விரல்கள் உரச நடந்து திரிந்த நாட்களும்... கண்ணீருடன் கடைசியாய்த் தந்த 'முதல் முத்தமும்'... அனைத்தும் பசுமை நினைவுகளாய்...

கண்களில் துளிர்த்த கண்ணீரை சுண்டி விட்டபடி எழுந்து நடக்கிறேன்... அன்று போலவே இன்றும் நிலவு... வானம் மாற வில்லை... அலைகள் ஓயவில்லை... எதுவுமே மாறவில்லை... ஆனாலும் நானும் அவளும் கட்டிய மனக்கோட்டை மட்டும் சரிந்து போனதேன்...?

யுத்த அலை சப்தமில்லாமல் வந்து சரித்துப் போட்டபோது... ஒரு விடியலில் அவளும் வடக்கும் எனக்குச் சொந்தமில்லாமல் போனது...

திக்குத் திசை தெரியாமல், பாஷை புரியாமல் எனது நாட்டுக்குள்ளேயே தனிமைப்பட்டு, தவித்து, வாப்பாவின் அயராத முயற்சியினால் அகதியாய் அந்நிய தேச வாழ்வு. ஆறு நீண்ட வருஷங்கள்... இழந்த அனைத்தும் கிடைத்தன. பணம், பொருள், தலைநகரில் வீடு.. ஆனால் அவள்... நினைவுகள் மட்டுமே எஞ்சியிருக்கிறது.

'எங்கிருக்கிறாய் ப்ரியா...? மதங்கள் கடந்து நேசப்பட்டோம். சில நூறு மைல்களுக்கப்பால் நீ இருந்தும்... இருக்கிறாயா ப்ரியா...? உன் உயிர் உன்னிடமே இருக்கிறதா? என் நாடு உன்னை களங்கப்படுத்தாமல் வைத்திருக்கிறதா...?'

வருஷங்களாய் அடங்கிக் கிடந்த குமுறல் கண்ணீராய் வெளிப்பட்டு கடல் நீருடன் கலந்து கரைந்தது.

'இந்தக் கடல்நீர், வடக்குக் கரையில் வாடி நிற்கும், என் தேவதைக்கு என் காத்திருத்தல் சொல்லுமா....?'

பித்தனாய்.. பிதற்றியபடி நடக்கிறேன். பாதைக்குவர அவசரங்கள், அவஸ்தைகளுடனான மாலை நேர பஸ் நிறுத்தம்.. யார்



அது..? எங்கோ பார்த்த முகமாய், நெற்றியில் திருநீறும் கொஞ்சமாய் கூன் வீழ்ந்த முதுகும்... தீட்சண்ய பார்வையும்.

'ஆறுமுகம் மாமா....'

"மாமா..."

நிமிர்ந்து கொஞ்சம் பயங்கலந்த பார்வை பார்த்தார்

"யாரு மோனே நீ..?"

"என்னத் தெரியல்லியே மாமா... உங்க பக்கத்து தெரு காஸிம் மாஸ்ரரோட மகன் நஸீம்!"

புரிந்து கொண்டார். கண்கள் ஜ்வலித்தது. என் வாப்பாவின் பால்ய சிநேகிதர்.

"வாப்பா.. சுகமா இருக்கிறாரே தம்பி?"

"சௌக்கியமா இருக்கிறார். உங்க வீட்டுல எல்லாரும் எப்பிடியிருக்கினம்? கொழும்புக்கு எப்ப வந்தீர்கள்?"

பக்கத்தில் இருந்த ரெஸ்டோரண்டிற்குள் அவரையும் அழைத்துக் கொண்டு நுழைந்தேன்..

"அத ஏன் கேக்கற தம்பி. நம்ம சுரேஷ் சுவிஸ்ல இருக்கிறவன். நாளைக்கு வாறானாம். அத நினைச்சாத்தான் பயமா இருக்குது"

"ஏன் மாமா சுரேஷ் வாறது சந்தோஷமில்லியோ?"

"சந்தோஷம்தான் தம்பி; ஆனா நாடு இருக்கிற நிலைமையில இளம் பெடியள வீட்டுல வெச்சிருக்கிறதும்... மடில நெருப்பக் கட்டிட்டு இருக்கிறதும் ஒன்றுதானே!"

வார்த்தைகளில் விரக்தி, தன் பிள்ளைகளையே பக்கத்தில் வைத்துக் கொள்ள முடியாத அவலம்.

ப்ரியாவைப்பற்றிக் கேட்கத் துடித்த நாவை கட்டுப்படுத்தி வார்த்தைகள் தேடினேன். என் கேள்வி அவளைப் பாதிக்கக் கூடாது.

"மாமா.. சிவசாமி மாமா வீட்டுல எல்லாரும் நல்லா இருக்கினமோ?"

படபடப்பை காட்டிக் கொள்ளாமல் கேட்டேன்.

"அத ஏன் கேக்குற தம்பி.. சிவசாமி ஷெல்லில் அகப்பட்டு சிதறிப்போட்டார்..."

அந்த வெள்ளை உள்ளமா? அவர் முகம் மனதில் நிழலாடியது. எனக்குத் தமிழைக் கற்றுத்தந்தவர்.

'அச்சமில்லை... அச்சமில்லை அச்சமென்பதில்லையே உச்சி மீது வானிடிந்து...'

சொல்லித்தந்தவர், ஷெல்லுக்குள் சிதறிப்போனாரா?

"அது மட்டுமில்ல தம்பி. அவர் மகள் ப்ரியா டீச்சர் உத்தியோகம் பார்த்தவள்.

**எம். சகீல்**

குடும்பத்யும் காப்பாத்திக்கொண்டு இருந்தாள். ஒரு நாள் வேலைக்குப் போனவள் திரும்பவே இல்ல... இப்போ ஒரு வருஷமாச்சு.. என்ரை மகனுக்கு அவள எடுக்க நினைச்சனான்.... பள்ளிக்கூடம் போனவள் திரும்பி வரவே இல்லை. அவள் அம்மா அவளைத் தேடாத இடமில்லை... அந்தச் சோகமும், தனிமையும் தாங்கமுடியாமல்.. ஆறு மாசம் முந்தி அவவும் போய்ச் சேர்ந்துட்டா.. ஒரு காலத்துல நல்லா வாழ்ந்த குடும்பம் இப்ப ஒருத்தரும் இல்ல. அவை வாழ்ந்த வீடு மட்டும் பாழடைஞ்சு போய்க் கிடக்குது!"

அவர் விடைபெற்றுச் சென்ற பின்னரும்... நான் கல்லாய்.. சமைந்திருந்தேன். கண்ணீர் வரவில்லை.

"ப்ரியா... எனக்காகத்தான் காத்திருந்தாயா..? உன்னைக் காணாமல் ஆக்கியவர்களுக்கு என் மனப்பூர்வ நன்றி. ஏனெனில் உன்னை இறந்தவர் பட்டியலில் போடாமல்.. காணாமல் போனோர் பட்டியலில் சேர்த்ததற்காய்...! உனக்கான என் காத்திருத்தல் தொடரும்..."

(யாவும் கற்பனையல்ல)



படிப்பகம்

www.padippakam.com

# கட்டாய காதல்

"பேரழகி பத்மினி
என்னிடம் வரவேண்டும்
தன்னையே தரவேண்டும்!"

டில்லிக் கோட்டையை
முற்றுகையிட்ட
அலாவுதீன் ஆணையிட்டான்!

டில்லி மன்னரின்
இளம் மனைவி
பத்மினி!

டில்லி மன்னர்
அலாவுதீன் படைகளால்
கைது செய்யப்பட்டார்!

"சித்தூர் கோட்டை
சிதறாமல்
இருக்க வேண்டுமானால்
சித்தூர் ராணி பத்மினி
வெளியே வரவேண்டும்!"

அலாவுதீன்
வெற்றிப் போதையில்
வீங்கிக் கத்தினான்!

பத்மினி
பார் புகழும் பேரழகி!

படைத்தவன்
வஞ்சகம் செய்யாமல்
வடித்தெடுத்த தந்தச் சிலை!

நேரில் சந்தித்ததில்லை
சித்திரத்தில் கண்டிருக்கிறான்!

"சித்ரமே-இப்படி
சொக்க வைக்கிறதே!"
என்று வியந்திருக்கிறான்!

'சித்திரத்தில்கூட
இதழ்களில்-எப்படி
தேனூறுகிறது?'
என்று மயங்கியிருக்கிறான்!

"பூரித்த கனியிரண்டை
காணக் கண்களிரண்டு
போதவில்லையே
என்று வருந்தியிருக்கிறான்!

'சுவை தரும்
கனியிரண்டை
கொய்வது எந்நாளோ?'
என்று ஏங்கியிருக்கிறான்!

'மாதுளம் பூ நிற
மேனியில்
மன்மத ராகம்
மீட்டுவது எந்நாளோ?'
காமம் தலைக்கேற
ஜாமம் முழுக்க விழித்திருக்கிறான்!

"கோட்டையை பிடித்து
கோமளவல்லியை-பஞ்சு
மூட்டையாக
கொண்டு வருகிறேன்!"
என்றுவிட்டு புறப்பட்டான்!



பறந்த குதிரைகளின்
குளம்படி எழுப்பிய
புழுதியிலும்
மறைந்து போகவில்லை
அவள் முகம்!

குமுத மலர் வாயில்
குடிக்க வேண்டும்
அமுதம்!

கமுகு மரத் தோளில்
வழுக்கிவிழ வேண்டும்!

சங்கு நிகர் கழுத்தில்
கொஞ்சி மகிழ வேண்டும்!

பொங்கு கடல் போல
குமுறியது காமம்!

தங்குதடையின்றி
தாவியது மனம்!

டில்லி மன்னரின்
கோட்டை
வீழ்ந்ததும் மகிழ்ச்சியில்லை!

டில்லி மன்னர்
கைதானதும்
களிப்பில்லை!

'பத்மினி எங்கே?
பதுமை எங்கே?

அலாவுதீன் விழிகள்
அவளைத்தான் தேடின!

"வெற்றிக் கனி
சுவைத்து அலுத்துவிட்டது!
அவளே கனி
சுவைக்க ஆசையாகவிருக்கிறது!"

மடல் ஒன்று
அவன் கரம் சேர்ந்தது!

"சுல்தானுக்கு வணக்கம்!
பத்மினி எழுதுவது.
உம்மை மணக்க
எனக்கு சம்மதம்!
உமது ராணியாக
மாறப்போவதால்
ஒரு விண்ணப்பம்!

என் தோழிகளுடன்
எம் உடமைகளை
ஏற்றிக்கொண்டு
பல்லக்கில் வருகிறோம்!

வழியில் யாரும்
குறுக்கிடாதிருக்க வேண்டும்!"

மடல் படித்தவன்
வானத்தில் பறந்தான்!

கைக்குள் வருகிறது
கட்டழகுப் பெட்டகம்!

ஆராய்ந்தும் பார்க்கலாம்
உராய்ந்தும் பார்க்கலாம்!

அணைத்தும் கொள்ளலாம்
நனைத்தும் கொள்ளலாம்!

சுவை பல அறியலாம்
சுளை என அள்ளலாம்!

கனவு முகடுகளை
அலாவுதீன் உரசினான்!

பல்லக்குகள் வந்தன.
இன்னொரு விண்ணப்பமும்
வந்தது!

"என் கணவர் பீம்சிங்கை
ஒரு தடவை காணவேண்டும்!"

அலாவுதீன் மறுக்கவில்லை.
அனுமதி கொடுத்தான்!

"பிரியாவிடை போலிருக்கிறது
பெற்றுக் கொள்ளட்டும்!"
என்று நினைத்தான்!

தன் காதருகே
வளைகரம் சிணுங்கும்
ஓசைக்காக காத்திருந்தான்!

கேட்டது சத்தம்
வளைகரச் சத்தமல்ல
வாட்கள் உராயும் சத்தம்!

பல்லக்கில் வந்தது
பேரழகியல்ல
பேராபத்து!

'சூழ்ச்சியால் என்னை
சுருக்கிவிட்டாளே!'
கொதித்தான் அலாவுதீன்'

கைதான மன்னன்
பீம்சிங்கும் தப்பினான்!

அடங்காத கோபத்தோடு
ஆணையிட்டான் சுல்தான்!

"சித்தூர் கோட்டை
சிதறுண்டு போகட்டும்
எதிரிகள் தலை எதுவும்
கழுத்தில் இருக்கக்கூடாது!"

கடும் போர்! கொடும் போர்!
கோட்டைக்குள் புகுந்தான்
அலாவுதீன்!

அவன் அங்கு கண்டது
தித்திக்கும் அழகியையல்ல!
எத்திக்கும் பரவும்
தீயை!

அந்தப் புரத்தில்
தீமூட்டிக் கொண்டு
சுந்தர அழகி
நீறாகிப் போனாள்!

எந்த மேனியை
சுல்தான் தீண்ட வந்தானோ
அந்த மேனியை
தீ தின்று முடித்தது

"ஐயோ!பத்மினி!"
அலாவுதீன்
தன் வாழ்க்கையில்
முதல் முறையாக
உடைந்தழுதான்!

"போரிலே வென்றேன்
பெண்ணே உன்னிடத்தில்
தோற்றுப் போனேன்!"
மார்பில் அடித்து புலம்பினான்.

நான் என்ன
வீரன்?
நான் என்ன
விவேகன்?

கண்ட இடமெங்கும்
மனதை மேயவிட்டு
கட்டறுந்த மாடாய்
அலையவிட்டு
தொட்டழிக்க நினைத்தேன்
கட்டாய காதல் கொண்டு!

மந்திரத்தால் மாங்காய்
விழாது!
கட்டாயத்தால்
காதல்வராது!

அலாவுதீன்
கைப்பற்றிய கோட்டையை
கைவிட்டு சென்றான்!
'அவள் நினைவாக
இதனை விட்டுச் செல்கிறேன்!'
கண்ணீரோடு
விலகினான்.

"சென்ற இடத்தில் செலவிடா
—தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு!"
அதிகாரம் 43-குறள்-422

துருவது ராஜீகன்

# இலக்கிய நயம்

தான் கேட்டேன்!" என்றாராம்.

●●

*** சிந்தியா! துன்பம் வரும்போது சிரிப்பதற்கு முடியுமா?**

திருமதி வதனா சந்திரசேகர், சிலாபம்.

தாம் சிரிக்க முடிகிறதோ இல்லையோ, சிலரால் பிறரைச் சிரிக்க வைக்க முடியும்.

தமிழகத்தின் நகைச்சுவை நடிகர் அமரர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சென்ற கார் புளியமரம் ஒன்றில் மோதிவிட்டது. கார் அப்பளமாக நொறுங்கிவிட்டது. அதிஷ்ட வசமாக எவருக்கும் உயிர்ச் சேதம் இல்லை.

தன்னோடு வந்தவர்களில் ஒருவரை அருகிலுள்ள நகருக்கு அனுப்பி 'டாக்ஸி' பிடித்து வரச்சொல்லிவிட்டு, வெற்றிலைப் பெட்டியைத் திறந்து வெற்றிலை சீவல் போட்டுக் கொண்டிருந்தார் கலைவாணர்.

அந்த வழியால் சென்றவர்கள் விபத்தைப் பார்க்கிறார்கள். கலைவாணர் அமர்ந்திருப்பது தெரிந்ததும் ஓடி வருகிறார்கள்.

"ஐயையோ, அண்ணே! என்னண்ணே ஆச்சு?" என்று உதறலோடு கேட்கிறார்கள்.

என்.எஸ்.கிருஷ்ணன் எவ்வித பதட்டமும் இல்லாமல், வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக்கொண்டே, "அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க! இப்படியே வந்துக்கிட்டே இருந்தோம்... ரொம்ப களைப்பாக இருந்தது... அதுதான்காரை அந்த புளிய மரத்திலே சாத்தி வச்சுட்டு இப்படி உட்காந்து வெத்திலை போட்டுக்கிட்டிருக்கோம்!" என்றார்.

●●

*** சிறந்த கதையம்சம் உள்ள படங்கள் வெற்றி பெற்றும் கூட, கவர்ச்சி இன்னமும் தலைகாட்டுகிறதே?**

எம். உஷ்மான், புத்தளம்.

எல்லாம் ஒரு வலைதான்! கதையம்சம் உள்ள படங்களில் கூட ஏதாவது ஒரு வகையில் கவர்ச்சி இருக்கத்தான் செய்கிறது!

●●

*** நடு நிலை என்றால் என்ன? முரசு நடுநிலை பத்திரிகையா?**

கே. சொர்ணராஜ், மட்டக்களப்பு.

'பாம்புக்கு வால் மீனுக்குத் தலை' என்பதுதான் நடுநிலை! சரியான பக்கம் எதுவென்று கண்டு அதனை ஆதரிப்பதுதான் நேர்மையான நிலை! நடுநிலை என்ற ஒன்று எப்போதும் இருக்காது என்றார் லெனின். அது மெத்தச் சரி.

●●

*** யுத்தத்தை நடத்துவதில் அரசு இப்படி விடாப்பிடியாக நிற்கிறதே-ஏன்?**

எஸ்.கபூர், கேகாலை.

நாற்காலி கவிழாமல் இருக்க வேறு பிடி இல்லாததால்!

●●

*** ஆழம் தெரியாமல் காலைவிடக்கூடாது என்பது எந்தெந்தக் காரியங்களுக்குப் பொருந்தும்?**

ஆர். தட்சணாமூர்த்தி, மஸ்கெலியா.

எல்லாவற்றுக்கும் பொருந்தும்.

ஒருத்தர் ஆழமான கிணற்றுக்கு அருகில் நின்று "பதினெட்டு, பதினெட்டு, பதினெட்டு", என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டு நின்றார்.

அந்த வழியாகப் போன ஒருவர் அதைக் கவனித்தார். அவரிடம் நேராகப் போனார்:

"என்ன இது, எதை எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

உடனே அவர் இவரைப் பார்த்தார். பதில் எதுவும் சொல்லவில்லை. இவரையும் பிடித்து கிணற்றுக்குள் தள்ளிவிட்டார்.

தள்ளிவிட்ட பின்னர் "பத்தொன்பது, பத்தொன்பது" என்று எண்ண ஆரம்பித்துவிட்டார்!

●●

*** செய்தித் தணிக்கையால் அரசு கண்ட பலன் என்ன சிந்தியா?**

எம்.பிரேமா, மட்டக்களப்பு.

காணாத பலனையெல்லாம் கண்டுவிட்ட பலனாகக் கூறும் பலன்!

●●

*** தீபாவளி படங்களில் எது சூப்பர்?**

சி.எஸ்.கிரிதரன், கொழும்பு-09.

இன்னமும் பார்க்கவேயில்லையே; சூப்பர் எப்படித் தெரியும்?

●●

*** சிந்தியா! நீங்கள் இரசித்த குட்டிக்கதை ஒன்று கூறுங்களேன்?**

செல்வி நித்யா இராமநாதன், அப்புத்தளை.

ஓர் ஆள் கையில் வாழைப்பழத்தோடு வேகமாக ஓடிக்கொண்டிருந்தார். பின்னால் ஒரு குரங்கு துரத்திக்கொண்டு ஓடியது.

அதுக்குப் பின்னாடி ஒருவர் அந்த ஆளையும், குரங்கையும் துரத்திக்கொண்டு வெறுங்கையோடு வேகமாக ஓடிக்கொண்டிருந்தார்.

வழியில் ஒருவர் இந்த ஆளை நிறுத்திக் கேட்டார்,

"அந்த ஆள் கையில் வாழைப்பழம் வைத்திருக்கிறார். குரங்கைப் பார்த்துவிட்டு ஓடுகிறார் அது நியாயம்!

குரங்கு அந்த வாழைப்பழத்தைப் பார்த்து விட்டது. அதனால் அவர் பின்னால் ஓடுகிறது! அதுவும் நியாயம்!

நீ எந்த சம்பந்தமும் இல்லாமல் அவர்கள் பின்னாடி ஓடுகிறாயே. இது என்ன நியாயம்?" என்றார்.

"நான் ஓடுவதுதான் நியாயம்!" என்றார் அந்த ஆள்.

"எப்படி?" என்றார் அவர்.

"அந்த ஆள் என் கடையில்தான் வாழைப்பழம் வாங்கினான். காசு கொடுக்காமல் ஓடுறான்!" என்று சொல்லிவிட்டு துரத்த ஆரம்பித்தார்.

●●

## சிந்தியா பதில்கள்

*** யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் உலகத் தலைவர்களுக்கு மனுப்போட்டுள்ளார்களாமே?**

பி.இராசமானிக்கம், பட்டிருப்பு.

தமக்குத் தொடர்பில்லை என்று ஈ.பி.டி.பி., கூட்டணி ஆகியவை மறுத்துள்ளன. ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், ரெலோ ஆகியன மறுக்கவில்லை. ஜனநாயகக் கோட்பாடுகளை மதிக்குமாறு புலிகளிடம் உலகத் தலைவர்கள் கூறவேண்டுமாம். அரசு மட்டும் படு ஜனநாயகமாக செயற்படுகிறது என்று சர்வதேச சமூகத்திற்கு சான்றிதழ் கொடுத்து அரசின் சரிந்து வரும் இமேஜைக் காப்பாற்றும் முயற்சி இது!



ராஜஸ்ரீ

வவுனியாவில் புளொட்டும், மட்டக்களப்பில் ராசிக்குழு என்ற பெயரில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.வும் ஜனநாயகத்தை உயிராக மதிப்பது (?!) அறிந்ததே!

போராடாமல் இருந்துகொண்டு இயக்க நிதி என்று கப்பம் வாங்குதல், மக்களை வெளியேற்றுதல், சித்திரவதை முகாம் நடத்துதல் போன்ற 'ஜனநாயகக் கோட்பாடு'களை புலிகளும் மதிக்க வேண்டும் என்கிறார்களோ? யார் யார் எதைக் கூறுவது என்று ஒரு விவஸ்தை வேண்டாமா?!

●●

*** "இந்தநாட்டுக்குச் சொந்தமில்லாத சிறுபான்மையினர்" என்று ஜனாதிபதி கூறிய பின்னரும் தமிழ்க் கட்சிகள் எந்த முகத்தோடு அரசை ஆதரிக்கின்றன?**

ஆ.லோகநாதன், கொழும்பு-11.

போலி முகத்தோடு!

●●

*** வரவர நன்றி உணர்ச்சியே இல்லாமல் போகிறதே?**

சி.தவக்குமார், வவுனியா.

எல்லாம் நேரம்தான்.

ஒருத்தர் வந்தார்: "ஐயா! ஆற்று வெள்ளத்தில் நான் தத்தளித்துக் கொண்டு இருந்த போது என்னைக் காப்பாற்றியது நீங்கள் தானே?" என்று கேட்டார்.

அதற்கு அடுத்தவர் சொன்னார்:

"ஆமாம். அதனால் என்னப்பா? அது என் கடமை. இதுக்குப் போய் நன்றியெல்லாம் அவசியமில்லை!"

அதற்கு வந்தவர்: "அதற்கில்லை ஐயா! சட்டைப் பையிலே பத்து ரூபா வைத்திருந்தேன். அந்தக் காணவில்லை. அதற்காகத்

*** சிறிசேனாகூரே "தேர்தலில் நிற்கப் போகிறேன்" என்கிறாரே?**

பா.லட்சுமணன், கண்டி.

ஐ.தே.கட்சியை உடைக்கும் ஒப்பந்தத்



'தாயின் மணிக்கொடி' படத்தில் அர்ஜுன்-நிவேதிதா

தோடுதான் நாடு திரும்ப அவருக்கு அனுமதி கிடைத்தது என்கிறார்கள். பாஸ்கரலிங்கம் போன்ற அதிகாரிகள் நாடுதிரும்ப முடியாத நிலையில் கூரேக்கு மட்டும் எப்படி பச்சைக் கொடி காட்டப்பட்டது?!

ஸ்போர்ட்ஸ்

# தாண்ட விரும்பவில்லை

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மார்க் டெய்லர் ஆட்டமிழக்காமல் 334 ஓட்டங்களைப் பெற்றார். இன்னும் 42 ஓட்டங்களை எடுத்திருந்தால் மேற்கிந்தியத்தீவின் பிரையன் லாரா ஏற்படுத்தியிருக்கும் 375 ஓட்டங்களைத் தாண்டி உலகசாதனை புரிந்திருக்கலாம்.



எனினும் அணியின் நலனுக்காகவும், அவுஸ்திரேலியாவின் கிரிக்கெட் கடவுள் என வர்ணிக்கப்படும் சேர் டொனால்ட் பிரட்மனின் சாதனையை முறியடிக்காமலும் இருப்பதற்காக, டெய்லர் 334 ஓட்டங்களுடன் நிறுத்திக்கொண்டார். பிரட்மன் டெஸ்ட் போட்டியில் பெற்ற அதிக ஓட்டமும் 334 தான். டெய்லர் தனது மானசீக குருவான பிரட்மனின் சாதனைக்கப்பால் போக விரும்பவில்லை.

முதல் இன்னிங்சில் ஆட்டமிழக்காமல் 334 எடுத்த டெய்லர், இரண்டாவது இன்னிங்ஸில் 92 ஓட்டங்களை எடுத்து அவுட்டானார். இவர் இரண்டாவது இன்னிங்ஸில் இன்னும் 31 ஓட்டங்களைச் சேர்த்திருந்தால் உலக சாதனைப் புத்தகத்தில் இவரது பெயர் இடம்பெற்றிருக்கும்.

ஒரே டெஸ்டில் ஒரு முச்சதமும், ஒரு சதமும் எடுத்து உலக சாதனை படைத்திருக்கிறார் இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் கிரஹாம் கூச். இவர் 1990ல் லோட்ஸ் மைதானத்தில் இந்தியாவுக்கெதிராக முதல் இன்னிங்ஸில் 333 ஓட்டங்களும், இரண்டாவது இன்னிங்சில் 123 ஓட்டங்களும் எடுத்து, ஒரு டெஸ்டில் ஆகக்கூடிய (456) ஓட்டங்களைக் குவித்து சாதனை புரிந்தார்.

டெஸ்ட் போட்டிகளில் கடைசியாக மார்க் டெய்லருடன் சேர்த்து முச்சதம் அடித்தவர்கள் 15 பேர். அவர்களின் விபரம் வருமாறு:

| வீரர் | ஓட்டங்கள் | எதிரணி | வருடம் |
|---|---|---|---|
| 1. பிரையன் லாரா (மே.இ.தீவுகள்) | 375* | இங்கிலாந்து | 1994 |
| 2. சேர். கேரி பீல்ட் சோபர்ஸ் (மே.இ.தீவுகள்) | 365* | பாகிஸ்தான் | 1958 |
| 3. லெனார்ட் ஹட்டன் (இங்கிலாந்து) | 364 | அவுஸ்திரேலியா | 1938 |
| 4. சனத் ஜயசூரிய (இலங்கை) | 340 | இந்தியா | 1997 |
| 5. ஹனீப் முகமட் (பாகிஸ்தான்) | 337 | மே.இ.தீவுகள் | 1958 |
| 6. வொலி ஹமண்ட் (இங்கிலாந்து) | 336* | நியூஸிலாந்து | 1933 |
| 7. மார்க் டெய்லர் (அவுஸ்திரேலியா) | 334* | பாகிஸ்தான் | 1998 |
| 8. சேர். டொனால்ட் பிரட்மன் (அவுஸ்திரேலியா) | 334 | இங்கிலாந்து | 1930 |
| 9. கிரஹாம் கூச் (இங்கிலாந்து) | 333 | இந்தியா | 1990 |
| 10. அண்டி சாந்தம் (இங்கிலாந்து) | 325 | மே.இ.தீவுகள் | 1930 |
| 11. பொபி சிம்ஸன் (அவுஸ்திரேலியா) | 311 | இங்கிலாந்து | 1964 |
| 12. ஜோன் எட்றிச் (இங்கிலாந்து) | 310* | நியூஸிலாந்து | 1965 |
| 13. பொப் கௌபர் (அவுஸ்திரேலியா) | 307 | இங்கிலாந்து | 1966 |
| 14. சேர் டொனால்ட் பிரட்மன் (அவுஸ்திரேலியா) | 304 | இங்கிலாந்து | 1934 |
| 15. லோரன்ஸ் ரோவ் (மே.இ.தீவுகள்) | 302 | இங்கிலாந்து | 1974 |

* ஆட்டமிழக்காதது.

# எட்டாவது ஆசிய கோப்பை

வில்ஸ் மினி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் பங்களாதேஷின் டாக்கா நகரில் தான் எட்டாவது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்த எட்டாவது ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் அடுத்த வருடம் மார்ச் மாதம் 20ம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 3ம் திகதி வரை நடைபெறவுள்ளன.

பங்களாதேஷின் டாக்கா நகரில் உள்ள பங்கபந்து தேசிய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகளில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய 4 நாடுகள் கலந்து கொள்கின்றன.

இத்தகவலை பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் செயலாளர் சையட் அஷ்ரப் ஹக் டாக்காவில் கூறியுள்ளார்.

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 32

ஆண்டவரின் அருளால் ஆளப்பட்டவரான சாமுவேல் இஸ்ரேலிய மக்களைச் செம்மையாக வழிநடத்தினார். அவருடைய புதல்வர்களான யோவேல் மற்றும் அபியா ஆகியோரை நீதித்தலைவர்களாக இருந்து மக்களை வழிநடத்தும்படி சாமுவேல் ஏற்பாடு செய்தார். ஆனால் அவர்கள் இருவரும் ஆண்டவனுக்கு விரோதமான செயல்களிலீடுபட்டமையினால், மக்கள் அவ்விருவர்மீதும் வெறுப்புற்றனர்.

## சவுலின் ஆட்சி

தங்களுக்கு ஓர் அரசர் பொறுப்பாக விருந்து வழிநடத்தினால் சிறப்பாக இருக்கும் என்று மக்கள் கருதலாயினர். இஸ்ரேலிய சமுகத்தைச் சேர்ந்த பெரியவர்கள் ஒன்று சேர்ந்து சாமுவேலிடம் சென்று தமது கருத்தை வெளியிட்டனர். சாமுவேல் அப்போது வயது முதிர்ந்த நிலையிலிருந்தார். அவருடைய புதல்வர்களும் நீதிநியாயங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்காமலிருப்பதும் அவருக்கு மனவேதனையை அளித்தது.



இருப்பினும் ஆண்டவரின் ஆணைப்படி கடமைகளைப் புரியும் நீதித்தலைவர்களைத் தவிர்த்து மன்னராட்சியை இஸ்ரயேல் மக்கள் விரும்புவது சாமுவேலுக்கு அவ்வளவு தூரம் விருப்பமில்லை. கர்த்தரிடம் மக்கள் விருப்பத்தைக் கூறினார். ஆண்டவர் சாமுவேலிடம்,

"சாமுவேல்! எமது மக்களே எம்மைப் புறக்கணிக்கிறார்கள். அவர்களை எகிப்து நாட்டின் அடிமைத் தளையை அறுத்தெறிந்து மீட்டெடுத்து, அவர்களுக்கான ஒரு நாட்டை அளித்தோம். நல்லபடி வாழ்வதற்கான வழிமுறைகளையும் வகுத்துக்கொடுத்தோம். அவர்கள் நாம் வகுத்துக் கொடுத்த கட்டளைப்படி நடக்க மறுத்து, அதனால் பெரும் தொல்லைகளையும் அனுபவித்தார்கள். அவர்களை மன்னித்து மீண்டும் மீண்டும் நல்வழிப்படுத்தினோம். வழி காட்டிகளையும் நியமித்தோம். அவர்கள் தொடர்ந்தும் வழி தவறி நடக்கிறார்கள். இப்பொழுது தங்களை வழி நடத்து

**இராஜகுமாரன்**

வதற்காக ஓர் அரசன் வேண்டும் என்று கோருகிறார்கள். மன்னராட்சியில் ஏற்படப் போகும் நன்மை தீமைகளைப் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறும். மக்கள் விடாப்பிடியாகத்தான் இருக்கப் போகிறார்கள். ஆகவே அவர்களுக்காக ஓர் அரசரை நியமிக்க ஏற்பாடு செய்வாயாக!" என்று கூறியருளினார்.

கர்த்தர்கூறிய கருத்துக்களை சாமுவேல் மக்களிடம் எடுத்துரைத்தார். மக்கள் சாமுவேலின் கருத்தை ஏற்றுக் கொள்ளாமல், தங்களை ஆட்சி புரிய அரசரே வேண்டுமென்றனர். அவர்களை சமாதானப்படுத்தி, பொறுமையாக இருக்கும்படி சாமுவேல் கூறினார்.

### சவுலும் சாமுவேலும்

இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்தில் யாக்கோபின் பாத்திரம் மிக முக்கியமான தொன்றாகும். அவருடைய பதினொராவது மகனான யோசேப்பு எகிப்து நாட்டில் மிகவும் செல்வாக்குள்ள தேசாதிபதியாக விளங்கினார். இவருடைய காலத்தில்தான் இஸ்ரயேலியர்கள் எகிப்து நாட்டுக்கு வந்து குடியேறிப் பல்கிப் பெருகினர். யாக்கோபின் பன்னிரண்டாவது மகனும் யோசேப்பின் இளைய தம்பியுமான பென்யமின் வழிவந்தோர் இஸ்ரயேல் சமுதாயத்தில் மிகச் சிறுபான்மையினராக இருந்தனர். இந்த மரபில் கீசு என்றொருவர் இருந்தார். இவருடைய மகன் சவுல் நல்ல அழகானவன். இஸ்ரேலிய சமுதாயத்தில் ஏனையோரை விட உயரமானவனாகவும் காணப்பட்டான்.

கீசுவுக்குச் சொந்தமான சில கழுதைகள் காணாமற்போய்விட்டன. அவற்றைக் கண்டு பிடித்துக்கொண்டு வருமாறு கீசு தன் மகனை ஒரு பணியாளனுடன் அனுப்பிவைத்தார். பல இடங்களில் தேடி அலைந்தும் இவர்களால் கழுதைகளைக் காணமுடியவில்லை. இருவரும் சூபு நாட்டுக்கு வந்தபோது, சவுல், தனது தந்தையார், காணாமற்போன கழுதைகளைப் பற்றிய கவலையை விட்டுவிட்டு தன்னைத் தேடித்தவித்துக் கொண்டிருப்பார் என்று கருதினான். தன் தந்தையாரிடம் திரும்பிச் சென்று விடலாம் என்று கருதினான்.

சூபு நாட்டில் ஆண்டவரின் அருள் பெற்ற அடியார் ஒருவர் இருப்பதாக அறிந்து அவரிடம் சவுல் தன் பணியாளருடன் சென்றான். ஆண்டவரின் அடியார் என்று கூறப்பட்டவர் வேறு யாருமல்ல, அப்போது இஸ்ரயேலரின் நீதித்தலைவராகவிருந்த சாமுவேல்தான். தன்னிடம் சவுல் வரப்போகிறான் என்பதை முன்னதாகவே ஆண்டவர் அவருக்கு அறிவித்திருந்தார். ஆகவே சவுலை வரவேற்று விருந்தளித்து உபசரிப்பதற்கான ஏற்பாடுகளை சாமுவேல் செய்திருந்தார்.

சவுலும் பணியாளும் வந்ததும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் வரவேற்றார். விருந்துண்டு ஓய்வெடுத்தபின் சாமுவேல் சவுலை அழைத்து, ஆண்டவரின் வார்த்தைகளைக் கூறினார். தைலத்தை சவுலின் தலையில் தடவி திருப்பொழிவு செய்தார். அவர்கள் தேடிவந்த கழுதைகள் கிடைத்துவிட்டதாகவும், சவுலின் தந்தையார் மகனைத் தேடிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். திரும்பிச் செல்லும், வழியில் பென்யமின் நாட்டு எல்லையில் செல்கு என்ற இடத்தில் உள்ள ராகேலின் கல்லறையைத் தரிசித்து விட்டுச் சொல்லுமாறும் சவுலிடம் சொன்னார். போகும் வழியில் சவுலைச் சந்திக்கப் போகும் பலரைப் பற்றியும் கூடக் கூறினார். சவுல்மீது கடவுளின் ஆவி பூரணமாக இறங்கி அவரை ஆட்கொண்டது.

சவுலைத் தொடர்ந்து சாமுவேலும் மிஸ்பா வந்து சேர்ந்தார். அங்கு இஸ்ரயேல் மக்கள் குலத்தலைவர்களை அழைத்தார். அனைவரும் வந்து கூடியதும், ஆண்டவருடைய வார்த்தைகளைக் கூறினார். மக்கள் விரும்பியதுபோல் அவர்களுக்கான ஓர் அரசரை ஆண்டவரே தேர்ந்தெடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். சவுலையும் அழைத்து அம்மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். மக்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சவுல் ஆட்சிபுரியத் தொடங்கி இரண்டாம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், பெலிஸ்தியரின் தொல்லைகளால் இஸ்ரயேல் மக்கள் பெரிதும் துன்பப்பட்டனர். சவுல் படைதிரட்டிச் சென்று பெலிஸ்தியருடன் போரிட்டார். ஆனால் முழுமையான வெற்றி கிடைக்கவில்லை. இக்கால கட்டத்தில் சாமுவேல் சவுலுக்குக் கூறியிருந்த அறிவுரைகளையும் பொருட்படுத்தாமல் தான்தோன்றித்தனமாகச் சில காரியங்களை செய்யலானார். இதனால் சாமுவேல் கோபமுற்றார். சவுலின் ஆட்சி நிலைத்திருக்கப் போவதில்லை என்று சாபமிட்டார். மற்றுமோர் அரசரை நியமிக்க ஆண்டவர் சித்தங் கொண்டுவிட்டார் என்றும் சாமுவேல் கூறினார்.

### யோனத்தான்

சவுலுடன் அவர் மகன் யோனத்தானும் மற்றும் அறுநூறு வீரர்கள் மட்டுமே எஞ்சியிருந்தனர். பெலிஸ்தியரின் ஆதிக்கத்துக்குள் இஸ்ரயேலர் இருந்தமையினால் அவர்களை எந்தவிதமான ஆயுதங்களை வைத்திருக்கவும் பெலிஸ்தியர் அனுமதிக்கவில்லை. தங்களுடைய அன்றாடப் பணிகளுக்குத் தேவையான கத்தி, கோடரி, அரிவாள், மண்வெட்டி, கடப்பாரை போன்றவற்றைச் செய்யவும் பெலிஸ்தியக் கொல்லர்களையே இஸ்ரயேல் மக்கள் நாடவேண்டியதாயிற்று. இவற்றைச் செய்து கொடுக்கவோ பழுது பார்த்து தீட்டிக் கொடுக்கவோ பெருந்தொகைக்கான நாணயங்களைக் கூலியாக அளித்து வந்தனர்.

பெலிஸ்தியரிடம் பெருந்தொகையான படைவீரர்கள் இருந்தனர். தேர்ப்படைகளும் குவிக்கப்பட்டிருந்தன. சவுலிடம் மிகவும் குறைந்த வீரர்கள் மட்டுமே இருந்தனர். அவர்களிடம் வாள், ஈட்டிபோன்ற ஆயுதங்களும் இருக்கவில்லை.

சவுலின் மகன் யோனத்தான் புத்திக் கூர்மையும் உறுதியும் மிக்க இளம்வீரன். படைபலத்தைக்கொண்டு பெலிஸ்தியரை ஒரு போதும் வெல்ல முடியாது என்று அவன் கருதினான். கர்த்தரின் கிருபையும் அவன்மீது பொலிந்தது. தன்னுடன் ஓர் உதவியாளனை மட்டும் அழைத்துக்கொண்டு நள்ளிரவு நேரத்தில் பெலிஸ்திய எல்லைக் காவல் படையினர் இருந்த இடத்தை அணுகினான். பதுங்கிச் சென்றே பல பெலிஸ்தியக் காவல் படைவீரர்களை வெட்டி வீழ்த்தினான். யோனத்தானுடன் சென்ற உதவியாளனும் உடனிருந்து, நடத்திய போரில் வீழ்ந்த பெலிஸ்திய வீரர்களின் சடலங்களை, மங்கிய ஒளியில் கண்ட ஏனைய பெலிஸ்திய வீரர்கள் பல திக்குகளிலும் சிதறி ஓடினர்.

யோனத்தானும் உதவியாளனும் நடத்திய வீரச் செயல்களைப் பற்றி சவுலும் ஏனையோரும் அடுத்த நாள் பொழுது புலர்ந்த பின்னரே அறிந்தனர். பெலிஸ்திய வீரர்கள் நிலை குலைந்து ஓடிவிட்டதனைக் கண்ட இஸ்ரயேல் படைகள் தங்கள் மறைவிடங்களிலிருந்து வெளிவந்து ஒன்று சேர்ந்தனர்.

### சவுலின் வெற்றி

இஸ்ரேலியர்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தியிருந்த மோவாபியர், அம்மோனியர், ஏதோமியர், சோபா மன்னர்கள் மற்றும் பெலிஸ்தியர் ஆகியோர்மீது சவுல் உக்கிரமாகப் போர் தொடுத்து வெற்றி கண்டார். இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான போர் வீரர்களுடன் சவுல் அமலேக்கியர்மீது போர் தொடுத்தார். அமலேக்கிய அரசனான ஆகாகை மட்டும் உயிருடன் கைது செய்துவிட்டு மக்களனைவரையும் கொன்றுவிட்டார். கால் நடைகளில் சிறந்தவற்றை மட்டும் தேர்ந்தெடுத்துக்கொண்டு,வலது குறைந்தவற்றைக் கொன்று குவிக்க ஏற்பாடு செய்தான்.

அமலேக்கியர் மீதான போரில் சவுல் நடந்து கொண்ட விதம் ஆண்டவருக்குப் பிடிக்கவில்லை. சாமுவேலிடம் ஆண்டவர், சவுலை அரசனாக ஆக்கியமைக்காக வருந்தினார். ஆண்டவர் கூறியவற்றையெல்லாம் சவுலிடம் விவரமாக சாமுவேல் கூறினார்:

"நீர் சிறுவனாக இருக்கும்போதே இஸ்ரயேல் மக்களை வழி நடத்த ஆண்டவர் உம்மைத் தேர்ந்தெடுத்தார். ஆனால் ஆண்டவரின் திருவுள்ளத்துக்கு ஒவ்வாதனவற்றையெல்லாம் செய்து அவருடைய கோபத்துக்கு ஆளாகி விட்டாய். ஆகவே உனக்குப் பதிலாக பிறிதோர் அரசரை ஆண்டவர் திருநிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றார். உமக்கு நெருக்கமான ஒருவரை உமது இடத்திற்கு ஆண்டவர் தேர்ந்தெடுத்து விட்டார்!"

இவ்வாறு கர்த்தரின் கருத்தை சவுலிடம் கூறிவிட்டு சாமுவேல் இராமா என்ற இடத்துக்குச் செல்லப் புறப்பட்டார். இறைவன் சாமுவேலிடம், "சவுலுக்குப் பதிலாக இஸ்ரயேல் மக்களை வழி நடத்துவதற்கு ஏற்ற ஓர் அரசனைத் தேர்ந்தெடுக்க பெத்லகேமுக்குச் செல்வாயாக!" என்று கூறினார். வயது முதிர்ந்த நிலையிலும், கர்த்தரின் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு சாமுவேல் பெத்லகேமுக்குப் பயணமானார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 30 விடை** — எலிமலேக்கு

**பரிசு பெறுவோர்:**

1. **எம்.ஏ. துசாந்தன்,** பனில்கந்த, உல்லிந்துவாவ, தெனியாய.
2. **ஆ. தங்கரத்தினம்,** பொன்னாவளை, களபூமி, காரைநகர்.
3. **ராமன் கல்யாணி,** எல்டோறாடோ டிவிஷன், லுணுகலை.
4. **எஸ். நிரஞ்சலா,** இல.2 கிவுல, மாத்தளை.
5. **எம். ஸ்ரீ ரஞ்சனி,** ஆண்டிமுனை த.மா. வித்தியாலயம், உடப்பு, சிலாபம்.

**திருமறை 32** வினா:- **சவுலின் மகன் யார்?**

ஒக்.31க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 32—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# ஹலோ? ரிங் ரிங்

வானொலிகளை தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளும் நிகழ்ச்சிகள் ஆக்கிர மித்து வருகின்றன. அதனால் காதிலை பூ சந்தசாமியாருக்கும் அப்படி ஒரு நிகழ்ச்சி நடத்த ஆசை வந்துவிட்டது.

அறிவிப்பாளர்: ஹலோ
நேயர் : ஹலோ
அ: எங்கிருந்து பேசுகிறீர்கள்?
நே: கொழும்பில் இருந்து
அ: கொழும்பிலிருந்து பேசுகிறீர்கள்.



நே: ஆம்!
அ: உங்கள் பெயர் என்ன?
நே: ராஜசேகரன்
அ: ராஜசேகரன்
நே: ஆம்.
அ: உங்கள் குடும்பத்தைப் பற்றிக் கூறுங்கள்?
நே: ஒரு அம்மா, அப்பா, தம்பி, தங்கச்சி.
அ: ஒரு அம்மா, அப்பா, தம்பி, தங்கச்சி,
நே: ஆம்.
அ: என்ன பெயர் கூறினீர்கள்.
நே: ராஜசேகர்
அ: ராஜசேகர் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?
நே: நான் வேலை இல்லாமல் வீட்டிலிருக்கிறேன்.
அ: வேலை இல்லாமல் வீட்டில் இருக்கிறீர்கள். உங்கள் பொழுதுபோக்கு என்ன?
நே: ஆடுவது, பாடுவது, காலையில் எழுந்து ஓடுவது.
அ: ஆடுவது, பாடுவது, ஓடுவது, மிக நல்ல பொழுதுபோக்குகள், பாடமுடியுமா?
நே: முடியும்.
அ: முடியும். அப்போது பாடுங்கள் பார்ப்போம்.
நே: (சகிக்கமுடியாத குரலில் பாடிக் கொல்லுகிறார்)
அ: (குறுக்கிட முயலுகிறார்) மிக நன்றாக இருக்கிறது. உங்களுக்கு பிடித்த...
நே: (அறிவிப்பாளர் இடையே பேசுவது தெரியாமல் பாடிக்கொண்டே இருக்கிறார்)
அ: (மிகச் சத்தமாக) ராஜசேகர் உண்மையாகவே ஆம் உண்மையாகவே நன்றாக ஆம் மிக நன்றாகப் பாடுகிறீர்கள். உங்களுக்கு... ஹலோ.. ஹலோ.. கேட்கவில்லைப் போலிருக்கிறது... ஹலோ ஹலோ உங்களுக்கு பிடித்த பாடல் என்ன?
நே: கண்டுபிடி அவளை கண்டுபிடி
அ: முயற்சிக்கிறோம். தகவல் தர வேண்டிய முகவரியை தனியாகக் கூறுங்கள், யார் யாருக்காக இந்தப் பாடலை கேட்கிறீர்கள்?
நே: என் அப்பா, அம்மா, தம்பி, நண்பர்களான சுரேஸ், கணேஸ்... (நீண்ட பட்டியலை வாசிக்கிறார்)
அ: (சாதுரியமாக குறுக்கிட்டு) ஹலோ இந்தப்பாடல் உங்களுக்கு ஏன் பிடித்திருக்கிறது.
நே: (பட்டியல் வாசிப்பதை நிறுத்திவிட்டு) அதிலுள்ள வரிகள் பிடித்திருக்கிறது.
அ: வரிகள் பிடிக்கும் என்ன, சரி, இதோ உங்களுக்காக அந்தப்பாடல், கேட்டு மகிழுங்கள்.
(பாடல் ஒலிக்கிறது.)

### இனி ஒரு இசகு பிசகான தொலைபேசி உரையாடல்.

அ: ஹலோ
நே; ஹலோ.
அ: எங்கிருந்து பேசுகிறீர்கள்?
நே: வீட்டிலிருந்து, சொந்த ரெலிபோனில்.
அ: ரோட்டிலிருந்து இரவல் ரெலிபோனில் பேசமுடியுமா?
நே: முடியும். ரோட்டில் நின்று நண்பனின் செல் ஃபோனை இரவல் வாங்கி பேச முடியும். அல்லது பே ஃபோனில் பேசலாம்.
அ: ஆம், ஆம் முடியும். என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?
நே: உங்களைக் காதலிக்கலாமா? அல்லது கல்லெறியலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.
அ: ஜோக்காகப் பேசுகிறீர்கள். உங்களுக்கு பிடித்த நடிகர் யார்?
நே: ஜே.ஆர். ஜெயவர்த்தனா.
அ: (ஜோக் புரியாமல்) பிடித்த நடிகை?
நே: சொன்னால் உங்கள் வேலையே போய்விடும். ஹி.ஹி.ஹி.
(சட்டென்று தொடர்பை கட் பண்ணி)
அ: ஏதோ காரணத்தால் அந்த நேயரின் தொடர்பு துண்டாடப்பட்டுவிட்டது. அவருக்காக ஒருபாடலை ஒலிபரப்புகிறோம்.

# பொதியும் புளுகும்

('பாலிருக்கும் பழமிருக்கும் பசியிருக்காது' என்ற பாடல் மெட்டில் பாடிப் பயன் பெறுக)

பொதியிருக்கும், புளுகிருக்கும் தீர்விருக்காது
பேச்சினிலே இனிப்பு வரும் மெய்யிருக்காது.



கைதிருக்கும், பால் இருக்கும்
கனிவிருக்காது.
போர் இருக்கும், பொய் இருக்கும்
ஸ்கோர் இருக்காது.

பொதியிருக்கும், புளுகிருக்கும்
தீர்விருக்காது!
பேச்சினிலே இனிப்பிருக்கும்
மெய்யிருக்காது!

கட்டவிழ்ந்த பொதி அவிழ்ந்து
பொய்யினைத் தேடும்—பாதி
மூடிக்கொண்டு மறுபடியும்
பொய்யினைப் பேசும்!

பொதியிருக்கும், புளுகிருக்கும்
தீர்விருக்காது
பேச்சினிலே இனிப்பிருக்கும்
மெய்யிருக்காது!

# தேனீயும் தேநீரும்

கா.பூ.க: இந்திய மத்திய அரசுத் தலைவர்களுக்கு ஜெயலலிதா தேநீர் விருந்து கொடுத்துள்ளாரே? உங்கள் அபிப்பிராயம் என்ன கலைஞரே?

கலைஞர்: மத்திய அரசுமீது தேனீபோல கொட்டிக் கொட்டி காயம் விளைவித்தவர் இன்று தேநீர் விருந்து கொடுத்திருக்கிறார். தேனீ, தேநீர் என்று உச்சரிக்கும்போது எப்படி அவற்றுக்குள்ளேயே ஒத்த ஒலி எழுகிறதோ, அப்படித்தான் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் தேனீயானால் என்ன, தேநீர் கொடுத்தால் என்ன? இரண்டும் ஒத்த செயல்தான்.

# பேச்சாளர் பேரம்பலம்



அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்வதா? இல்லையா? என்பதை எமது பொதுச்சபை, மத்திய சபை, மற்றும் கீழ்ச்சபை, மேற்சபை அனைத்தும் கூடி ஆர்ராய்ந்து, ஆறுதலாக சிந்தித்து, சாணக்கியமாக யோசித்து, நிதானமாக பேசி முடிவு செய்ய உள்ளதால் அந்த முடிவை அறியும்வரை எம்மீது கோபப்படாமல் இருக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை நாம் கேட்டுக் கொள்கிறோம்.

**காதிலை பூ கந்தசாமி**



படிப்பகம்



ARUL JEWELLERS
அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# கல்யாணமாம் கல்யாணம்



→ மணமகன் ரோல்ஸ் ரொய்ஸ் மோட்டார் வண்டியிலும் மணமகள் ஹெலிக் கொப்டரிலும் வந்திறங்கினார்கள். தாய்லாந்தின் மிகப்பெரிய கலை அரங்கில் ஜாம் ஜாமென்று திருமணம் நடந்தேறியது. தாய்லாந்தில் பிரபலமான பணக்காரப் பிரமுகர்கள் விருந்தில் கலந்துகொண்டனர்.

இப்பிரசித்திபெற்ற- சாதனை படைத்த திருமணம் 1996 செப்டம்பர் மாதம் இடம் பெற்றது. மணமகன் பெயர் ஃபெற; மணமகள் புளொய். இவர்கள் இருவரும் 'வைரக்கண் தம்பதி'யினர் என்று கூறப்படுகிறது. இத்திருமணத்தை தாய்லாந்தின் பெரும் பணம் படைத்த விச்சோன் இரட்டார்ச்சா என்பவர் நடத்தி வைத்தார்.

← திருமண விழாச் செலவு ஆக 9 ஆயிரத்தி 933 பவுண். இலங்கை நாணயப்படி 9 இலட்சத்து 93 ஆயிரத்தி 300 ரூபா. கொடுக்கப்பட்ட வரதட்சணை 14 ஆயிரத்தி 190 பவுண். (14 இலட்சத்து 19 ஆயிரம்)

இத்தனைக்கும் மணம் முடித்துக் கொண்டவர்கள் படத்தில் காணப்படும் செல்லப் பூனைகள். இவற்றின் பெயர்தான் ஃபெற, புளொய். மணமக்கள் ரோஜா வர்ண சற்றின் உடைகளில் காணப்படுகின்றனர். என்ன மலைப்பாக இருக்கிறதா? அதுதான் இந்த திருமணம் உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பணம் மெத்தினால் அதை செலவு செய்ய இப்படியும் சில வழிகள்.

(உங்கள் பெருமூச்சு கேட்கிறது.)



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

# ஆஹா



↘ வாயைப் பிளந்தால் வங்காள விரிகுடாவே தெரிகிறதே. இதுதான் தீக்கோழி. உலகிலேயே மிகப்பெரியதும் மிக உறுதி வாய்ந்ததுமான பறவை தீக்கோழிதான். வட ஆபிரிக்காவில் காணப்படும் தீக்கோழிகளில் முழுமையாக வளர்ந்த ஆண் பறவை 2.75 மீட்டர் (9 அடி) உயரம் வரை வளரும். எடை 156.5 கிலோ (345 இறாத்தல்) வரை இருக்கும்.

பாலைவனங்களில் தேடுவாரற்றுக்கிடந்த தீக்கோழிகளுக்கு ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் திடீர் மவுசு ஏற்படத் தொடங்கியது. வெறுமனே உணவுக்காக வேட்டையாடப்பட்டு வந்தமையினால் மிக வேகமாக இவ்வினம் அழியத் தொடங்கியது. இவற்றின் மிக மென்மையான இறகுகள் ஆபிரிக்கப் பூர்வ குடி மக்களின் அணிகலன்களை அழகுபடுத்தின. இவற்றின் கடுமையான தோல்களுக்கும் உலகனைத்தும் கிராக்கி ஏற்படத் தொடங்கியதனால், இவை அழிந்து போய்விடாமல் காக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1900ம் ஆண்டில் தீக்கோழிகளை வளர்க்கும் பண்ணைகள் வட ஆபிரிக்க நாடுகளில் தோன்றின. பண்ணைகளில் 10 ஆண்டுகளில் 20,000 வளர்ப்புப் பறவைகள் இருந்தன. இன்று 50க்கு மேற்பட்ட நாடுகளில் தீக்கோழிப் பண்ணைகள் உள்ளன. இதன் இறைச்சி வத்தல் பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உலகம் பூராவும் இப்பொழுது 17 1/2 இலட்சம் தீக்கோழிகள் வளர்க்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

# சின்ன எமன்



↑ முரசு 278இல் தகவல் பெட்டியில் வெளியான தகவல்தான் இது. ஆனால் மிகத் தெளிவான துளோசப் தோற்றம் இது.

பார்வைக்கு சாவிக்கொத்து போன்ற கைத்துப்பாக்கி இது. உலகிலேயே இன்று மிகக் குட்டி துப்பாக்கி இதுதான். இதன் நீளம் மூன்று அங்குலம் (7.62 சென்றிமீட்டர்), அகலம் ஒரு அங்குலம் (2.54 சென்றிமீட்டர்).

18.29 மீட்டர் (20 யார்) தூரத்தில் இருந்து குறிவைத்து சுடலாம். இதன்பெயர் 'பல்கோரியன் கிறிஸ் கண்'. நாம் சின்ன எமன் என்று செல்லமாக பெயர் வைக்கலாம்.

இனி சாவிக்கொத்தைக் கண்டாலும் உஷாராகத்தான் இருக்க வேண்டுமாக்கும்.

# ஈருயிர் ஓருடல்



↑ மானுடப் பிறவிகளிலும் பல விநோதங்கள் அவ்வப்போது தோன்றத்தான் செய்கின்றன. ஒட்டிப் பிறக்கும் இரட்டையர்கள் வெட்டிப் பிரிக்க முடியாத நிலையில் ஆயுள் முழுவதும் வாழ்ந்திருக்கிறார்கள். வளர்ந்து வரும் மருத்துவ விஞ்ஞானம், ஒட்டிப் பிறந்தவர்களை வெட்டிப்பிரித்துத் தனித்தனியே வாழ்க்கை நடத்த உதவி வருகிறது. படத்தில் காணப்படுவது சோவியத் யூனியனில் 1950ம் ஆண்டு பிறந்த மாஷா, டாஷா கிரிவொஷ்லியாபொவி ஆகிய இரட்டையர்கள். இடையோடு ஒட்டியுள்ள இவ்விருவருக்கும் 4 கைகள்- ஆனால் கால்கள் இரண்டு மட்டும்தான்.

பிறக்கும்போது மூன்றாவது ஒரு காலும் தென்பட்டது. ஆனால் காலாவட்டத்தில் அது வளர்ச்சியடையாமல் சூம்பிப்போய்விட்டது. இவ்விரட்டையர்களை வெட்டிப் பிரித்தால் இருவருமே உயிர்வாழ வாய்ப்பிருக்காது என்பதால் மருத்துவர்கள் அப்படியே விட்டுவிட்டனர்.

ஒட்டிப் பிறக்கும் இரட்டையரைப் பொதுவாக 'சயாமீஸ் இரட்டையர்' என்றுதான் கூறுவார்கள். இதற்கு காரணம் சயம் என்று முன்னாளில் அழைக்கப்பட்ட தாய்லாந்தில், 1811ம் ஆண்டு மேமாதம் 11ம் திகதியன்று ஒட்டிப் பிறந்த இரட்டையர்தான். அவர்கள் இருவரும் அமெரிக்கா சென்று வட கரோலினா மாநிலத்தைச் சேர்ந்த (ஒட்டிப் பிறவாத) இரட்டைச் சகோதரிகளை மணந்தனர். இவர்களுக்கு மொத்தம் 21 பிள்ளைகள் பிறந்தனர்.

# சேகரிப்பு

↓ ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மைக்கல் பொனற் பொழுது போக்க சேகரிப்பது விமானங்களை. என்ன நம்ப கஷ்டமாக இருக்கிறதா? எல்லாம் பணம் செய்யும் வேலைதான். ஃபிரான்ஸ் நாட்டின் பிரபல வைன் மது உற்பத்தியாளர் மைக்கல் பொன்ற. வைன் மது கடலாகப் பாயபணம் ஆறாகப் பாய்கிறது. கட்டு கட்டாக கரன்ஸியை வைக்க இடமில்லாததால், விதம் விதமாக விமானம் வாங்கி சேகரித்து உலக சாதனை படைத்துள்ளார். மொத்தம் 100 விமானங்கள் வைத்திருக்கிறார். உலகில் தனி ஒருவர் இத்தனை விமானங்கள் வைத்திருப்பது உலக சாதனையாக பதிவாகியுள்ளது. இந்த நூறில் ஒரு சில தவிர ஏனையவை இன்றும் பறக்கக் கூடிய தரத்தில் உள்ளன. இவற்றில் ஜெட் மட்டும் 70 ரகங்களில் உள்ளனவாம்.



# 4 வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி தனுசியா

23.09.1998

காண்டீபன்-ராஜி தம்பதியினரின் செல்வப் புதல்வி

தனுசியா

தனது 4வது பிறந்தநாளை 23.09.1998 அன்று சுவிசில் தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை குருமன்காடு பிள்ளையார் அருளால் சகல செல்வங்களும் பெற்று நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்தும்,

அப்பம்மா மற்றும் உற்றார் உறவினர்கள்.
50/3, குருமன்காடு, வவுனியா, இலங்கை.





இப்பத்திரிகை கொழும்பு [illegible] பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible], தாவலயில் உள்ள சமமை அச்சகத்தில் ஒக்டோபர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது

படிப்பகம்